
கல்கி
பொங்கல்
மலர்
ALKI 13-1-1957
4 அண

இதன் பரிசுத்தம் ஓட்டில்




பாதுகாக்கப்படுகிறது

துஷார்


விடமின்கொண்ட வனஸ்பதி

இதன் பரிசுத்தம்
சீல் செய்யப்பட்ட
டப்பாவில்
பாதுகாக்கப்படுகிறது.



2 பவுண்டு,
5 பவுண்டு,
10 பவுண்டு
டின்களில்
கிடைக்கிறது

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்., கர்நூல்


1
2
3
4
5
1. 500 காலன்கள் டாங்க் ட்ரெயிலர்
2. டிராக்டர் ட்ரெயிலர்
3. ஸாக் டிரக்
4. தண்ணீர் கைவண்டி
5. (Pan Type) வீல் பாரோ
மேலே குறிப்பிடப்பட்டவை எங்களுடைய சிறந்த இலேசான என்ஜினீயரிங் தயாரிப்புகளில் சில. எங்கள் தயாரிப்புகளில் ஒவ்வொன்றும் முதல்தரமான சேவை யுடையதாயும் வாங்குபவர்களிடையே முதல் இடத்தை விசேஷமாகப் பெற்றும் விளங்குகிறது.
Simpson's
ஸிம்ஸன் & கோ லிட்
மதராஸ் - 2

கல்கி பொங்கல் மலர்

பொருளடக்கம்

மலர் 16 இதழ் 24 | 1957 ஜனவரி 13 | துன்முகி ௵ மார்கழி 30

பால் பொங்கட்டும், பாரதம் செழிக்கட்டும்! (தலையங்கம்)		...	5
சமதர்மப் பொங்கல்!	கார்ட்டூன்	...	6
புதிய கட்சியை வரவேற்கிறோம்!	...	...	7
வண்டி ஓட்டிய தெய்வம்	ராஜாஜி	...	8
மாலவல்லியின் தியாகம்	கி. ரா. கோபாலன்	...	13
ஈழ நாட்டுப் பிரயாணம்	பகீரதன்	...	24
அறிவுக் களஞ்சியம்	வசுமதி ராமசாமி	...	33
விசித்திரக் கூஜா	தி. லை. நடராஜன்	...	35
பானுவின் காதலன்	ராஜம் கிருஷ்ணன்	...	40
நந்தவனம்	சங்கர்	...	48
அம்மன் அருள்	ராஜாஜி	...	50
பொங்கல் வருகுது	லால்குடி கிருஷ்ணமூர்த்தி	...	53
ஊமை ராஜா	துரோணன்	...	54
இனிமேல் கிடையாது!	சுதர்சன்	...	56
இசை விழாவில் தெய்வக் குழல்	சாவி	...	59
நாதஸ்வர வித்வான்கள்	போட்டோ : விச்சு	...	60
கடல் கண்ட கனவு	சோமு	...	65
நாதஸ்வர இசைவாணர்கள்	பாபநாசம் சிவன்	...	73
பொங்கற் பள்ளு!	தமிழழகன்	...	74
மங்கள வாத்திய மன்னர்கள் (போட்டோ)	...	...	75
வித்வத் சபை விழா (போட்டோ)	...	...	79
பரிசு பெற்ற எழுத்தாளர்கள்	...	...	80
'கூடி இருந்து குளிர்ந்து'	அ. சீநிவாசராகவன்	...	83
மீனலோசனி	ஸோமாஸ்	...	91
தெய்வச் சிலைகள்	எஸ். ஜி. ஆர்.	...	99
படித்துப் பாருங்கள்	...	...	104
மாதர்குல மாணிக்கம் (வெள்ளித்திரை)	காந்தன்	...	107
ரகுபதி ராகவ	ராஜாஜி	...	111
மகாத்மாவின் இனிய நண்பர்	எஸ். வி. எஸ்.	...	112
பிறந்தகத்துச் சீர்	எஸ். ரங்கநாயகி	...	116

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 16 | இதழ் 24 | துன்முகி மார்கழி 30உ

தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

பால் பொங்கட்டும், பாரதம் செழிக்கட்டும்!

இந்த இனிய தைப் பொங்கல் பண்டிகையின் போது தமிழர்கள் இல்லந் தோறும் பால் பொங்கட்டும்! பாரத தேசமெங்கும் பயிர் செழிக்கட்டும்! தைப்பொங்கல் திரு நாளில், "வாழ்க, தமிழகம்!" என்றும் "வளர்க, பாரதம்!" என்றும் வாழ்த்திப் 'பொங்கலோ பொங்கல்' என்று கூறுகிறோம்!

இன்பப் பொங்கல் விழாவில் நாம் பொங்கலோ பொங்கல் என்று கூறும் போது இன்னும் சில பிரார்த்தனைகளையும் செய்து கொள்வோமாக!

வரும் விவசாய ஆண்டில் விவசாயிகளின் துன்பம் தீர்ந்து நிலச் சீர்திருத்தக் குளறுபடிகள் நீங்கி, அரிசிப் பஞ்சம் அகன்று, விலைவாசிகள் குறைந்து சுபிட்சம் நிலவ வேண்டுகிறோம்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ் முதுமொழி. முக்கியமாக, தை பிறந்ததும் நெசவாளர்களின் துன்பங்கள் தீருவதற்கு வழி பிறக்க வேண்டும். மில் துணிகளின் போட்டி காரணமாக அவர்கள் படும் அவஸ்தைகள் அகல வேண்டும்.

நெசவும், விவசாயமும் இந்த நாட்டின் இருபெரும் கைத்தொழில்கள். அவை இரண்டும் தமிழகத்தின் இரு கண்கள் போன்றவை.

ஏழை விவசாயி, வருஷம் முழுதும் நிலத்தில் பாடுபட்டு உழைத்துப் பொங்கல் பண்டிகைக்குள்ளாக நெற்கதிர்கள் என்னும் பொற்கதிர்களை அறுவடை செய்து கொண்டு வருகிறான். மனிதனுடன் மாடுகளும் சேர்ந்து விவசாயத்தில் சமமாக ஈடுபட்டு உழைத்துப் பயன் தேடுகின்றன. ஏர் உழுகின்றன. கவலை ஏற்றம் இழுத்து நீர் பாய்ச்சுகின்றன. களத்து மேடுகளில் மனிதனுக்கு உதவியாக உழைக்கின்றன. நிலத்திலிருந்து கிடைக்கும் நெற் கதிர்களை மனிதன் எடுத்துக் கொள்கிறான். மாடு வைக்கோலைப் பங்கு போட்டுக் கொள்கிறது! மனிதன் அரிசியை எடுத்துக் கொண்டால், மாடு தவிட்டைப் பங்கு போட்டுக் கொள்கிறது.

அறுவடை வேலை முடிந்ததும் மனிதன் ஓய்வு எடுத்துப் பொங்கல்பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாடுகிறான். அதைப்போலவே மாட்டுக்கும் பொங்கல் வைத்துத் தனித் திருநாள் நடத்துகிறோம். ஆகா, எப்பேர்ப்பட்ட சோஷலிஸம்!

காந்தி மகான் கனவு கண்ட சர்வோதய லட்சியம் அல்லவா இது?

விவசாயியைப் போலவே, நெசவாளிக் குடும்பத்திலுள்ள ஆணும் பெண்ணும் ஆண்டு முழுதும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு அற்புதமான வண்ணச் சேலைகளும், வெள்ளை வேட்டிகளும் தயாரித்துப் பொங்கல் பண்டிகையின் போது சந்தைகளுக்குக் கொண்டு போகிறார்கள்.

பொங்கல் புதுநாளன்று விவசாயிகள் புத்தாடைகளை விலை கொடுத்து வாங்கி உடுத்தி மகிழ்கிறார்கள். அதன் காரணமாக நெசவாளிகளும் மகிழ்கிறார்கள்.

ஆகவே, தமிழர்கள் பொங்கல் பண்டிகையை உழவுத் தொழிலுக்கும் நெசவுத் தொழிலுக்கும் முக்கியத்துவம் அளித்துக் கொண்டாடும் பெரும் உற்சவமாக மதிப்பதில் வியப்பில்லை அல்லவா?

பொங்கல் பண்டிகைக்கு முன்னால் கிராம மக்கள் தங்கள் வீடுகளிலுள்ள குப்பை கூளங்களை அகற்றி, சுத்தம் செய்து, சுண்ணாம்பு அடித்துப் புத்தொளி கூட்டுவது வழக்கமல்லவா? அதைப்போலவே, நமது மாபெரும் காங்கிரஸ் மகாசபையும் ஆண்டுதோறும் ஓரிடத்தில் மகாநாடு கூடி, பழைய ஆண்டில் சேர்ந்த குப்பை கூளங்களை அகற்றிச் சுத்தம் செய்து சுண்ணாம்பு அடிப்பது வழக்கமாயிருந்து வருகிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அந்நியர் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்ற சங்கல்பத்துடன் முதல் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கி வைத்தவர்களில் ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் என்னும் வீராங்கனையும் ஒருவர். அந்த வீரப் பெண்மணியின் ஜன்மபூமியான இந்தூரில் அறுபத்திரண்டாவது காங்கிரஸ் மகாநாடு கூடியது மிகப் பொருத்தமான காரியமாகும். காங்கிரஸ் அக்ராசனர் திரு தேபர் நீண்ட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தி உலக விவரங்களைக் குறித்தும் உள்நாட்டு நிலைமையைப் பற்றியும் விரிவாக விமரிசனம் செய்து பல உன்னத லட்சியங்களையும் வெளியிட்டுள்ளார்.

நம் நாட்டில், வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் அகன்று, ஏற்றத் தாழ்வுகள் மறைந்து ஒரு பலம் பொருந்திய பொருளாதார அஸ்திவாரம் அமைய வேண்டுமென்று வற்புறுத்தி யுள்ளார்.

கைரகத் தொழில்களும், சிறு சிறு கிராமக் கைத்தொழில்களும், அம்பர் சர்க்கா திட்டமுமே இந்த லட்சியத்தை நிறைவேற்றக் கூடிய திட்டங்கள் என்றும் கூறி யிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக நமது நாட்டில் சமதர்ம சோஷலிஸ சமுதாயம் அமைய வேண்டிய அவசியத்தையும், வன்மையாக வற்புறுத்தி யிருக்கிறார்.

வெறும் உற்பத்தி சாதனங்களையும், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் தேச உடைமையாக்கி விடுவதால் மட்டும் சோஷலிஸம் வந்துவிடாது என்றும் காந்திஜியின் சர்வோதய லட்சியங்களுக்கு இணக்கமான முறையில் சோஷலிஸ சமுதாயம் அமைய வேண்டும் என்றும், அதுதான் இந்தத் தேசத்துக்கு ஏற்றதா யிருக்கும் என்றும் தெளிவாக்கியுள்ளார். காந்திஜியின் சர்வோதய சோஷலிஸத்தை அடைவது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமே சாத்தியமாகும் என்பதையும் விளக்கியுள்ளார்.

சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹோவர், பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், சீனப் பிரதமர் சூ என் லாய் போன்ற பல உலகத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்துள்ள நேருஜி இந்த மகாசபையில் உலக விவகாரம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அரிய கருத்துக்களும் மிகவும் முக்கியமாகும்.

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் நமது தலைவர்கள் பலர் ஒன்று கூடி, காங்கிரஸ்காரர்களுக்கும் தேசப் பொதுமக்களுக்கும் சிறந்த முறையில் வழிகாட்டி யுள்ளார்கள்.

பொங்கல் புது நாளில் நாம் நமது வீட்டை வெள்ளையடித்துச் சுத்தம் செய்து வைத்துக் கொள்வது போலவே தேசத் தலைவர்களின் புத்திமதிகளின்படி நடந்து நமது தேசம் என்னும் மாபெரும் இல்லத்தைச் சுத்தப் படுத்திக் கொள்வோமாக!

---

* தமிழ்நாட்டில் சமதர்ம அடிப்படையில் நடக்கும் ஓர் உற்சாகமான குடும்பத்தின் பொங்கல் கொண்டாட்டக் காட்சியை இந்த இதழ் அட்டையில் நமது ஓவியக் கலைஞர் மணியம் வண்ண ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

சமதர்மப் பொங்கல்!



காந்திஜியின் சர்வோதய லட்சியத்துக்கு இணைந்த சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று தேசத் தலைவர்கள் இந்தூர் காங்கிரஸில் கூறியுள்ளார்கள்.



தேசிய நல்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் சென்ற வாரம் சென்னையில் கூடி, தங்கள் கட்சியின் தேர்தல் கொள்கைகளை வெளியிட்டுள்ளனர். மேற்படி கட்சியின் தலைவர் திரு பி. டி. ராஜன் அவர்களையும் மற்ற அங்கத்தினர்களையும் படத்தில் காணலாம்.

புதிய கட்சியை வரவேற்கிறோம்!

"காங்கிரஸுக்கு ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும்!" என்று ராஜாஜி சொல்லி வந்தார். ராஜாஜியின் யோசனை பயனடைந்து வருகின்றது. காங்கிரஸுக்கு ஒரு நல்ல எதிர்க் கட்சி உருவாகி வருவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். திரு பி. டி. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்டு "தேசிய நல்வாழ்வுச் சங்கம்" (நேஷனல் வெல்பேர் யூனியன்) என்பதாக ஒரு கட்சி தோன்றியிருக்கிறது. இந்தக் கட்சியை நாம்வரவேற்கிறோம்.

இன்றைய நிலையில் காங்கிரஸுக்கு எதிர்ப்பு என்பதே இல்லை. இருக்கும் ஒரு சில கட்சிகளும் காங்கிரஸின் கொள்கைகளையே தங்கள் கொள்கைகளாகக் கூறி வருவதால் செல்வாக்குப் பெற முடியாமல் தவிக்கின்றன.

காங்கிரஸோ, தனக்கிருக்கும் செல்வாக்கின் காரணமாகத் தேசத்திலுள்ள பல தொழில்களையும் தேச உடைமையாக்கி வருகிறது. தனி நபர்கள் லாபகரமாக நடத்திவரும் பல வியாபாரத் துறைகளைத் தேச உடைமை செய்வதால் ஆளும் கட்சி ஏகபோகக் கட்சியாகி விடும். அந்தக் கட்சி எளிதில் நாட்டில் பணம் திரட்ட முடியும். எல்லாத் தேர்தல்களிலும் சுலபமாக வெற்றி பெற்றுக்கொண்டே போக முடியும். இப்படி ஒரே கட்சி எதிர்ப்பில்லாமல் பதவி வகித்தால் அது ஒரு எதேச்சாதிகார ஆட்சியாக மாறிவிடலாமல்லவா? இது அக் கட்சிக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல.

இப்பொழுது தோற்றுவிக்கப்பட்டுள்ள "தேசிய நல்வாழ்வுச் சங்கத்"தினர் நமது பாரத நாட்டின் பழம் பண்பாட்டில் ஊறியவர்கள். இத்தகையவர்கள் எதிர்க் கட்சியிலிருந்தால் ஆளும் கட்சியினரின் தவறுகளைச் சுட்டிக் காட்டலாம். ஆளும் கட்சியினரும் இவ்வளவு அவசரப்பட்டு மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றும் சட்டங்களை இயற்ற மாட்டார்கள். புதிய தேசிய நல்வாழ்வுக் கட்சி, தேசத்திலுள்ள தொழில்களைத் தேசிய மயமாக்குவதை ஆட்சேபிக்கிறது. நிலத்தில் சாகுபடி வேலை செய்யும் ஏழைகளுக்குச் சலுகை காட்ட வேண்டியது அவசியம்தான். ஆனால் அதற்காக நிலச் சுவான்தாரர்களை ஒரே யடியாக அழித்து விடக் கூடிய சட்டத்தை இயற்றுவது எந்த விதத்தில் நியாயம்? இதையும் புதிய கட்சி வன்மையாக வற்புறுத்துகிறது.

நிலத்துக்கு எருப்போட்டு நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் இருக்க முடியும். குத்தகைதாரர்களுக்கு இதில் அக்கறை இருக்க முடியாது. நிலத்தை நல்ல நிலையில் வைத்துக் கொண்டால்தான் விளைச்சல் அதிகரிக்க முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் "விளைவு அதிகரிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு அதற்கு எதிரிடையான காரியங்கள் செய்தால் எப்படி விளைவு பெருகும்? நிலத்தில் யாருக்கு அக்கறையும் சிரத்தையுமுண்டோ அவர்களை அதில் அக்கறை கொள்ளாமல் செய்து நிலங்களைப் பாழ்படுத்துவது தேசத்துக்கு நன்மையில்லை.

கிராமங்களில் நிலக் குத்தகைதாரர்களைவிட அவ்வப்போது வயலுக்கு வந்து கூலி வேலை செய்யும் ஏழை மக்களின் எண்ணிக்கை அதிகம். இவர்களுடைய நலன்களைக் கவனிக்கும் பொருட்டு நிலச்சுவான்தாரர்களின் உரிமைகளை அளவுக்கு மிஞ்சிக் குறைப்பது தவறு. வோட்டுப் பெறுவதற்கு என்ன வழி என்று அதற்கான காரியங்களை மட்டும் செய்துவிட்டு, தர்மத்தையும் நியாயத்தையும் சிறுபான்மையோரின் நலன்களையும் காற்றில் பறக்க விடுவது காங்கிரஸ் போன்ற பெரிய கட்சிகளின் நோக்கமாக இருக்கக் கூடாது.

இவையெல்லாவற்றையும் விட இப் புதுக் கட்சி, தேர்தலில் நல்ல அபேட்சகர்களாக நிறுத்த வேண்டும். 'இவர் நல்லவர், யோக்கியர்' என்று மக்களிடையில் நல்ல பெயர் எடுத்தவர்களையே நிறுத்த வேண்டும். அரசியல் மட்டும் தொழிலாக அமையாமல் மக்கள் யாவரும் அறிந்த ஒரு தொழிலைத் தமது ஜீவனத்துக்காக நடத்திக் கொண்டிருப்பவர்களை அபேட்சகர்களாக நிறுத்த வேண்டும். அப்படிச் செய்தால், அது ஒன்றே போதும். காங்கிரஸுக்கு இது ஒரு நல்ல பாடமாகும்.

காந்திமகான், ராஜாஜி, நேருஜி போன்ற தலைவர்கள் வளர்த்த காங்கிரஸ் கட்சியையே நாம் எல்லோரும் விரும்புகிறோம். அதற்காகவே ஒரு நல்ல எதிர்க் கட்சி அமைய வேண்டும் என்று ராஜாஜி கூறுகிறார். இந்த உண்மை யாவரும் ஒப்புக் கொள்ளக் கூடியது. அதனால் தான் திரு பி. டி. ராஜன் துவக்கியுள்ள புதுக் கட்சியாகிய, தேசிய நல்வாழ்வுச் சங்கத்தை வரவேற்கிறோம்!

வண்டி ஓட்டிய தெய்வம்



மனிதனாக அவதரித்த பகவான் கிருஷ்ணன் அப்போது எண்பது வயது கிழவன். கோல் ஊன்றிக் கொண்டு கடற்கரைக்குச் சென்றான். இது எந்தப் புராணத்திலும் இல்லை. புதுக் கதையேதான்.

வழியில் ஒரு ஜட்கா வண்டிக்காரன் குதிரை இடக்கு செய்து கொண்டிருந்தபடியால் அதைச் சமாளிக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

கண்ணன், "அப்பனே, குதிரையை அடிக்காதே. கடிவாளவாரை அப்படி இழுக்காதே. லகுவாக விட்டுக் குதிரையைத் தட்டிக் கொடு" என்றான்.

வண்டிக்காரன், "கிழவா! நீ சும்மா ஓரமாக நடந்துபோ! குதிரை சமாச்சாரம் உனக்கென்ன தெரியும்?" என்றான்.

"பார்த்தீங்களா இந்தக் கிழவனை? எனக்குக் கற்றுக் கொடுக்கிறான், குதிரை ஓட்ட" என்றான் வண்டிக்காரன்.

வண்டிக்குள் இருந்தவர்கள் 'கொல்' லென்று சிரித்தார்கள்.


''வண்டிக்காரா! அதுயார் உனக்குத் தெரியவில்லையா?'' என்றது ஒரு பெரிய ஈ. குதிரை கழுத்தை விட்டு விட்டு வண்டிக்காரன் காதில் உட்கார்ந்துகொண்டு அது மெதுவாகப் பேசிற்று.

''யாரானால் என்ன!'' என்றான் குதிரையை அடித்துக் கொண்டே. வண்டியில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் இதைச் சொன்னதாக எண்ணி அவன் இப்படிச் சொன்னான்.

''மடையா! அருச்சுனனுக்குத் தேரோட்டியவன், இவனுக்குக் குதிரை விஷயம் தெரியாது என்கிறாயே நீ!'' என்று கூறியது ஈ.

''கிழவன் அருச்சுனன் குதிரையை ஓட்டியிருக்கலாம். இந்தக் குதிரை சமாச்சாரம் வேறு'' என்றான் வண்டிக்காரன். ஈ சிரித்தது. குதிரையும் ஒரு சிரிப்பு சிரித்தது. குதிரைக்குத் தெரிந்து விட்டது, அங்கே கோல் ஊன்றி வந்தது பகவான் கண்ணன் என்று. அதன் முரட்டுத்தனம் மறைந்து போயிற்று. எழுந்துமெதுவாக வண்டியை இழுத்துச் செல்ல ஆரம்பித்து விட்டது.

இது தன்னுடைய சாட்டையின் சக்தி என்று வண்டிக்காரன் எண்ணினான். கண்ணனுடைய பிரபாவம் அவனுக்கு எப்படித் தெரியும், பாவம்? குதிரைக்கும் ஈக்கும் பசுக்களுக்கும் கன்றுகளுக்கு மல்லவோ கண்ணன் தரிசனம் தருகிறான். தெய்வமே கதி என்று கவலை ஏதும் இல்லாமல் வாழ்க்கை நடத்தும் பறவைகளுக்கும் பசுக்களுக்கும், ஆயிரம் ஏற்பாடுகள் செய்து கொண்டு மிக முன் ஜாக்கிரதையாக உலக வாழ்க்கை நடத்தும் நமக்கும் உள்ள வித்தியாசம் இதுவே.






நமது கடன் நாட்டுக்குப்



பஸ் போக்குவரத்தின் மூலமாகப் பொதுமக்களுக்கு ஈடு இணையற்ற சுகமும் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் லட்சியம். நமது கடன் நாட்டுக்குப் பணிசெய்ய வேண்டும் என்பதுதான்! அந்த ஆர்வத்தினால் ஏற்பட்ட விளைவே மேலேயுள்ள ஆறு பிரயாண பஸ்களும்!

இந்த உல்லாசப் பிரயாண பஸ்கள் ஒவ்வொன்றின் விலையும் எழுபதினாயிரம் ரூபாய். இந்தப் பஸ்களை பொதுமக்களின் உபயோகத்துக்குக் கொடுப்பதில் நாங்கள் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியு மடைகிறோம்.


நமது நாட்டின் திருக்கோயில்களையும், கலைக்கூடங்களையும், சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டை - கொத்தளங்களையும், இயற்கைக் காட்சிகளையும் நேரில் பார்த்து அனுபவிப்பதே ஒரு தனி ஆனந்தம். ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு கலாசாலை! இந்தப் பழம்பெருமைகளைப் பார்த்து மகிழ்வதுடன் சுதந்திர பாரதத்தில் நமது சர்க்கார் செய்துவரும் சாதனைகளையும் நாம் ஒவ்வொருவரும் போய்ப் பார்க்க வேண்டாமா?



"மக்கள் அந்த நாளில் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் புனித யாத்திரை செய்தனர். அதுபோலவே இன்று புனித யாத்திரை செய்ய வேண்டிய புண்ணிய க்ஷேத்திரங்கள், மக்கள் நல்வாழ்வுக்கும் நாட்டின் பொருளாதார உயர்வுக்கும் வழிவகுத்துக் கொடுக்கும் அருவி மின்சாரக் கூடங்களும், அணைக்கட்டுகளும், கனிவளம் தரும் சுரங்கங்களும்தான்!" என்றார் பாரதத்தின் முதன் மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள்.

இந்த மாதிரி புனித ஸ்தலங்களுக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் போய்வருவதற்குச் சௌகரியமாக இருப்பதற்காகத்தான் இந்தப் புதுமையான யாத்திரை பஸ்களை வரவமைத்திருக்கிறோம்.

TVS சதரன் ரோட்வேஸ்






பணி செய்துகிடப்பதே

இதுபோன்ற பஸ்களை இந்தியாவில் இதுவரை யாரும் பார்த்திருக்க முடியாது. நாற்பத்தோரு பேர்கள் நலுங்காமல் பிரயாணம் செய்யலாம். ஜோரான மெத்தை தைத்த சுகமான ஆசனங்கள். ரேடியோ, கடிகாரம் போன்ற அவசியமான சாதனங்கள். இவைபோன்று இன்னும் பல வசதிகள் கொண்டது இந்த இனிய பிரயாண பஸ். விமானத்தில் பறப்பதுபோல ஆடாமல் அசையாமல், உடல் குலுங்காமல் உல்லாசப் பிரயாணம் செய்ய லாம். உட்கார்ந்த இடத்திலிருந்தே நான்கு புறங்களையும் பார்த்து அனு பவித்துக்கொண்டே போகலாம். பலநூறு மைல்கள் பிரயாணம் செய் தாலும் பிரயாணம் செய்த களைப்போ அலுப்போ தோன்றாது. அதற்கு ஏற்றவண்ணம் அருமையான 'ஸ்பிரிங்' வசதிகளுடன் கூடியது இந்த பஸ்.

இரவு நேரங்களில் இந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது நாம் பஸ்ஸில்தான் போகிறோமா அல்லது உல்லாச மாளிகையில் உட்கார்ந் திருக்கிறோமா என்ற பிரமையை உண்டாக்கும். அவ்வளவு அலங்காரமான தோற்றமும் 'பளிச்'சென்று ஒளி வீசும் விளக்குகளும் கொண்டது. முகம் கழுவுவதற்கு வசதியான கோப்பையும் நெருப்பணைக்கும் கருவியும் முதல் சிகிச்சைக்கான மருந்துப்பெட்டியும் பொருத்தப்பட்டவை. மழை,வெய்யில் இரண்டுக்கும் நல்ல பாதுகாப்பு அளிக்கும் அமைப்புகள். பிரயாணத்துக்கு எடுத்துச் செல்லும் சாமான்களைப் பத்திரமாக வைத்துக் கொள்வதற்கு வேண்டிய பத்தோபஸ்தான அறை. இப்படி இன்னும் எத்தனையோ நவீன வசதிகள் கொண்டது இந்த நவநாகரிக பிரயாண பஸ்.


இந்த உல்லாசப் பிரயாண பஸ்களில் மக்கள் பிரயாணம் செய்து, பார்த்துப் பயன்பெற வேண்டிய கலைச் செல்வங்களையும், பாரதத்தின் வளர்ச்சித் திட்டங்களையும் காண வேண்டும். அது காரணமாக அவர்கள் ஊக்கமும், உற்சாகமும் கொண்டு கனத்த செல்வத்துடன் வாழ வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.



பிரைவேட் லி-ட்., மதுரை



Royal Enfield



ராயல் என்பீல்ட்

சைக்கிள்கள்

வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் சைக்கிள் முதலிய சுமார் ஐநூற்றுக்கு மேற்பட்ட பொருள்களின் இறக்குமதியை பாரத சர்க்கார் வெகுவாகக் குறைத்திருக்கிறார்கள். சர்க்காரின் இந்தக் கட்டுப்பாடு காரணமாக இறக்குமதிப் பொருள்களின் விலைகள் ஏறி விடலாமோ ; இந்தச் சந்தர்ப்பத்தை வர்த்தக சமூகத்தினர் தங்கள் சொந்த லாபத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு விடுவார்களோ என்று பொது மக்களிடையே சந்தேகமும் அச்சமும் ஏற்படக் கூடும். ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் பொது மக்களுக்கும் நம் வாடிக்கைக் காரர்களுக்கும் நாங்கள் இந்த வாக்குறுதியை அளிக்கிறோம்.

சர்க்காரின் இறக்குமதிக் கொள்கை எப்படி இருந்த போதிலும் நாங்கள் இறக்குமதி செய்யும் ராயல் என்பீல்ட் சைக்கிள்களை இது வரையில் விற்றுவந்த நியாய விலைக்கே இனிமேலும் விற்று வருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பொங்கல் புதுநாளன்று இச் செய்தியை எங்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்கும் பொங்குக மங்களம் !

ராயல் சைக்கிள் & மோட்டார் கம்பெனி

13/14 பிராட்வே, : : மதராஸ் – 1

தபால் பெட்டி நெ. 219 போன் 3949 (2 லைன்ஸ்)

கிளை ஆபீஸ் :

தி பயோனியர் சைக்கிள் ஹவுஸ்

47/49. மேலக் கோபுர வீதி, மதுரை

போன் : 303. : : தபால் பெட்டி நெ. 22.


மாலவல்லியின்
தியாகம்
மணியம்
கி.ரா.கோபாலன்

முன்னுரை

நாடகத்துக்கு முன்னால் சூத்திர தாரன் வருவதுபோல் நமக்கு ஒரு மனிதர் : ஆம்! ஒரு சோதிடர். அவர் ஒரு சன்னியாசி என்ற தோரணையில் ஆடை அணிந்து இருக்கா விட்டாலும் அவர் வாழ்க்கை நிலை ஒரு சன்னியாசியின் வாழ்க்கை நிலையையொட்டித் தான் இருந்தது. அந்த மனிதருக்குத் தெரியாத கலைகள் எதுவும் இல்லை. அந்த மனிதர் அறிந்து கொள்ளாத மொழி எதுவும் இல்லை.

அந்தத் தனி மனிதரை தரிசிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் குடந்தை நாகேசுவர சுவாமி கோயில் கோபுர வாயிலில் உள்ள மேடையில் எப்பொழுதும் தரிசிக்கலாம். கருகருவென்று வளர்ந்திருக்கும் தாடி, தோளில் திரி திரியாகப் புரண்டுவிழும் கேசம், கூர்மையான விழிகள், நெற்றியில் நீர்க்கமாகப் பிரகாசிக்கும் குங்குமப் பொட்டு, வெற்றிலைக் காவி படிந்த தடித்த உதடு, உடம்பை மறைத்திருக்கும் பூக்கரை போட்ட கதர்சால்வை. விசுவாமித்திரர் தவ நிலையில் அமர்ந்ததைப்போல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் நிலை நமக்கு அவரிடம் ஒரு மதிப்பைத்தான் உண்டாக்கும்.

ஞாலவல்லியின் தியாகம்

கி. ரா. கோபாலன்

அன்று வெள்ளிக்கிழமை. அம்பிகையைத் தரிசித்துவிட்டுவரலாம் என்று தான் நான் நாகேசுவரசுவாமி கோயிலுக்குப் போனேன். ஆனால் அந்தச் சந்நியாசியிடம் சிக்கிக் கொண்டுவிடுவேன் என்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவில்லை.

இருவரும் கோயிலுக்குள் சென்றோம். "சுவாமி தரிசனம் இருக்கட்டும். இந்தக் கோயிலைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்றார்.

"உங்களுக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லுங்களேன்!" என்றேன்.

"இது ஏற்கெனவே ஒரு பௌத்த விகாரமாய் இருந்திருக்கலாம் என்று சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஆராய்ச்சித் திறனோடு பார்த்தால் அதையும் நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. உள் பிராகாரத்தைப் பார்த்தால் அது நன்றாகத் தெரியும். மூல இருகத்தைச் சுற்றியுள்ள சிலைகளைப் பார்த்தால் உனக்கு விளங்கலாம். நின்ற திருக்கோலத்தில் அங்கு ஒரு புத்த பெருமானின் சிலையும் இருக்கிறது. நீ அஜந்தா, அமராவதி இங்கெல்லாம் போயிருக்கிறாயா?"

"போனதில்லை."

"இந்தக் கோயிலில் அமைந்த சிற்பங்கள் எல்லாம் அந்தப் பாணியில் அமைந்தவை" என்று சொல்லிக் கொண்டே வரும்போது நாங்கள் நடராஜப் பெருமானுடைய சன்னிதானத்துக்கு எதிரில் வந்த போது அவர் சட்டென்று என் கையைப் பிடித்து நிறுத்தி, "இதோ பார். அந்தச் சக்கரத்தை நீ பார்த்திருக்கிறாயா?" என்று அங்குள்ள சக்கரம் ஒன்றைச் சுட்டிக்காட்டினார்.

நாகேசுவரசுவாமி கோயிலில் நடராஜப் பெருமானின் சன்னிதி மிக விசேஷம், எங்கும் காணாத வண்ணம் அதன் அமைப்பே விசேஷமாக இருக்கும். அந்த மண்டபம் ரதம் போன்றது என்பதற்கு அறிகுறியாக இருபுறங்களிலும் இரு கருங்கல் சக்கரங்கள் நிறுத்தப்பட்டிருக்கும். அந்தச் சக்கரங்களுக்கு முன்னால் பக்கத்துக்கு ஒன்றாக இரு புறங்களிலும் குதிரைகள் பாயும் வண்ணம் அமைக்கப் பட்டிருக்கும். குதிரைகளுக்கு முன்னால் நான்கு பெரிய யானைகள். அவர் என்னை அச் சக்கரத்துக்குச் சமீபமாக அழைத்துப் போய் அந்தச் சக்கரத்தின் கடைக்கால்கள் போல் சுற்றிலும் செதுக்கப்பட்டிருக்கும் உருவத்தையும் அதன் பக்கத்தில் தாமரை மொட்டு போல் செதுக்கப்பட்டிருக்கும் பொருளையும் காட்டி, "இது சூரியனின் உருவம்தான். சூரியனுக்குப் பக்கத்தில் இருக்கும் பொருள், காலம் காட்டும் கருவி. மேலே தாமரை மொட்டு போல இருப்பதற்கு நடுவே வட்டமாகச் செதுக்கப்பட்டிருக்கும் குழியில் நிழல் விழுவதை அனுசரித்து நேரத்தைத் தெரிந்து கொள்வார்கள். அதனால் தான் அது சூரியனுக்குப் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. சூரியனையும்

காலக் கருவியையும் வைத்து அமைக்கப் பட்ட இதுதான் காலச் சக்கரம். இரவு பகல் என்று இரு பக்கமும், இரு சக்கரங் கள் பொருத்தப் பட்டிருக்கும் இந்த ரதத்தின் பெயர் காலத்தேர். இப் பொழுது புரிகிறதா? போகட்டும் இச் சக்கரத்தில் இருக்கும் சூரியனின் பிம் பங்களையும், காலங் காட்டும் கருவிகளை



முதல் பாகம் • காலச் சக்கரம்

யும் எவ்வளவு இருக்கின்றன என்று எண்ணிப் பார்'' என்று எனக்கு உத் தரவு போடுகிறவர் போல் அன்பு நிறைந்த குரலில் சொல்லி விட்டுக் காலச் சக்கரத்தைப் பார்த்தார்.

நான் அவைகளை எண்ணிப் பார்த்து விட்டு, ''பன்னிரண்டு சூரியனுடைய உருவங்களும், பன்னிரண்டு காலங் காட்டும் கருவிகளும் இருக்கின்றன'' என்று கூறினேன்.

''இது எதைக் குறிக்கிறது தெரியுமா? சூரியனின் சஞ்சார கதியைச் சொல்லு கிறது. அவன் சித்திரை முதல் ஒவ் வொரு மாதத்திலும் மேஷம் முதல் மீனம் வரையில் உள்ள பன்னிரண்டு ராசிகளை அடைகிறான். காலச் சக்கரத் தின் சுழற்சியில் மேல்தடம் கீழ் நோக்கி வரும்போது அவனுடைய சீதோஷ்ண பலம் குறையும். அது மேல் நோக்கிச் செல்லும்போது அதன் சீதோஷ்ண நிலை உயரும். இதைத்தான் நமது சோதிடர்கள் சித்திரை மாதத் தில் சூரியன் மேஷ ராசியை அடையும் போது உச்சனாகி இருக்கிறான் என்றும்


ஐப்பசி மாதத்தில் துலா ராசியில் பிரவேசிக்கும் போது நீசனாகி விட்டான் என்றும் சொல்லுவார்கள். இந்தச் சக்கரத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் பன்னிரண்டு காலம் காட்டும் கருவியும் ஒரு வருடத்தில் அவன் ஒவ்வொரு மாதத்திலும், ஒவ்வொரு ராசியிலும் சஞ்சரித்துச் சுற்றி வருவதைக் காட்டுகிறது. சூரியன்தான் காலத்தேரை ஓட்டுகிறான் என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் சர்வேசுவரன் தான் சூரியனைத் தன் காலத் தேரின் சக்கரமாக அமைத்து அதை நடத்துகிறான் என்பது நமது உயர்ந்த கொள்கை. இதோ பார், இந்தக் காலத் தேருக்கு இரண்டு சக்கரங்களையும் வைத்தான். இரண்டு குதிரைகளையும் பூட்டினான். முன்னால் நான்கு சக்கரங்கள் போவது போல் நான்கு யானைகளையும் வைத்தான். ஆனால் இக்காலத் தேரை ஓட்டுவதற்கு ஒரு சாரதியை வைத்தானா? இல்லை, எம்பெருமானின் திருக்கூத்தில்தான் இக்காலத்தேர் அசைந்து நகர்ந்து கொண்டிருக்கிறது. அவனுடைய ஆட்டத்தில் சிறிது லயம் மாறினால் காலத்தேர் சிறிது திசை மாறும். மழை, புயல், வெள்ளம், பூகம்பம்; நீ இத்தகைய அபாயங்களெல்லாம் அவன் ஒரு லயத்தில் நின்று ஆடும்போது ஏற்படும் சஞ்சார பேதங்கள். அவன் கூத்தில் ஆனந்தக் கூத்தும் உண்டு, ஆவேசக் கூத்தும் உண்டு. அவனுடைய ஆவேசக் கூத்து உச்சநிலையை அடைந்தால் இந்தப் பூமியையே கூட விழுங்கினாலும் விழுங்கிவிடலாம்'' என்றார் உணர்ச்சிப் பெருக்கோடு.

அவர் மறுபடியும் உணர்ச்சிப் பெருக்கோடு, ''இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னால், இந்தத் தமிழ் நாடு இருந்த நிலையை எண்ணிப்பார்ப்போம். சரித்திர ஆதாரங்கள், மத கிரந்தங்களின் ஆதாரங்கள், சிலாசாசன ஆதாரங்கள், சிற்ப சித்திர ஆதாரங்கள், புதை பொருள் ஆராய்ச்சிகள் எல்லாம் இருக்கின்றன. காலச் சக்கரத்தின் வேகம் எவ்வளவை அழித்திருக்கிறது, எவ்வளவை மாற்றி இருக்கிறது? இந்தத் தமிழ் நாட்டில், புத்த சமயமும் ஜைன சமயமும் எப்படி வேரூன்றித் தழைத்து நின்றன? மனக்கண்ணால் நினைத்துப் பார்த்தால் பெரிய சாகரத்தையே அழித்துவிட்டது போல் தோன்றும்'' என்று கூறி என் பதிலை எதிர்பார்த்தார்.

அவரே பதில் சொல்லட்டும் என்று மௌனமாக உட்கார்ந்திருந்தேன்.

''இதையெல்லாம் அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட முடியாது. இந்தக் குறிப்புகளைப் பார்த்தால்தான் உனக்குத் தெரியும்'' என்று சொல்லித் தான் மறைத்துவைத்திருந்த புத்தகம் ஒன்றை என்னிடம் கொடுத்து விட்டு ''நாளையிலிருந்து நீ என்னைப் பார்க்க முடியாது. நான் காசி யாத்திரை போகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டார்.

நான் புத்தகத்தைப் புரட்டினேன். கோவையில்லாமல் பல விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. சிதறிக் கிடந்து பிரகாசிக்கும் அந்த நவரத்தின மணிகளைக் கோத்து மாலையாக்க நினைத்தேன்.



முதல் அத்தியாயம்

சுகமும் சொர்க்கமும்

காலச் சக்கரம் முன்னோக்கிச் சுழலுமே தவிர, பின்னோக்கிச் சுழலுவதில்லை. அது சுற்றி வரும் வேகத்தில் எவ்வளவோ அழிகின்றன. எவ்வளவோ உற்பத்தியாகின்றன. சிறிது நாட்களுக்கு முன் புறக்கண் எதிரே நின்றவைகளையெல்லாம் இன்று நினைத்துப் பார்க்க முடிகிறது. பல ஆண்டுகளுக்கு முன் நாம் பார்த்து அறியாதவைகளைக் கூட நாம் ஓரளவு சிந்தித்துத் தெரிந்து கொள்ளும் வண்ணம் அழிந்தும் அழியாமலும் இருக்கும் காலச் சக்கரத்தின் அடிச்சுவடுகள் நமக்குச் சிறிது உதவி புரிகின்றன. சிந்தித்துப் பார்த்தால் அவை கனவு போலிருக்கின்றன. நேற்றும் மழை பெய்தது. இன்றும் மழை பெய்கிறது. ஆனால் நேற்று பெய்த மழை இல்லை இது. இது வேறு மழை; புது மழை. சென்ற வருடம் புயல் அடித்தது. இன்றும் அடிக்கிறது. ஆனால் இது சென்ற வருடம் அடித்த புயல் இல்லை. அதைப் போன்ற புயலாக இருக்கலாம். ஆனால் புதிது. காலச் சக்கரத்தின் வழிச்சுவட்டோடு தெரிந்து அது ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் எங்கெங்கெல்லாம் உருண்டு வந்ததோ அங்கெல்லாம் செல்வோம். 'இதுவும் அழிந்து விடுமா' என்று நினைக்கக் கூடிய நிலையிலிருந்த சோழ சாம்ராஜ்யத்தைப் பார்ப்பதற்காகக் காலச் சக்கரம் வரும் பாதையில் எதிர்நோக்கிச் செல்வோம். எவ்வளவோ கண்களில் படும். எவ்வளவோ சிந்தனையில் இடம் பெறும். எவ்வளவையோ நிர்மூலமாக்கிக் கொண்டு வந்த காலச் சக்கரம் சோழ சாம்ராஜ்யத்தின் பெருமையையும் அழுந்திய தன் சுவட்டின் பக்கத்திலேயே ஒதுக்கி இருக்கிறது. அது நமக்குப் போதாதா? இடிந்து வீழ்ந்திருக்கும் ஒரு மாளிகையைப் பார்த்தால் அது எப்படிப்பட்ட உன்னத நிலையில் இருந்திருக்கும் என்று நமக்கு விளங்காதா?

பூம்புகார் என்னும் பொன் நகரைச் சிருஷ்டித்து, புவனம் மெச்ச அரசாண்டான் கரிகாலன். அவனுக்குப் பின் அவன் பரம்பரையில் மாட்சிமையுடன் ஆண்ட மன்னர்கள் எத்தனையோ பேர். ஆனால் எண்ணெய் வற்றிக் கொண்டே வரும் தீபம் போல் மெதுவாக அமிழ்ந்து விட்டது அந்த வம்சம். சோழ மண்டலத்திலுள்ளோர் இருளில் நின்று பெருமைகளையும் உரிமைகளையும் கதையாகப் பேசிக் கொள்ளும் காலமாகி விட்டது அந்தக் காலம். காஞ்சியில் பல்லவரின்



நந்திக் கொடி படபடத்துப் பறந்தது. மதுரையில் பாண்டியர்களின் மீன் கொடி விண்ணைத் தொட்டுத் தன்னிக ரில்லையெனப் பறந்தது. சாம்ராஜ்ய ஆசைகள் யாரை விட்டது?

போர்முரசின் முழக்கம் இடைவிடாது கேட்டுக் கொண்டுதான் இருக்கும். வடக்கிலிருந்து வரும் பல்லவர்களும், தெற்கிலிருந்து வரும் பாண்டியர்களும் வந்து மோதிப் போர் புரியும் யுத்தகள மாகத்தான் இருந்தது பெருமை மிக்க சோழ நாடு. ஆம்! குருக்ஷேத்திரமாகத் தான் விளங்கியது அவ்வள நாடு.

பராக்கிரமம் பொருந்திய ஒரு அரசர் கீழ் இல்லாமல் பாண்டியர்க ளுக்கும் பல்லவர்களுக்கும் அடிமைப் பட்டுக் கிடக்கும் பல சிற்றரசர் களின் கட்டுப்பாடற்ற நீதி முறை தவறிய ஆட்சிக்குள் அகப்பட்டுத் தத்தளித்தது. ஒரு காலத்தில் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கிய சோழ நாடு, ஆட்சி முறையில் போராட்டமும் குழப்பமும் மிகுந்திருந்தது. பௌத் தர்கள், ஜைனர்கள், சைவர்கள், நாஸ்திகர்கள், ஆஜீவகர்கள், வேத வாதிகள், பூதவாதிகள், நரபலி கொடுத்துப் பராசக்தியின் அருளைப் பெற நினைக்கும் கபாலிகர்கள்-இப்படிப் பல வகை. ஒரு புறம் அரசியல் போராட்டம்-மறுபுறம் மதப் போராட் டம்! இந்நிலையில் மக்களின் மனோநிலை யைப் பற்றி என்ன சொல்வது? ஒவ் வொரு மனிதனின் அகமும் புறமும் நிலைகொள்ளா வேதனையில்தான் உழன் றது! பல மன்னர்களும் முடி தாழ்த்தி வணங்கப் பார்முழுதும் ஆண்ட கரிகால னின் பெருமை தேய்ந்த கனவாக வும் பழங்கதையாகவும் ஆகிவிட்டன. மறுபடியும் அத்தகைய பெருமை என்று கிடைக்கும் என்று சோழநாட்டு மக்கள் ஏங்கி நிற்கும் காலமாகி விட்டது அது.

சாம்ராஜ்யம் சிதைந்து விட்டது. ஆனால் அழிந்த சாம்ராஜ்யத்தின் மகோன்னத நிலையை விளக்கும் கலைச் சின்னமாகத் திகழ்ந்தது பூம்புகார் நகரம். அமர உலகுக்குச் சென்று வந்து அதைவிடச் சிறப்பாக ஒரு நகரைச் சிருஷ்டித்தான் கரிகாலன் என்றால் அது வெறும் புராணக் கதை அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் திகழ்ந்தது அப் பொன் நகரம். ஆம். அப்பொழு தும் அவ்வளவு அழிவோடு விளங்கியது அந் நகரம். அழிந்த பேரரசை மறுபடி யும் நிலை நிறுத்த முடியும் என்ற திடத் தையும் மன எழுச்சியையும் தூண்டி விடும் வண்ணம் அப் பொன் நகரம் காட்சி யளித்து நின்றது. வம்ச பாரம் பர்ய வீர உணர்ச்சியைக் கிளறி நினைவு படுத்தும் அடையாளச் சின்னமாகவே அது திகழ்ந்தது. அந்த வீர உணர்ச்சித் தணல் தாழ்மைப்பட்டுக் கிடக்கும் மனத்தில் எழும்பி உரிமைப் போராட் டத் துடிப்பை என்று எழுப்பியதோ அன்றையச் சூழ்நிலையில்தான் இந்தக் கதையும் ஆரம்பமாகிறது.

நாட்டிலேயே சிறந்த துறைமுகப்பட் டினமாகவும், வியாபார ஸ்தலமாகவும் திகழ்ந்த புகார் எனும் காவிரிப்பூம் பட்டினம் செல்வம் நிறைந்த உலகப் பெரு மக்களின் இடமாகத் திகழ்ந்த தால் பல்லவ மன்னனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும் சிறப்பில் குன்றாது இருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் துறைமுகமாகக் கடல் மல்லையும், மயிலை யும் அன்று பெருமையோடு திகழ்ந் தாலும் பூம்புகார் மதிப்பும் பெருமை யும் குறையாது இருந்தது. வணிகப் பெரு மக்களின் வாழ்விடமாகத் திகழ்ந்த அந் நகரின் சிறப்புக்கு என்ன குறை இருக்கப் போகிறது? என்றும் திரு விழாப் போல் திகழும் அம் மாநகருக்குத் தினம் தினமும் பல தேசத்து வணிகர் களையும் மன்னர்களையும் விருந்தினராக அழைத்து வரும் பெருத்த மரக்கலங் கள் கடலில் ஆனந்தத்தோடு வருவது அந்நகரைக் கண்ட பெருமையில் அதி வேகமாக வருவது போல்தான் இருக் கும். அந்த நகரில் பல நாள் விருந்தின ராக இருந்த மன்னர்களையும், வணிகப் பெரு மக்களையும் அவரவர்கள் நாடு களுக்கு அழைத்துச் செல்லும் மரக் கலங்கள் அந்த நகரை விட்டுப் பிரிய மனம் இல்லாத மன்னர்களின் உள்ளம் போல் தயங்கித் தயங்கித் துறைமுகத்தி லிருந்து மெதுவாக நகரும். கடற்கரையி லிருந்து வெகு தூரம் ஒளிகாட்டும் கலங் கரைவிளக்கம் உலகில் எட்டுத் திசைகளி லும் உள்ள மக்களை யெல்லாம் இது தான் செல்வம் கொழிக்கும் பூம்புகார், இதுதான் அமர உலகையும் அழகில் வென்ற காவிரிப்பூம்பட்டினம் என்று சொல்லி அழைப்பது போல் இருந்தது.


அந்த அழகான நகரம் இரு பகுதிக ளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுதான் அந் நகரை அமைத்தவனுடைய சிறப்பை இன்றும் நினைவுபடுத்துவதாக இருந் தது. கடற்கரையை எட்டித் திகழ்வது தான் மருவூர்ப்பாக்கம். அதை ஒட்டிச் சிறிது கிழக்கே மாடமாளிகை, கூட கோபுரங்களோடும் மகோன்னதமாகத் திகழ்வதுதான் பட்டினப்பாக்கம். பட் டினம் என்பது கண்ணையும் கருத்தையும் கவரும் பெரிய மாளிகைகள், அரண் மனைகள், ஆலயங்கள், பூஞ்சோலைக ளோடு திகழ்ந்ததென்றால் மருவூர்ப்

இது ஒரு குடும்பம்



தேசத்தின் லட்சோப லட்சம் குடும்பங்களின் பொருளாதார சுபிட்சத்தைப் பெருக்குவதில் எங்களாலான தொண்டு செய்ய முடிந்ததை நினைத்துப் பெருமிதம் அடைகிறோம். ஆயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு நிரந்தரமான வேலை அளித்திருக்கிறோம். எங்கள் நேர்த்தியான கோ-ஆப்டெக்ஸ் துணிகளை குறைந்த வருமானம் உள்ளவர்களும் அதிக வருமானம் உள்ளவர்களும் ஆண்களும் பெண்களும் வாங்கக் கூடிய வகையில் நியாயமாகவும் மலிவாகவும் விற்று வருகிறோம்.


Co-optex FABRICS



சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
பாலசுந்தரம் பில்டிங்ஸ், பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8

யாக்கமும் அதன் பெருமைக்குக் குறை யாது பல நாட்டு வர்த்தகர்களும் அரச குலத்தினரும் நடமாடும் உன்னத வியா பாரஸ்தலமாகக் காட்சியளிக்கிறது.

கடற்கரைத் துறைமுகத்தை ஒட்டி னாற்போல் இருக்கும் மருவூர்ப்பாக்கத் தில் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள வியாபாரிகளும், பிரபுக்களும் அரச குலத்தினரும் தங்குவதற்கு வசதியாய்ச் சிறுசிறு மாளிகைகளும், அதை யொட் டிப் பகுதி பகுதியாய்ப் பிரிக்கப்பட்ட வியாபார ஸ்தலங்களும் காட்சி யளித் தன. பலதேசங்களிலிருந்து வந்திருக்கும் வியாபாரிகள் மதம், ஆசாரம், மொழி, உடை இவைகளில் மாறுபட்டவர்க ளாய் இருந்தாலும் ஒருவரோடு ஒருவர் சிநேக மனப்பான்மையுடன் மகிழ்ச்சி யோடு பேசிப் பழகி உலகில் வித்தி யாசம் இல்லாத மனப்பான்மையோடு கூடிக் குலாவுவதில் உள்ள மன நிம்மதி யையும் நன்மையையும் எடுத்துக்காட்டு வதுபோலிருந்தது. யவனர், சிங்களர், சீனர், கேரளர், மராட்டியர், வங்காளிகள் முதலிய வணிக மரபினர் தாங்கள் கொண்டு வந்திருக் கும் பொருள்களை நல்ல லாபத் தோடு மற்றவர்களிடம் விற்க வேண்டும் என்ற கருத்தோடு மிகவும் நட்புரிமை கொண்டு உபசரித்துப் பெருமை கொள் ளப்பேசி உறவாடுவதுபார்க்க ஆனந்தமாகத்தான் இருந்தது. வியாபாரம் செய்யும் பொருள் களுக்குத் தக்கவண்ணம் பகுதி பகுதியாகப் பிரிக்கப் பட்டிருக் கும் அழகான கடைகள். அக் கடைகளை ஒட்டினாற் போல மக்கள் நடப்பதற்குரிய அழகான தாழ் வாரங்கள். ஒவ்வொருகடையிலும் இந்த வர்த்தகர்கள் அந்த நாட்டிலிருந்து வந் தவர்கள் என்பதை அறிவிப்பதற்கு உரிய சின்னமாகத் துலங்கும் பலதேசக் கொடிகள் பறப்பதும் ஓர் அழகாகத் தான் இருந்தது. அக் கொடிகளோடு ஒவ்வொரு வியாபாரப் பகுதியிலும் எத்தகைய பொருள்கள் விற்கப்படும் என்பதற்குச் சின்னமாக விளங்கும் கொடிகளும் பறந்தன.



மாலை வேளை: வியாபாரம் விறுவிறுப் பாக நடக்கும் நேரம். மருவூர்ப் பாக்கத் தில் எல்லா வியாபார ஸ்தலங்களிலும் என்றும் போலில்லாது அன்று சிறிது கூட்டம் அதிகம். நாளை மறுதினம் வைசாக பௌர்ணமி, இந்திர விழா கொண்டாட்டம். சோழ மன்னர் களின் காலத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட அவ் விழாவை அப்பொழுதும் காவிரிப்பூம் பட்டினத்து மக்கள் வெகு சிறப்பாகக் கொண் டாடி வந்தனர். கரிகாலன், கோச்செங் கணன், நலங்கிள்ளி முதலிய சோழப் பேரரசர்களின் பெருமையைப் பேசிப் புகழவும் பாடிப் பரவவும் ஏற்ற திரு நாளாகவும் இந்திர விழா இருந்தது. முன்னிலும் அதற்குரிய பெருமையை யும் சிறப்பையும் அதிகமாக்கியது.

பல வாலிபர்கள் அரம்பையர் போல் திகழும் தங்கள் இளம் காதலிகளுக்குப் பிரியமான ஆடை ஆபரணங்களை வாங் கிக் கொடுப்பதற்காக அவர்களையும் தங்களோடு அழைத்துக் கொண்டு வந் திருப்பது மனோரம்யமாக இருந்தது. முத்து, ரத்தின ஆபரணங்கள் விற்கும் கடைகளிலும், பட்டாடைகள் விற்கும் கடைகளிலும், வாசனைத் திரவியங்கள் விற்கும் கடைகளிலும், புஷ்பக் கடை களிலும் நின்று பேரம் பேசித் தங்களுக்குப் பிடித்தமானவை களை வாங்கும் இளந் தம்பதி களின் வசீகர அழகு மனத்தை மயக்க வைக்கும் காட்சியாக இருந்தது. ஒரு தான்ய வியா பாரி பரபரப்போடு தன்னோடு வியாபார விஷயமாகப் பேசிக் கொண் டிருக்கும் மற்றொரு வியாபாரியிடம் கடைவீதித் தாழ்வாரத்தில் தனிமையாகப் போய்க்கொண் டிருக்கும் ஒரு வாலிபனைச் சுட்டிக் காட்டி ஏதோ சொன்னான். மற்றவன் அவ்வாலிபனை ஆச்சரியத் தோடு கூர்ந்து பார்த்துவிட்டு ஏதோ சொன்னான். அந்த வாலிபன் யார்? அவனைச் சுட்டிக் காட்டி அவர்கள் என்ன பேசிக் கொண் டார்கள்? ஒரு வேளை அவன் மற்ற வர்களைப் போல் தன் காதலியோடு கடைவீதிக்கு வராமல் தனியாகக் கடை வீதிக்கு வந்தது பற்றிக் குறையாகப் பேசிக் கொண்டிருக்கலாம்? அப்படி இருக்காது. அவனைக் கூர்ந்து பார்த்து விட்டு இவ்வளவு அலட்சியமாக முகத் தைத் திருப்பிக் கொள்ளுவதற்கு ஏதோ காரணம் இருக்கத்தான் வேண்டும்.

அவனுக்கு வயது இருபத்தைந்து இருக்கலாம். நல்ல உயரம், பிரகாச மான கண்கள், திரண்டபுஜம், அகன்ற மார்பு, கட்டுக் குலையாத கம் பீரமான தேக வனப்பு, பார்வைக்கு மிகவும் படித்தவனாகவும், விவேகியாக வும் தோன்றினான். அவன் ஒரு அரச

குமாரனோ பிரபுக்களின் வம்சத்தைச் சேர்ந்தவனோ என்று சொல்வதற்குரிய ஆடை அலங்காரங்கள் ஏதுமில்லை. வெண்மையான சாதாரண உத்தரீயத்தினால் தன் வசீகரமான பொன் மேனியைப் போர்த்தி மறைத்திருந்தான். இதைத் தவிர அவனிடம் கண்டதெல்லாம் அவன் அணிந்திருந்த பாதரட்சை ஒன்றுதான். அவன் அந்த வியாபார ஸ்தலத்துக்கு எதையோ விற்க வந்தவனாகவோ, அல்லது வாங்க வந்தவனாகவோ தெரியவில்லை. அவன் ஒவ்வொன்றையும் ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டே நடந்தாலும் அவனுடைய கண்கள் அவன் விவேகமும் பேரறிவும் படைத்தவன் என்பதையே எடுத்துக் காட்டின.

அவன் தானியம் விற்கும் பகுதியைக் கடந்து ஆபரணம் விற்கும் பகுதியை அடைந்தான். வாலிபர்களும் மங்கையர்களும் நடமாடும் இந்தப் பகுதியில் வேடிக்கை பார்க்க வந்த அவனுக்கு இன்னும் சிறிது கவர்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கலாமல்லவா?

அங்கொரு முத்துக் கடை: ரகவாரியாகப் பிரிக்கப்பட்ட முத்துக்கள் சிறுசிறு மணிக்குன்றுகள் போல் குவிக்கப்பட்டு ஆண்களின் கண்களையும், பெண்களின் கருத்தையும் பறித்தன. விலையுயர்ந்த முத்துக்கள் கடையை அலங்கரிப்பது போல் சரஞ்சரமாகக் கட்டித் தொங்க விடப் பட்டிருந்தன. ஒரு பெண் அங்கு தொங்கிய முத்துச் சரம் ஒன்றைக் கையால் பிடித்துக் கொண்டு பக்கத்தில் நிற்கும் தன் காதலனின் முகத்தையே கெஞ்சுதலோடும் ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய காதலன் சிங்களத் தீவிலிருந்து வந்திருக்கும் முத்து வியாபாரியோடு ஏதோ பேரம் பேசிக் கொண்டிருந்தான். நடை பாதை தாழ்வாரத்தில் வேடிக்கை பார்த்த வண்ணமே வந்து கொண்டிருந்த வாலிபன், முத்துக் கடையில் ஒரு வாலிபன் தன் காதலியோடு நின்று பேரம் பேசுவதைப் பார்த்துச் சட்டென்று அக்கடை எதிரிலேயே நின்று கவனித்தான்.

சிங்கள வியாபாரி "அந்த முத்துச் சரம் எட்டுக் கழஞ்சு பொன்னுக்குக் குறையாது" என்று சொன்னான்.

தன் காதலியின் விருப்பத்தை நிறைவேற்ற நினைத்த வாலிபன், "ஆறு கழஞ்சுக்குத் தருவாயா, மாட்டாயா?" என்று தர்க்கம் செய்தான்.

முத்து வியாபாரி "விலை குறையாது, எட்டுக் கழஞ்சுதான்" என்றான்.

"எல்லாம் குறைக்கலாம். ஆறுகழஞ்சு தருகிறேன்" என்றான் வாலிபன்.

"அதற்கு இந்த முத்துச்சரம் கிடைக்காது" என்றான் அந்த முத்து வியாபாரி.

வாலிபன் தன் காதலியின் முகத்தைப் பார்த்தான். அவள் அந்த முத்துச் சரத்தையே கையால் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆர்வத்தோடு.


"அது விலை அதிகமாக இருக்கிறது. வேறு சரம் வேண்டுமானால் வாங்குவோமே?" என்றான் தன் காதலியிடம்.

"வேறு சரம் எனக்கு எதற்கு? மனத்துக்குப் பிடித்ததை வாங்கத்தானே இங்கு வந்தோம்" என்றாள்.

வாலிபன் பிடிவாதமாக இருக்கும் தன் காதலியைக் கோபக் கண்களோடு முறைத்துப் பார்த்தான்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற வாலிபன் முத்துக் கடையில் தன் காதலியோடு நின்று கொண்டிருக்கும் அவ் வாலிபனை நெருங்கியபடி, "ஏனப்பா! இவ்வளவு கோபமாக அந்தப் பெண்ணைப் பார்க்கிறாய்? கோபம் இன்பத்துக்குப் பகை. இந்த உலகத்தில் நாம் சுகம் அனுபவிக்கத் தானே பிறந்திருக்கிறோம்? இந்தப் பிறவியில் அடைய வேண்டிய இன்பத்தை அனுபவிக்கா விட்டால் இந்தப் பிறவியே பாழ். நீ உன் காதலியை இங்கு எதற்காக அழைத்து வந்தாய்? அவளுக்குப் பிரியமானதை அன்போடு வாங்கித் தருவதற்காகத்தானே? அவள் விரும்புவதை மறுக்காமல் வாங்கிக் கொடுத்தால் அவளுக்கும் மகிழ்ச்சி, அதனால் உனக்கும் ஒரு இன்பம். 'அந்த முத்துச் சரம் எட்டுக் கழஞ்சு' என்கிறார் அந்த வியாபாரி. 'நீ ஆறு கழஞ்சுக்குக் கொடுங்கள்' என்கிறாய். அவருக்குச் சம்மதமில்லை. ஆறு கழஞ்சுக்குக் கொடுப்பதில் நஷ்டம் இல்லையென்று பட்டால் அவர் இவ்வளவு நேரம் கொடுத்துவிட மாட்டாரா? செல்வம் இன்பம் அனுபவிக்கத்தானே இருக்கிறது. இரண்டு கழஞ்சுக்காகப் பார்த்துத் துக்கத்தைச் சுமத்திக் கொள்ளலாமா? போகட்டும், இரண்டு கழஞ்சு என்ன அதிகமா? உன் நாயகி ஆசைப்படும் பொருளை வாங்கிக்கொடு. உன்னிடம் இல்லாவிட்டால் நான் இரண்டு கழஞ்சு தருகிறேன். அவளுக்குப் பிரியமானதை வாங்கிக் கொடு" என்றான் அந்த அழகன்.

தன் மனைவிக்கு முத்துச்சரம் வாங்கிக் கொடுப்பதற்கு யாரோ ஒரு முகமறியாத வாலிபன் வந்து பரிந்து பேசியதுடன் இரண்டு கழஞ்சு பொன்னும் தருவதாகச் சொன்னது அவ்வாலிபனுக்கு மிக்க ஆத்திரத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. (தொடரும்)



உலகப் புகழ்பெற்ற
எனிகார்
ENICAR
ULTRASONIC
Seapearl
440 P
441 P
439 P
100-61-10
3 வருஷங்களுக்கு
எனிகார் அல்ட்ராஸோனிக் கடிகாரங்களுக்கு, எண்ணெய் போடவோ அல்லது சுத்தம் செய்யவோ வேண்டிய அவசியமே இல்லை.
*பிரபல கெடிகாரக் கடைகளில் கிடைக்கும்
Exclusive Agents - PHOENIX WATCH CO.
(Branch: CALCUTTA-1.) 169, Hornby Road, BOMBAY-1.
NUA-1005

ஈழநாட்டுப்

"கண்டுபிடித்துவிட்டேன்" என்றார் மன்னர். அவருக்கு உண்டான குதூகலத்தைச் சொல்லி முடியாது. தம் அருகில் இருந்த சித்திரக் கலைஞரை அப்படியே கட்டிக் கொண்டார். "கலைஞரே! என்னுடைய மனோரதம் நிறைவேறும் காலம் வந்து விட்டது!" என்று கூறினார். "எப்பேர்ப்பட்ட இடம்! எவ்வளவு அருமையான குகைகள்!" என்று உள்ளம் பூரித்துப் போனார். குகைக்கு அடியில் போய் உட்கார்ந்து மேலே அண்ணாந்து பார்த்து மகிழ்ந்து போனார்.

கலைஞருக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் மன்னருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைப் பார்த்துத் தாமும் மகிழ்ந்து போனார். "அரசே! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஆனந்த மிகுதியுடன் கேட்டார்.

"கலைஞரே! கேளும்: நம்முடைய 'பிரயாணம் முடிந்து விட்டது. நாம் இத்தனை காலம் எதைத் தேடி அலைந்தோமோ, அது கிடைத்து விட்டது. இந்த உயரமான மலையும் இதன் அமைப்பும்தான் நம்முடைய மனோரதம் நிறைவேறுவதற்குச் சரியான இடம். ஆகா! இந்த மலைப்பாறையில் எவ்வளவு கதைகளைச் சித்திரிக்கலாம். நமது கனவில் இருந்து வந்த சித்திர லோகத்தையே நாம் இங்கு அமைத்து விடுவோம்" என்றார்.

இவ்வாறு கூறிய மன்னன் காசியப்பனின் சகோதரர். தந்தையைக் கொலை செய்து விட்டு நாட்



பிரயாணம்

டைப் பிடித்துக் கொண்ட காசியப்பனை வெல்வதற்காக அவனுடைய சகோதரர் தமிழ் நாட்டிலிருந்து ஈழநாட்டுக்குப் படை திரட்டிச் சென்றார். தமையனை வென்று சிகிரி கோட்டையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்து வந்தார். பாரதநாட்டில் அவர் இருந்து வந்த நாளில் அஜந்தாக் குகைகளிலும், சித்தன்னவாசல் மலைமீதும் தாம் பார்த்த சித்திர அற்புதங்களைப் போல் ஈழ நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று ஏங்கினார். அதற்குத் தகுந்த இடத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகப் பல மாத காலம் சுற்றி வந்தார். கடைசியில் இந்த மலைக் குகையைக் கண்டார். அதில் சித்திரலோகத்தைச் சிருஷ்டிக்கக் கலைஞருக்கு ஆணையிட்டார்.

நாட்கள், மாதங்கள், வருஷங்கள் ஆயின. காட்டுப் பிரதேசத்தில் இருண்ட மலைக் குகையில் கனவு உலகம் சிருஷ்டிக்கப்பட்டு வந்தது. இருண்ட குகைக்குள், உயிரற்ற கற்பாறைகளுக்கு மேல் அரண்மனை அந்தப்புரங்கள், ராஜ கன்னிகைகள், மலர்த் தட்டுகள் எங்கெங்கும் கண்ணுக்கு இனிய மனோகரமான காட்சிகள். இந்தச் சிரஞ்சீவிச் சிறப்புக் காட்சிகள் வாழ்நாளில் மறக்க முடியாத அற்புதம்.

சிகிரியின் இருண்ட குகைகளிலிருக்கும் அழகிகளின் ஓவியங்களைப் போலவே ஈழநாட்டுச் சாலைகளில் உயிர் பெற்று உலாவும் பெண்மணிகளையும், சிகிரியச் சித்திரங்களில் தென்படும் அலங்காரங்களைப் போலவே அந்தப் பெண்கள் உடை வனைந்திருப்பதும், ஈழ நாட்டு இயற்கை எழிலுக்கு ஏற்ப அவர்கள் உடல் வனப்பு அமைந்திருப்பதும், ஏதோ நாடகத்தில் வர்ணத் திரையில் காண்பது போல அவர்கள் வயல்வெளிகளில் சொகுசாக வேலை செய்வதும், நெற்கதிர்களை லாகவமாக அணைத்துப் பிடிப்பதும் பார்த்துப் பார்த்து வியக்கத்தக்கவையாக இருந்தன.

ஈழ நாட்டின் இயற்கைத் தோற்றம் கற்பனைக்கு எட்டாதது. இயற்கை வளம் நிரம்பியது; எதுவும் செழுமையாக வளரக்கூடியது; எங்கெங்கும் பச்சைநிறக் குன்றுகள்; பாயும் அருவிகள்; பளிங்கு நீர் புரளும் கங்கைகள்; கண்ணுக்கு எட்டிய வரையில் அடர்ந்த காடுகள்; காடுகளில் கூட்டம் கூட்டமாக வாழும் யானைகள்; கரடிகள்; மான்கள்; காணக் கிடைக்காத பறவைக் கூட்டங்கள்; நீர் ததும்பும் குளங்கள்; போக்குவரத்துக்குச் சுகமான கருங்கல் சாலைகள்!

சாலைகள் என்றவுடன் மலைநாட்டில் ஒரு நாள் காலையில் பிரயாணம் செய்தது என்னுடைய நினைவுக்கு வருகிறது.

இளங் காலை. மெல்லிய காற்று வீசுகிறது. ஆகாயத்தில் முகிற் கூட்டம் அணிவகுத்துச் செல்கிறது. அது



பகீரதன்

ஒரு சமயம் சூரியனை மறைக்கிறது; இன்னொரு சமயம் விடுவிக்கிறது. சாலையில் இருந்து பார்த்தால் எதிரே பூமி சரிவாக இறங்கிப் பள்ளத்தாக்காக மாறி விடுகிறது. அதன் மடியில் ஆறு ஒன்று மலைப் பாம்பு போல் நெளிந்து வளைந்து செல்கிறது. இன்னொரு புறத்தில் ஓங்கக் கைகளை வீசி ஆடும் தென்னஞ்சோலைகள், மலையின் மேல்மட்டத்திலிருந்து கீழ் வரைக்கும் பச்சைப் பசேல் என்று படிப்படியான வயற் பண்ணைகள். குன்றின் இதயத்திலிருந்து இறங்குவது போன்ற சிறு சிறு பாதைகள். அதன் வழியில் ஒய்யாரமாகச் செல்லும் கிராமத்து இளம் மடந்தையர்கள்!

மாணிக்கக் கங்கையின் கரையில் கதிர்காமக் கடவுள், தமிழ்த் தெய்வம், முருகன் திருக்கோலம் கொண்டிருக்கிறார். உருவம் இலலாமல் இருக்கும் முருகன் திருக்கோயில் தனி உருவத்துடனும் தனி அழகுடனும் திகழ்கிறது. இங்கு நடக்கும் சடங்குகள் நம் நாட்டு வழக்கங்களுடன் ஒத்திருந்தாலும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்த திருக் கோயில் வழிபாட்டுமுறை ஏனோ சற்று விலகியிருக்கிறது. ஆனாலும் கதிர்காமக் கடவுளும் அவருக்கு நடக்கும் வழிபாட்டு முறைகளும் தமிழ் நாட்டுடன் முன் நாள் தொடங்கிய உறவை நினைவூட்டிக் கொண்டு வருகின்றன. கதிர்காமத்தின் எல்லையில் கால் அடி எடுத்து வைத்தவுடனேயே ஏற்பட்ட உணர்ச்சியை எழுதிக் காட்ட இயலவில்லை. இனம் தெரியாத ஏதோ ஒரு புனித பூமியில் புண்ணிய மண்ணில் நிற்பது போன்ற உணர்ச்சிதான் மேலோங்கி இருந்தது. அங்கு இருக்கும் கருங்கல்லிலே, வெண் மணலிலே, பச்சை இலையிலே, செம்மலரிலே, நீலமேகத்திலே, காற்றினிலே எங்கும் ஒரு தெய்வ சக்தி மிளிர்வதாகவே தோன்றுகிறது. இப்பொழுது நினைத்தால்கூட அந்த உணர்ச்சி ஏற்பட்டு மயிர்க் கூச்சம் உண்டாகிறது.

கண்டி நகரின் அழகும் புத்தரின் தந்த ஆலயத்தின் கம்பீரமும் மறக்க முடியாத கண்டி நடனமும் கூட்டம் கூட்டமாகக் குளிக்கும் யானைக் கூட்டமும் சுருள் சுருளாக மனத்திரையில் விரிகின்றன. கண்டி நகரில் நவீன அமைப்பில் கட்டும் சர்வகலாசாலைக் கட்டடங்கள்கூட அல்லவா கண்டியின் புராதன கட்டடக் கலை பாணியில் அமைந்திருக்கின்றன. அந் நகரில் உள்ள புகழ் பெற்ற பர்தேனியா தோட்டம் ஒன்றையே வாழ் நாளெல்லாம் பார்த்துப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அந்தத் தோட்டத்தில் இருக்கும் மரங்கள், செடிகள், கொடிகள், தாவர வர்க்கங்களைப் போல் உலகில் வேறு எங்குமே காணமுடியாது. அப்படிப்பட்ட உலக அதிசயம் அது.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே உயர்ந்த நாகரிகம் பெற்றுத் திகழ்ந்த பூமி ஈழம். தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு துலங்கிய தீவு இலங்கை. இதை இன்றைக்கும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன அநுராதபுரத்துக் கற்கோயில்களும், பொலன்னறுவைச் சித்திரங்களும், சிற்பங்களும். இந்த இடங்களில் போய் நின்றபோது மனம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சென்று விடுகிறது. அப்போது இருந்த அநுராதபுரத்து நகரமும் பொலன்னறுவை நகரமும் கண் முன்னே வந்து விடுகின்றன. அந்த நாளில் பௌத்தமும், சமணமும், சைவமும் ஒன்றாக நின்று ஓங்கி வளர்ந்த அற்புதத்தை மனக்கண்ணால் காண முடிகிறது. காலத்தால் சிதைந்த இந்த நகரங்கள் பூமி ஆராய்ச்சிக்காரர்களின் சொர்க்க பூமியாகத் திகழ்கிறது.

** ** **

இயற்கையோடு இயைந்த தெய்வக்காட்சிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு மலர்ந்த முகங்களுடன் எங்களை வரவேற்ற தமிழ்ப் பெரு மக்களின் முகங்கள் கண்முன் வந்து நிற்கின்றன. கொழும்பு நகரிலும், கண்டியிலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் இன்னும் பல இடங்களிலும் எங்களை உற்சாகத்துடன் வரவேற்று எங்கள் பேச்சைக் கேட்பதற்கு அத்தனை ஆர்வம் காட்டினார்களே! தங்களுடைய அன்பையும் ரசிகத் தன்மையையும் அப்படியே கொட்டியல்லவா விட்டார்கள்!

நகர்ப்புறங்களில் வாழ்பவர்கள் காட்டிய அபிமானம் இருக்கட்டும். கிராமப் பகுதியில் வியாபாரத் துறையிலும் வேறு பல அலுவல்களிலும் ஈடுபட்டு வரும் தமிழ் அன்பர்களும் தேயிலைத் தோட்டத்திலும், ரப்பர் தோட்டத்திலும், ரத்தினச் சுரங்கங்களிலும் உள்ள தொழிலாளர்களும் காட்டிய அன்பையும் பரிவையும் எப்படிச் சொல்வது? தமிழ் நாட்டிலிருந்து ஈழநாட்டின் தேயிலைத் தோட்டத்திலே ஐயாயிரம், ஆறாயிரம் அடிக்கு மேலே வாழும் இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் நாட்டிலிருந்து வந்தவர்களைப் பார்த்ததும் அவர்கள் பேச்சைக் கேட்டதும் எவ்வளவு குதூகலப் பட்டார்கள்?

இதுபோன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கக்கூடிய காரியமா? மரகதத் தீவின் அழகுக் காட்சிகளைப் பார்த்து அனுபவித்ததுதான் மறக்கக்கூடியதா? ஈழநாட்டுத் தமிழ்மக்களின் அன்பும் அபிமானமும்தான் எவ்வளவு உயர்வானவை! ஈழ நாட்டை விட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்த பிறகும் அல்லவா அந்த இன்ப நினைவுகள் பசுமையாக இருக்கின்றன.

அதற்குள்ளாகத் தமிழ் நாட்டுக்கு வந்துவிட்டேன்! ஈழநாட்டின் இயற்கையும் செயற்கையும் அங்கு வாழும் தமிழ்மக்களின் அன்பும் பண்பும் அப்படித் திகைக்கச் செய்கின்றன. இதோ ஆரம்பத்திலிருந்து தொடர்பாக ஈழநாட்டுப் பிரயாணத்தைத் தொடங்குகிறேன்.

பிரயாண ஆரம்பம்

ஈழ நாட்டுக்குப் போகவேண்டும் என்ற ஆசை எனக்கு நேற்று முந்தாநாள் ஏற்பட்டதல்ல. எவ்வளவோ வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்டது. ஆனால் அது நிறைவேறுவதற்குச் சென்ற டிசம்பரில்தான் காலம் கூடிற்று.

முன்னாலேயே நிறைவேறுவதற்குப் பல காரணங்கள் குறுக்கே நின்றன. கடைசியாகச் சென்ற மாதம் ஈழ நாட்டில் உள்ள ஒரு அன்பர் எனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார். கொழும்பு நகரில் உள்ள பாரதி இளைஞர் மன்றத்தின் தலைவர்

இரு கல்கிதாசன் என்னை ஈழத்துக்கு அழைப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டுக்கு அப்பாலும் தமிழ் அன்பையும் கலை ஆர்வத்தையும் வளர்த்து வரும் இருக்கூட்டம் ஒன்று இருக்கிறது. பட்டணங்களிலும் கிராமங்களிலும் பட்டிதொட்டிகளிலும் மேற்படி கூட்டத்தார் அறிவு விளக்கை ஏற்றி வைக்கும் அரும் தொண்டை ஆற்றி வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பட்டப் படிப்புப் பெறாதவர்கள். ஆனாலும் படித்துப் பட்டம் பெற்றவர்களை விட எத்தனையோ மடங்கு அறிவு விலாசம் உள்ளவர்கள். அறிவைவளர்க்கும் தொண்டில் ஆர்வம் கொண்டவர்கள்.

இந்த மாதிரி இனத்தைச் சேர்ந்த உற்சாக முள்ள இளைஞர்கள் சிலர் "பாரதி இளைஞர் மன்றம்" என்பதாக ஒரு சங்கம் அமைத்து அதன் மூலம் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார்கள். கொழும்பு நகரில் உள்ள இந்தச் சங்கம் ஆண்டு தோறும் பாரதியார் ஜெயந்தியைக் கொண்டாடி வருகிறது. சென்ற டிஸம்பர் மாதம் பாரதி விழாவில் கலந்து கொள்வதற்கு என்னை அழைத்தார்கள். ஈழ நாட்டைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு இருந்த ஆவலை எப்படியோ தெரிந்து கொண்ட 'கல்கி' அதிபர் திரு சதாசிவம் அவர்களும் பாரதி ஜெயந்தியில் கலந்து கொள்வதற்கு என்னை அனுப்பி வைத்தார்.

** ** **

ஈழ நாட்டுப் பிரயாணத்துக்கு ஒழுங்கு செய்வதென்பது சாமான்யமான காரியமல்ல. 'பாஸ்போர்ட்' வாங்க வேண்டும். 'விஸா' வாங்கவேண்டும். வருமான வரி காரியாலயத்துக்கு நடையாய் நடந்து அவர்களிடமிருந்து உத்தரவுச் சீட்டு பெற வேண்டும். அம்மை ஊசி குத்திக் கொள்ள வேண்டும். காலரா ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு ஊசிகளும் குத்திக் கொண்டால் மட்டும் போதாது. அதற்கு நகர சபையிலிருந்து விசேஷ 'சர்டிபிகேட்' பெற வேண்டும்! இவைகள் எல்லாம் பெறுவதற்குள் ஈழ நாட்டுப் பிரயாணம் தொடங்க வேண்டாம் என்றே தோன்றிவிடும். ஆனாலும் விடாப்பிடியாக முயன்றாலே இவைகளை எல்லாம் பெறுவது சங்கடம் என்றால், நிதானமாக இருந்தால் எப்படிக் கிடைக்கும்? எவ்வளவோ கடினப் பிரயத்தனங்களுக்குப் பிறகு பெற்ற 'பாஸ் போர்ட்', 'விஸா', அம்மை ஊசி, காலரா ஊசி 'சர்டிபிகேட்'டுகள் இவ்வளவையும் மிகுந்த ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக் கொண்டு பிரயாணத்துக்குத் தயாராகிக் கிளம்ப வேண்டும்.

விமான கூடத்தில் சுங்க அதிகாரிகளிடமும், சுகாதார அதிகாரிகளிடமும், போலீஸ் அதிகாரிகளிடம் அவர்கள் கேட்கும் பல விசித்திரமான கேள்விகளுக்குத் தயங்காமல் பதில் சொல்லியாக வேண்டும்.

இவ்வாறு பலவிதமான சோதனைகளுக்குப் பிறகு விமானத்துக்குச் செல்ல வேண்டும்.

** ** **

விமானத்தில் ஏறி உட்கார்ந்தோம். விமானக் கதவை மூடி விட்டார்கள். இதோ விமானம் கிளம்பி விட்டது. சக்கரத்தை மடித்துக் கொண்டு 'ஜிவ்'வென்று கிளம்பி உயரே பறக்க ஆரம்பித்து விட்டது. விமானம் மேலே மேலே போயிற்று. மேகமண்டலத்துக்கு மேலே போய் விட்டது. கீழே கண்ணுக்கு எட்டிய தூரம் வெள்ளை வெளேரென்ற மேகக் கூட்டங்கள்தான்.

இம்மாதிரி பரவிப் படர்ந்திருந்த மேக நிரைகளுக்குள் இப்போது விமானம் புகுந்து செல்கிறது. அதாவது கீழே இறங்குகிறது. அதோ வெகு தூரத்துக்கு அப்பால் இலங்கைத் தீவு தெரிகிறது. ஆ! இந்தப் பசுமையை என்னவென்று சொல்வது! மரகதத் தீவு என்றால் மரகதத் தீவுதான். வானவெளியில் இருந்து பார்த்தால்தான் அந்த அழகு முழுமையும் அனுபவிக்க முடியும். பார்த்த இடமெங்கும் பசுமைதான். தென்னை மரங்கள் எவ்வளவு அழகாய்க் காட்சி தருகின்றன.

இந்த இனிய காட்சியைச் சில நிமிடங்கள் தான் பார்க்க முடிந்தது. இதோ! யாழ்ப்பாணம் வந்து விட்டது! காதை அடைக்கிறதே! 'ஏன் காதை அடைக்கிறது?' 'விமானம் கீழே இறங்கத் தொடங்கி விட்டது' என்று பதில் கிடைக்கிறது. 'தட தட' என்று ஒரு அதிர்ச்சி ஏற்படுகிறது. விமானம் நின்று விட்டது. ஒன்றேகால் மணி நேரத்துக்குள்ளாக யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டோம்.

யாழ்ப்பாணத்திலேயே ஈழநாட்டுத் தமிழ் அன்பர்கள் வரவேற்க வந்து விட்டார்கள். அவர்களைப் போய்ப் பார்க்க ஆவலுடன் சென்றால், சுங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தி விட்டார்கள். பிறகு அருகிலிருந்த கட்டடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே இருந்த சுங்க அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் எல்லாரிடமும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி விட்டுத் திரும்பினோம். இவ்வளவு காரியங்கள் முடிந்த பிறகும் யாழ்ப்பாணத்துத் தமிழ் அன்பர்களைப் பார்க்க முடியவில்லை. அவர்களிடம் சற்றுத் தூரத்திலிருந்தபடியே அளவளாவிப் பேசி விட்டு மீண்டும் புறப்பட்டோம். இப்பொழுது

டிசம்பர் மாதச் சிறுகதைப் போட்டி

நூறு ரூபாய் பரிசு பெற்ற

"உடன் பிறந்தவர்கள்"

என்னும் கதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது

பரிசு பெற்றவர்: லால்குடி கிருஷ்ணமூர்த்தி

முண்டியம்பாக்கம், சிந்தாமணி, (வழி) விழுப்புரம்.

மரகதத் தீவின் இயற்கை வளங்களை நன்றாகப் பார்க்க முடிந்தது. மேலிருந்தபடியே இந்தக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டு கொழும்பு போய்ச் சேர்ந்தோம்.

புகழ்பெற்ற ரத்மலானை விமானகூடத்தில் பாரதி இளைஞர் மன்ற அன்பர்களும், ஏராளமான தமிழ் நண்பர்களும் குதூகலத்துடன் கூடிநின்று மலர் மாலையும் பொன் மாலையும் சூட்டிஉற்சாகமாக வரவேற்றார்கள்.

கொழும்பு நகரில் எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த விடுதி விமான கூடத்திலிருந்து ஏழெட்டு மைல் தூரம் இருக்கும். கொழும்பு நகருக்குப் போவதற்குள்ளாகவே வழியில் தமிழ் மன்றக் கழகத் தலைவர் திரு கா. பொ. ரத்தினம் அவர்கள் எங்களைத் தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

திரு கா. பொ. ரத்தினம் அவர்களுக்குத் தமிழிடம் உள்ள அன்பைச் சொல்லுவதா? அவருடைய விருந்தோம்பலின் பண்பைப் பற்றிச் சொல்லுவதா என்று தெரியாமல் நாங்கள் திகைத்துப் போனோம். அந்தத் திகைப்பு தீருவதற்குள்ளாகவே அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கொழும்பு நகருக்குப் புறப்பட்டோம். கொழும்பு நகர் போய்ச் சேர்வதற்குள்ளாகவே இலங்கையில் வாழும் தமிழ் மக்களைப் பற்றித் தெரிந்து கொள்வது சாத்தியமாயிற்று.

ஒரு காலத்தில் இலங்கைத் தீவு முழுவதற்குமே ஸர் பொன். ராமநாதன் போன்ற தமிழர்கள்தான் தலைவர்களாக இருந்தார்கள் அவர்கள் காலத்தில் தமிழர் சிங்களவர் வேற்றுமை கிடையாது. இப்பொழுது இலங்கை மந்திரி சபையில் தமிழ் மந்திரி என்று யாருமே கிடையாது. சுமார் பத்து லட்சம் இந்தியத் தமிழ் மக்களுக்கு ஓட்டு உரிமை கிடையாது., அவர்கள் எல்லாம் இலங்கையில் 'திரிசங்கு'போல் இருந்து வருகிறார்கள். அவர்கள் இந்த உலகில் எது தங்கள் தேசம் என்று தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால் இலங்கை நாட்டில் உரிமையை இழந்து இயந்திரம் போல் நடைப் பிணங்களாகத் தமிழ் மக்கள் நடமாடுகிறார்கள் என்று சொல்லலாம். இதற்கும் மேலே இன்னொரு கொடுமையும் இப்பொழுது புதிதாக ஏற்பட்டிருக்கிறது. எந்தத் தமிழ் மக்களால் இலங்கை பொன் கொழிக்கும் தீவாக மாறியதோ அவர்கள் மொழியான இன்பத் தமிழுக்கு ஆபத்து வந்து விட்டது. இத்தனை காலமும் தமிழ் சிங்களத்துக்குச் சமமாக அரசியல் மொழியாக இருந்து வந்தது. இப்பொழுது அந்த அந்தஸ்தையும் பறித்து விட்டார்கள். இலங்கையில் சிங்கள ஏகாதிபத்தியமே நடைபெறுகிறது என்று சொன்னாலும் மிகையாகாது. இவ்வாறு இலங்கையில் தமிழ் மக்கள் படும் அவதிகளைக் கண்ணீருக்கு இடையே கம்மிய குரலில் பாரதி இளைஞர் மன்றத் தலைவர் கூறினார். இதைக் கேட்கும் போது எனக்கும் கண் கலங்கிவிட்டது. இலங்கையில் தமிழ்ச் சாதிக்கு ஏற்பட்டிருக்கும் நிலையை எண்ணி வேதனைப் பட்டேன்.

நம்மிடமிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது இதுதான். "ஏதோ இந்த மூலைத் தீவில் நாங்கள் இருபத்தைந்து லட்சம் தமிழர்கள் இருக்கிறோம். உங்கள் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாகி விட்டது என்ற மும்முரத்தில் எங்களை மறந்து விடாதீர்கள்" என்று தான் அவர்கள் கேட்பது.

"உங்களை மறந்து விடுவோமா?" என்றேன்.

அந்தச் சமயத்தில் "இதோ கொழும்பு நகரம் வந்து விட்டது" என்றார் நண்பர்.

"ஆகா! வரட்டும்" என்று சொல்லிவிட்டு நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த நவீன வசதிபடைத்த விடுதிக்குச் சென்றோம்.

** ** **

மறுநாள் கொழும்பு நகரில் உள்ள வெள்ளவத்தை சைவ மங்கையர்க் கழக மண்டபத்தில் பாரதி ஜயந்தி விழா மகாநாடு மிகச் சிறப்பாக ஆரம்பமாயிற்று. மகாநாட்டை ராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி வரானந்தா அவர்கள் திறந்து வைத்தார். அதாவது "திற!" என்றதும் பாரதி ஜெயந்தி விழா மகாநாடு திறந்து கொண்டது. கதையில் வரும் மந்திரவாதியைப் போல மகாநாட்டைத் திறந்து வைத்தார். இதோ மகாநாடு ஆரம்பமாகிறது. மன்றத் தலைவர் திரு கல்கி தாசன் அவர்களே 'கணீர்' என்ற குரலில் கடவுள் வணக்கம் பாடுகிறார். அவரைப் பின்பற்றி மன்றத்து இளைஞர்கள் அத்தனை பேரும் உற்சாகமாகப் பாடுகிறார்கள். தயவுசெய்து எழுந்து நின்று கடவுள் வணக்கத்தில் கலந்து கொள்ளுங்கள்.

"கணபதிராயன் – அவனிரு
காலைப் பிடித்திடுவோம்

குணமுயர்ந்திடவே – விடுதலை
கூடிமகிழ்ந்திடவே

வெற்றிவடி வேலன்–அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்;

சுற்றிநில்லாதே போ!–பகையே!
துள்ளி வருகுது வேல்!"

பாட்டு இன்னும் தொடர்கிறது. "ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" என்று மேலே மேலே பிரார்த்தனை கீதம் போகிறது. (தொடரும்

ஆசியப் பேனாவீரர் மகாநாடு

○●○

இந்த இதழில் தொடரவேண்டிய பேராசிரியர் அ. சீ. ரா. அவர்களின் இந்தக் கட்டுரையும் படங்களும் அடுத்த இதழில் வெளியாகும்.


JASMINE
கவர்ச்சியுடன்
களிப்பை
அளிக்கும்
ஜஸ்மின்
ரேயான் ஸில்க்
துணிகள்
ஜஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-2.



இந் நலன்களையும் நீங்கள் பெறலாம்!
சொந்தமாக ஒரு வீடு
உங்களுக்கென்று காணி நிலம்
உங்கள் குழந்தைகளுக்கு கல்வி வசதி
தேர்ந்த வைத்திய வசதி
வயோதிக காலத்தில் வளமான வாழ்க்கை
தேசிய சேமிப்பில் முதலீடு செய்யும் உங்கள் பணம் பத்திரமாயிருப்பதுடன் அதற்கு நல்ல வட்டியும் கிடைக்கிறது. அத்துடன் சமுதாய சுபீட்சத்திற்கான தேசிய திட்டத்திற்கும் செலவு செய்ய அந்தப் பணம் உதவுகிறது.
விவரங்கள் மற்றும் / அல்லது முதலீடு செய்வது பற்றியுள்ள நிபந்தனைகளுக்கு எழுதுங்கள்:—தேசிய சேமிப்பு கமிஷனர், சிம்லா, அல்லது ராஜ்ய பிரதேச சேமிப்பு அதிகாரி.
சிறுகச் சேமித்து பெருக வாழுங்கள்
நாட்டின் செழுமையில் முதலீடு செய்யுங்கள்.
DA-56/160 TM

அறிவுக் களஞ்சியம்

அன்புமிக்க சுஜாதா,

சங்கீத மகாநாடுகளில் நடந்த விவரமெல்லாம் கேட்டிருக்கிறாய். டிசம்பர் மாதம் சென்னை நகரம் கலைக் கோவிலாக இருக்குமென்று கற்பனை செய்து எழுதியிருக்கிறாய். அந்தக் கோவிலுக்குப் பொற் கலசங்கள், அழகிய பதுமைகள் எல்லாம் செதுக்கிய கோபுரமாக ஒருவிழா நடந்தது. இந்த விழாவின் மூலப்பொருளான புத்தகத்தை உனக்குப் பொங்கல் பரிசாக அனுப்பி இருக்கிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டைப் பற்றி எவ்வளவு தூரத்துக்கு அப்பால் இருந்தாலும் பெருமைப் படுகிறோமல்லவா? பொன்னி நதியை நினைத்துப் பூரிக்கிறோம். தென்னிந்தியாவில் விண்ணை முட்டும் கோபுரங்களையுடைய அழகிய கோவில்களை நினைத்துப் பெருமைப்படுகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கப் பலகையை நினைத்து மகிழ்கிறோம். இம்மாதிரியான அநேக அம்சங்களோடு தமிழ் நாட்டுப் பெருமைக்குரியதான 'வியாசர் விருந்து' புத்தக மலிவுப் பதிப்பையும் சேர்த்துக்கொள்ளலாம். அந்தப் புத்தக வெளியீட்டு விழாவைத்தான் கோபுரமெனக்குறிக்கிறேன்.

டிசம்பர் 30ம் தேதி காலை ஞாயிறன்று இந்த விழா சுமார் மூன்று மணிநேரம் கோலாகலமாக நடந்தேறியது. அறிஞர்கள் விருந்து விருந்து என்று சொற்பொழிவைப் பரிமாறிக் கூடியிருந்த மக்களைப் பசி, தாகமில்லாமல் செய்து விட்டார்கள். இது புதிய பதிப்பில்லை. ஏற்கெனவே வெளிவந்த புத்தகம்தான். கர்ணபரம்பரையாகக் கேட்ட கதைகள்தான். ஆனாலும் என்ன? சந்திரனும், சூரியனும் பழமை அடைவதுண்டா? எவ்வளவோ பூர்ணிமைகளைக் கண்டிருக்கிறோம். இந்தப் பூர்ண சந்திரனைப் பார்த்து அலுத்துவிட்டதெனச் சொல்லுகிறோமா?


முன்பு வெளி வந்த "வியாசர் விருந்து" புத்தகம் விலையில் உச்சிகாலச் சூர்யனாயிருந்தது. இன்று அதே புத்தகத்தின் விலை நம்மைப் போன்றவர்கள் யோசிக்காமல் வாங்கும்படியாக இருக்கிறது.

ராமாயணம் பரம்பொருளின் ஆதர்ச நர வாழ்க்கையைக் குறிக்கும் தொடர்நாவல் போன்றது. மகாபாரதம் கடவுளின் கருணை பெற்ற மகான்களுடைய சிறுகதைக் கொத்து. நாம் இன்று சிறுகதைகளைப் பெரிதும்விரும்பிப் படிக்கிறோம். இந்தப் புத்தகத்தில் ஆரம்பத்திலிருந்து படிக்க வேணுமென்பதில்லை. நாற்று நாற்பதாம் பக்கத்திலிருந்து நாற்றைம்பதாம் பக்கம் வரை படிக்கலாம். முப்பதாவது பக்கத்திலிருந்து முப்பத்தைந்து வரை படிக்கலாம். மிகவும் தெளிவாக இருப்பதுமட்டுமல்ல; ஒரு பக்கம் படித்தால்கூட அதில் ஒரு நீதி, ஒரு கருத்து இருக்கிறது. நிதானமாக வீட்டில் படிக்கலாம். பிரயாண காலத்தில் வாசிக்கலாம். சோர்வுற்ற மனநிலையில் படிக்கலாம், விஷயஞானத்தைப் பெறப் படிக்கலாம். ஆத்ம ஞானம் முதல் அரசியல் அறிவு வரையில் சகல விஷயங்களும் அமைக்கப் பட்ட 'கல்விக் களஞ்சியம்' வியாசர் விருந்து. கஷ்டம், சுகம், இன்பம், துன்பம் எல்லாகால தேச வர்த்தமானத்திலும் உண்டு. மனிதப் பண்பு பெற்ற பெரியோர்கள் கஷ்ட காலத்திலும் எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டார்கள் என்பதை அறியும் அரிய சாதனம். நம்மைப் போன்ற பேதைப்பெண்ணான பாஞ்சாலிகஷ்ட காலத்திலும் மேதையாக இருந்திருக்கிறாள்.

அன்று ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் தான் புதிதாக வாங்கிய கல் இழைத்த கழுத்தணியை எனக்குக் காட்ட பீரோவைத் திறந்தாள், தேடினாள், கிடைக்கவில்லை. அந்த பீரோவில் பழைய செய்திப் பத்திரிகை, பேனாக்கத்தி, டார்ச் லைட், முக்கிய பத்திரங்கள், பென்சில், பேனா, எவர்ஸில்வர் பாத்திரம், கிழிந்த துணி, புதுப் புடவைகள்-இப்படி ஏராளமான சாமான்களை வாரிப் போட்டிருந்தாள். தேடும் அவசரத்தில் பேனாக் கத்தி அவள் காலில் விழுந்து குத்தியது. 'சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்' என்று எல்லாவற்றையும் கைலாகவமாக ஒரே இடத்தில் வைத்திருப்பதாக அவளுக்குப் பெருமை வேறு.

"பல்லுக் குத்துவது இருக்கட்டும். உன் காலைக் குத்தி விட்டதே. இன்னொரு நாள் பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு அவளிடம் விடை பெற்று வீட்டுக்கு வந்தேன்.

என் தோழியின் இப்படிப்பட்ட செய்கையைப் பரிகசிக்கிறோம். ஆனால் நம்முடைய மனமாகிய பீரோவில் வேண்டியது வேண்டாதது எல்லாவற்றையும் அடைத்திருப்பதை நினைத்துப் பார்க்கிறோமா? நாம் பெறும் பல தரப்பட்ட அறிவுகளைத் தூசி தும்பின்றி,



வேண்டாததை நீக்கி விட்டுக் கச்சிதமாக அடுக்கவும் முயற்சி தேவைதானே.

எதைச் செய்தாலும் நாற்றுக்கு நாலாக ஈடுபட்டுச் சிந்தனைக் கடலில் கடைந்த உண்மையைக் கண்டவர்கள் தான் இப்புத்தகத்தை எழுத முடியும். இப் புத்தகம் பெண் குலத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இப்படிக்கு,

பூமாதேவி

விசித்திரக் கூஜா

திருவை நடராஜன்

"அண்ணி! நான் கேட்கிறேனே என்று வித்தியாசமாக நினைத்துக்கொள்ளக் கூடாது! உனக்கு வேண்டுமானால் பதிலுக்கு வேறொன்று வாங்கிக் கொடுத்து விடுகிறேன். கண்ணன் பிறந்தவேளையில் வீட்டுக்குவந்த அந்தக் 'கூஜா' அவனோடு என்னிடம் இருக்கட்டுமே என்றுதான் கேட்கிறேன்" என்றாள் கல்யாணி.

"இதோ பாரு, கல்யாணி! எதைக் கண்டாலும் நீ 'எனக்கு எனக்கு' என்று தூக்கிக் கொண்டு போய் விடுகிறாய். இது உன் அண்ணா எனக்காக வாங்கி வந்த கூஜா. நான் இதை யாருக்கும் கொடுக்க விரும்பவில்லை. கட்டாயப் படுத்திக் கேட்காதே கல்யாணி! எதற் கெடுத்தாலும் உங்க அண்ணா முன்னாலே இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டு விடுகிறாய். அவரே சொன்னால் கூட நான் இதைக் கொடுக்க மாட்டேன்!" என்று ஏளனமும் கண்டிப்புமாகக் கூறினாள் வசந்தா.

"அண்ணி, எதை யெல்லாமோ பேசி ஏன் கஷ்டப்படுத்துகிறாய்? என்னமோ நானும் பெற்றுப் பிழைப்பேனோ என்று கிடந்தேன். பாத்திரக் கடைச் செட்டியாரின் கைராசி கூஜா வந்த வேளை பிள்ளையாகவும் பிறந்து நானும் பிழைத்தேன். அந்த நினைவாக இருக்கட்டுமே என்றுதான் கேட்டேன். உனக்கு விருப்பமில்லா விட்டால் வேண்டாம். அவ்வளவுதானே! இனி மேல் அண்ணாவாகப் பார்த்துக் கொடுத்தால்கூட நான் அதைக் கையால் தொட மாட்டேன்!" என்று 'சூளு'ரைத்து விட்டு அப்பால் போய் விட்டாள் கல்யாணி.

கல்யாணி தனது மூன்று மாதக் குழந்தையுடன் புருஷன் வீட்டுக்குப் புறப்பட்டாள். அவள் கணவன் ஸ்ரீதரன் அவளை அழைத்துப் போக வந்திருந்தான். கல்யாணி ஊருக்குப் போகும் போது அவள் சகோதரன் சீனிவாசனும் வழியனுப்புவதற்காக ஸ்டேஷனுக்குப் போனான். ஸ்டேஷனில் சீனிவாசன், "கல்யாணி! அண்ணி சொன்னதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ளாதே. அவள் குழந்தையிலிருந்து பிடிவாதக்காரியாகத் தான் வளர்ந்திருப்பாள் போல் இருக்கிறது. அதற்காக நீ வருத்தப்பட்டுக் கொள்ளாதே, கல்யாணி! நீ ஆசைப்பட்டுக் கேட்டதை எப்படியாவது உனக்கே சேரும்படி ஏற்பாடு செய்கிறேன்" என்று மிகவும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

கல்யாணியும் உடன் பிறந்தவன் கண் கலங்கக் கண்டு தன்னையும் மீறி விம்மத் தொடங்கி விட்டாள்.

ரயில் வண்டி ஒரு முறை ஊதி விட்டு மூச்சைப் பிடித்துக் கொண்டு நகர ஆரம்பித்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தங்கையின் கலங்கிய முகம் கண்ணுக்கு மறையும்வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டு வீட்டுக்குத் திரும்பினான் சீனிவாசன். அவன் சிந்தனையில் தாயார் மீனாட்சியம்மாள் தோன்றினாள்.

சாகப் போகும் கடைசி மூச்சில் தாய் சொன்ன அந்தக் கடைசி வார்த்தைகள் அவன் நினைவில் எழுந்தன. "சீனு, கல்யாணி! நீங்கள் இருவருமே இளம் பிஞ்சுகள். உங்களை நிராதரவாக விட்டு விட்டுக் கண்ணை மூடப் போகிறேன். சீனு, நீயோ ஆண் பிள்ளை. படித்துப் பட்டம் பெற்று வேலையும் சம்பாதித்துக் கொண்டு விட்டாய். கல்யாணி சின்னக் குழந்தை. விவரமறியாதவள். இனிமேல் நீதான் அவளுக்குத் தாய், தந்தை, உலகம் எல்லாம். என் அன்பை யெல்லாம் அவள் மீது செலுத்தி அவளைக் காப்பாற்று. எந்தச் சிறு காரணத்துக்காகவும் உன் மூச்சுள்ள வரையில் அவளைக் கண் கலங்க விட்டு விடாதே! அவள் விழிகளில் நீர் சுரக்காமல் பார்த்துக் கொள்வதுதான் அப்பா நீ எனக்குச் செலுத்தும் நன்றி" என்று கல்யாணியை அவன் கையில் ஒப்புவித்து விட்டுக் கண்ணை மூடினாள்.

தந்தை இருந்த வரையிலும் கைநிறையச் சம்பாதித்து மனம் போனபடி செலவு செய்து எப்படிப் படாடோபமாக வாழ்ந்தார்? அவர் போனபிறகு நொடித்துப் போய்விட்ட குடும்பத்தைக் காப்பாற்ற அம்மா பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா, நஞ்சமா?

அம்மாவின் விருப்பப்படிதானே எல்லாம் நடந்தன? ஒரு கவலையுமில்லாமல் கல்யாணி வளர்ந்தாள். சீரும் சிறப்புமாகவே கல்யாணமும் நடந்தது. ஸ்ரீதரனும் அவளைத் தரையில் நடக்கக்கூட விடாமல் அன்பு செலுத்தி வருகிறான்.

வசந்தாவுக்கு மட்டும் என்ன, கல்யாணியைப் பிடிக்காதா? தனக்குக் கல்யாணியின் மேல் எவ்வளவு அன்பு

இருக்கிறது என்பதை அவளைப் பிரசவத்துக்காகச் சீராட்ட வேண்டுமென்கிற துடிதுடிப்பின் மூலம் காட்டிக் கொண்டானே! கல்யாணி முனுக்கென்றால் தலைவலியா கால் வலியா என்று ஆயிரம் கேள்விகள் கேட்டு அவளுக்குப் பணிவிடை புரிந்தானே! அந்த அன்பு ஒரு சின்ன விஷயத்துக்காக எவ்வளவு சீக்கிரம் மாறி விட்டது? அவன் மனத்தை மாற்றிய அந்த விஷயம்......

பிரசவ வேதனை தாளாமல் துடித்தாள் கல்யாணி. முதல் பிரசவம். எந்த நேரத்திலும் பிரசவம் ஆகலாம் என்று எச்சரிக்கை செய்திருந்தார் லேடி டாக்டர். அவர் எழுதிக் கொடுத்திருந்த மருந்து எந்த நேரத்திலும் தேவைப்படலாம் என்று சீனு கடைத்தெருவுக்கு ஓடினான் மருந்து வாங்கிவர. போனவன் அப்படியே ஐயாசாமி செட்டியாரின் பாத்திரக் கடைக்குள் நுழைந்தான். செட்டியார் வாடிக்கைக்காரர் என்கிற முறையில் சீனிவாசனைக் கண்டதும் அவரது வெண்கலப் பட்டறையில் நேர்த்தியான சித்திர வார்ப்படம் போட்டுத் தயாரிக்கப்பட்ட ஓர் அழகான கூஜாவை அவனிடம் காட்டினார். "இதை எடுத்துக் கொண்டு போங்கள். வேறு யாருமே இது மாதிரி வார்ப்படம் போடவில்லை. ஏன், நான்கூட இந்த ஒன்றைத் தவிர மேற்கொண்டு தயாரிக்கவில்லை. மாதிரிக்காக ஒன்று மட்டும் போட்டுப் பார்த்தேன். அவ்வளவுதான். அதிர்ஷ்டம் உங்களுக்குக் காத்திருக்கிறது. அதனால்தான் நீங்கள் வரும் வரையில் இது தங்கி யிருந்திருக்கிறது" என்று கூஜாவை அவனிடம் கொடுத்தார் ஐயாசாமி செட்டியார்.

கூஜாவைக் கரத்தில் தொங்க விட்டபடி வீட்டுக்குள் நுழைந்தான் சீனிவாசன். அவனை எதிர் கொண்ட வசந்தா அந்தக் கூஜாவை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு அதன் சித்திர வேலைப்பாடுகளிலே மயங்கிப் போனாள்.

"யாருக்காக இதை வாங்கியிருக்கிறீர்கள்? விலை ஏகப்பட்டது ஆகியிருக்குமே?" என்று கேட்டாள்.

"எவ்வளவோ கொடுத்து வாங்கினேன். கூஜா நன்றாக இருக்கிறதா, இல்லையா? செட்டியார் கடைக்குப் போனேன். 'நல்ல அதிர்ஷ்டமான கூஜா எடுத்துக் கொண்டு போங்கள்' என்றார். எனக்கும் பிடித்திருந்தது. வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்" என்றான். அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் கூஜாவின் அதிர்ஷ்டம் தெரிந்து விட்டது. குழந்தை பிறந்து அது வீறிட்ட குரலின் மூலமாக 'நான் இவ்வுலகில் அவதரித்திருக்கிறேன்' என்று அவனுக்கு அறிவித்தது.

"ஆண் குழந்தை பிரசவித்திருக்கிறாள். இப்பொழுதுதான் சுகப் பிரசவம் ஆயிற்று" என்று மகிழ்ச்சி துள்ளக் கூறினாள், வசந்தா.

ஒரு வாரமாகத் துடித்துக் கொண்டிருந்த கல்யாணி பெற்றுப் பிழைத்து விட்டாள். சந்தோஷம் பிடிபடவில்லை சீனிவாசனுக்கு. செட்டியாரின் வாய் முகூர்த்தமோ என்னவோ, இந்தக் கூஜா நல்ல அதிருஷ்டக் கூஜாதான்.



"வசந்தா!" என்று அழைத்தான் சீனிவாசன்.

அவன் குரலில் இழைந்த குழைவைக் கேட்டு முகத்தைச் சுருக்கிக் கொக்கி போட்டு அவனைப் பார்த்தாள் வசந்தா.

"வசந்தா, இந்தக் கூஜா வந்த வேளை ரொம்பவும் நல்ல வேளை. ஆகையால் இதைக் கல்யாணிக்கே கொடுத்து விடப் போகிறேன்" என்றான் சீனிவாசன். சட்டென்று அவள் முகம் மாறி விட்டது.

"இருந்திருந்தும் ஒரே கூஜா, அதிசயமான சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியது. இதைப் போய்க் கல்யாணிக்கு......" மேலே தொடராமல் நிறுத்தினாள் வசந்தா.

"ஏன் நிறுத்திவிட்டாய்? சொல்லேன்!" என்றான்.

"இல்லை. இது நம் வீட்டிலேயே இருக்கட்டுமே? எனக்கென்னமோ

இதன் பேரில் ஆசை விழுந்து விட்டது" என்றாள் வசந்தா.

"பைத்தியம்! நமக்கென்ன வேறே கிடைக்காதா? நல்ல வேளை — நல்ல செய்தி. அதனால் கல்யாணிக்குக் கொடுத்து விடலாம் என்று பார்க்கிறேன்."

"அதெல்லாம் முடியாது. நான் இதைக் கொடுக்க மாட்டேன்."

"என்னமோ, செட்டியாரின் கைராசி நல்ல செய்தி கிடைத்தது. அந்த அதிர்ஷ்டக் கூஜா அவளுக்கே இருக்கட்டுமென்று சொன்னேன். பிறகு உன் இஷ்டம்" என்று சொல்லி விட்டு, வேகமாகப் போய் விட்டான் சீனிவாசன்.

அறைக்குள் படுத்திருந்த கல்யாணியின் செவிகளில் அண்ணனுக்கும், அண்ணிக்கும் நடந்து முடிந்த வாக்குவாதம் தெளிவாகக் கேட்டது. அண்ணா ஆசைப்பட்டுத் தனக்குக் கொடுக்க முன் வரும் போது அண்ணி குறுக்கிட்டு அதை ஏன் தடுக்க வேண்டும் என்று பொருமியது அவள் மனம்.

அந்தக் கூஜாவைக் கொண்டு வரச் சொல்லிப் பார்த்து விட்டு அதன்மேல் திடமான நம்பிக்கை கொண்டு விட்டாள் கல்யாணி. அண்ணா சொன்னது போல் அந்தக் கூஜா வந்த வேளையும், தனக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்த வேளையும்....நிச்சயம் அது அதிர்ஷ்டப் பொருளேதான்! எப்படியாவது அண்ணியிடம் கெஞ்சி அதை வாங்கி விடத் தீர்மானித்தாள்.

இன்று கல்யாணி ஊருக்குப் புறப்படும்போது அந்தக் கூஜாவைக் கேட்க, அதற்கு வசந்தா எய்த சொல்லம்புகள் அவளைக் குமுறியழும்படி செய்து விட்டன. அந்தக் குமுறல்தான் சீனிவாசனையும் நிலை கலங்கும்படி செய்துவிட்டது.

கல்யாணி கல்யாணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போகும் பொழுது தன் கூடப் பிறந்தவனைப் பிரிந்து போகிறோமே என்ற பாசத்தினால் உகுத்த இரண்டு சொட்டுக் கண்ணீரைத் தவிர, அவள் நயனங்கள் நீர் சிந்திப் பார்த்திராதவன். கேவலம் இந்தக் கூஜா விஷயம் அவள் விழிகளைக் குளமாக்கியதை நினைத்து மருகினான்.

அவசர அவசரமாக உடை அணிந்து கொண்டு காரியாலயத்துக்குப் போனான் சீனிவாசன்.

பகல் ஒரு மணி இருக்கும். யாரோ வாசற் கதவைத் தட்டும் சத்தம்



கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்தாள் வசந்தா. அங்கே ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்.

வந்தவன் வசந்தாவைப் பார்த்து, "ஐயா, இந்தச் சாமான்களை யெல்லாம் இங்கே கொண்டு வந்து கொடுக்கச் சொன்னாங்க. யாரோ சிநேகிதருங்க வந்திருக்காங்களாம். ராத்திரிக்கு விருந்துச் சாப்பாடு தயார் பண்ணச் சொன்னாங்க. அப்படியே ஒரு பாத்திரம் வாங்கிக்கிட்டு போய் ஐந்தாறு பேருக்குக் காப்பி வாங்கிக்கிட்டு வரச் சொன்னாங்க" என்று சொல்லி விட்டு நாலைந்து காகிதப் பொட்டலங்களை அவள் முன்னால் வைத்தான். அவைகளில் சேமியா, திராக்ஷை, முந்திரி முதலிய சாமான்களெல்லாம் இருந்தன.

வசந்தா அவைகளை எடுத்துக் கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வந்தாள். பிறகு கூஜாவைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். பிறகு, "ஜாக்கிரதையாகக் கொண்டு போய்க் காப்பி வாங்கிக் கொடுத்து விட்டுப் பத்திரமாகக் கொண்டு வந்து விடு" என்று எச்சரித்து அனுப்பினாள்.

இரவு எட்டு மணிக்குச் சீனிவாசன் வீட்டுக்கு வந்தான். அவனுக்குப் பின்னால் யார் வருகிறார்கள் என்று எட்டிப் பார்த்தாள் வசந்தா. ஒருவரையும் காணோம்.

"எங்கே உங்கள் சிநேகிதர்கள்? பின்னால் வருகிறார்களா? ஆமாம், அவன் இன்னும் கூஜாவைக் கொண்டு வரவில்லையே, நீங்களாவது எடுத்துக் கொண்டு வரக் கூடாது?" என்று கேட்டாள் வசந்தா.

"என்ன வசந்தா, உளறுகிறாய்? சிநேகிதராவது கூஜாவாவது?"

"அப்படியானால் நீங்கள் யாரையும் இங்கே அனுப்ப வில்லையா?"

"இல்லையே. யார் வந்தது?"

"பகல் ஒரு மணிக்கு உங்கள் ஆபீஸிலிருந்து ஒருவன் வந்து, யாரோ சிநேகிதர்கள் வந்திருக்கிறார்களாம்; அவர்களுக்காக விருந்துச்சாப்பாடு ஐயா தயார் பண்ணச் சொன்னாங்க என்று இந்தச் சாமான்களையும் கொடுத்து விட்டுக் காப்பி வாங்குவதற்காகக் கூஜாவை வாங்கிக் கொண்டு போனானே!"

"அட, கடவுளே! போச்சா? நான்தான் ஆள் அனுப்புவதாயிருந்தால் முன் கூட்டியே சொல்லிவிட்டுப் போவேனே. உன்னை யார் வந்தவன் கிட்டேயும் போனவன்கிட்டேயும்நம்பிப் பாத்திரத்தைக் கொடுக்கச் சொன்னது? அன்றைக்குக் கல்யாணி ஆசைப்பட்டுக் கேட்டதற்கு அவளை அழ விட்டாய்" என்று குத்திக் காட்டினான் சீனிவாசன்.

வசந்தாவுக்கு அழுகையும் ஆத்திரமும் பொங்கி வந்து நெஞ்சில் அடைத்துக் கொண்டன.

"தொலையட்டும் சனியன்; விட்டுத் தள்ளு. அது வந்த வேளைதான் உன்னையும் கல்யாணியையும் ஆகவொட்டாமல் செய்து விட்டது. இந்த மட்டில் கூஜாவோடு போயிற்றே" என்று குறும்பு பண்ணினான் சீனிவாசன்.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள், "ஸார், தபால்!" என்று குரல் கொடுத்தபடியே ஒரு கடிதத்தை வீசியெறிந்து விட்டுப் போனான் தபால்காரன். கடிதத்தை எடுத்து வந்து சீனிவாசனிடம் கொடுத்தாள் வசந்தா. அவன் உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் பார்த்தான். அது அவன் தங்கையிடமிருந்து வந்திருந்தது.

"அண்ணாவுக்கு, கல்யாணி நமஸ்காரம். இவ்விடம் நான், 'அவர்', கண்ணன் எல்லாரும் சௌக்கியம். நீங்க, நான் அங்கு வந்திருந்தபோது, ஐயாசாமி செட்டியார் சொன்னது பொய்! அதைப் போல் நிறையச் செய்திருப்பார்கள். வியாபாரத்துக்காக அப்படிச் சொல்லியிருக்கிறார். நேற்று முன் தினம் ஒரு பாத்திரக்காரன் கதவைத் தட்டிக் கூப்பிட்டு 'வெண்கலப் பாத்திரம்வேண்டுமா?' என்று கேட்டான். அவனிடம் அதே மாதிரி ஒரு சித்திர வார்ப்படக் கூஜா இருந்தது. அதைப் பார்த்த உடனேயே நம் கண்ணன் நினைவாக வாங்கி விட்டேன்.

— கல்யாணி"

சீனிவாசன் கடிதத்தைப் படித்து முடித்தான்.

"அட, பாவி! இங்கே ஏமாற்றி விட்டு அங்கேயல்லவா கொண்டுபோய் விற்றிருக்கிறான்?" என்று மோவாயைப் பிடித்துக் கொண்டாள் வசந்தா.

"என்ன, வசந்தா! உன் முகத்திலேயே கரியைப் பூசி விட்டானே, ஒருத்தன்! கல்யாணி இதைப் போல் கூஜா நிறைய இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். நீ ஏமாந்து போய்த் தொலைத்து விட்டாய் என்று தெரிந்தால் சிரிக்க மாட்டாளா? ஹும்....அது ஒரு விசித்திரமான கூஜா!" என்றான்.

"ஆமாம். என்னமோ அப்பொழுது எனக்குக் கொடுக்க விருப்பமில்லை. அது தானாகவே கல்யாணியிடம் போய் விட்டது."

சீனிவாசன் விஷமச் சிரிப்பு சிரித்தான். அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் வசந்தாவை ஏமாற்றி விட்டுக் கல்யாணியிடம் கூஜாவை விற்றவன் அவனால் அனுப்பப்பட்டவன் என்பதுதான். ஆனால், வசந்தாவுக்கும், கல்யாணிக்கும் இந்த உண்மை எப்படித் தெரியப் போகிறது?

அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்!



47 ஆண்டுகளாகப் புகழ்பெற்று விளங்குகிறது

ஆர்.எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம்
முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து

○●○

மெளிரஸம் பற்பொடி, சித்தர் கோரோஜனை மாத்திரை, வேடிடாள் ஹேர் ஆயில்

முதலியவைகள் எமது தயாரிப்பே ஆகும்

○●○

விவரமான கேட்லாக் வேண்டுவோர் எழுதினால்
இலவசமாக அனுப்பப்படும்

ஆர். எஸ். பதி அண்டு கம்பெனி

(ஸ்தாபிதம் : 1909)

தபால் பெட்டி நெ. 99, மதுரை

சென்னையில் கிடைக்குமிடங்கள்

ஸ்கூல் விழூ ஸ்டோர்ஸ், 96, தம்பு செட்டித் தெரு ● எம். எஸ். ஸ்டோர்ஸ் 1/17B, மவுண்ட் ரோடு ● அப்பர் & கோ., நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு

கும்பகோணம் நகராட்சி

மாசி மகம் பொருட்காட்சி

அரண்மனைத்தோட்டம்

30-1-57 முதல் 25-2-57 வரை

திரளான மக்கள் கூடும் பொருட்காட்சி விழா. உயர்தர நாடகங்கள், சங்கீதக் கச்சேரிகள், பரதநாட்டியம் முதலியனவும், வேடிக்கைகளும், விநோதங்களும் நிறைந்த விழா. வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

மற்ற விவரங்களுக்கு எழுதவும்

ஆணையர்
கும்பகோணம் நகராட்சி


சின்னத்துரைக்கு உடல் தேறியதும் அவனை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அவன் ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப்பட்டு வீட்டுக்கு வந்த மூன்றாம் நாள் ஐயாசாமி அவனைப் பார்க்க வந்தார். கமலம்மாள் அப்போது வீட்டில் இல்லை.

''ஏன்டா சின்னு? எப்படி இருக்கே? பாவம்....'' என்ற அநுதாப விசாரணையோடு அவர் கீழே உட்கார்ந்தார்.

''தேவலை, மாமா! வேலைக்குக்கூடப் போகலாம். கையிலே கால் அரைகூட இல்லாமல் கஷ்டமாக இருக்கிறது'' என்று சிரித்தான் சின்னத்துரை.

''தெரியும், மாமா! விட்டுத் தள்ளுங்கள், போகிறான். என்னை இன்ஸ்பெக்டர் ஸார் அந்தப் பக்கமே வரச் சொல்லியிருக்கிறார், மங்களூர்ப் பக்கம். அத்தனை தூரம் போக வேண்டுமே, கையில் இருபத்தைந்து ரூபாயாவது வேண்டாமா?'' என்றான் சின்னு.

பானுவின் காதலன்



9. தேர்தல் முழக்கம்

''ம்......'' என்று ஐயாசாமி பீடிகையாகப் பெருமூச்செறிந்தார். ''உத்தியோகம் பண்ணுவேன் என்று பெரிசாக விறாப்புப் பேசி விட்டுப் போனாய். அவள் மோசம் பண்ணி விட்டாளேடா? விழிக்கிறாயே! பானுவைத்தான்டா சொல்கிறேன். விஷயம் தெரியுமோ, இல்லையோ?....'' இந்தத் துக்க விசாரணை சின்னுவுக்கு ஆத்திரத்தோடு அளவு கடந்த வேதனையையும் கிளப்பி விட்டது.

ஐயாசாமி விழிகள் தெறித்து விழுந்து விடுவதைப் போல் அவனை உற்றுப் பார்த்தார்.

"இன்ஸ்பெக்டர் ஸார் வரச் சொன்னாரா? உன்னை எதற்கடா வரச் சொன்னார் இன்னும்? ஊர் சிரிக்கும்படி விஷயம் பரவிப் போச்சு. அந்தக் கழுதையை மறுபடியும் அழைத்துக் கொண்டு போயிருக்கிறாரேடா! நான் மெனக் கெட்டுப் படித்துப் படித்துப் புத்திமதி சொன்னேன். 'அவப் பெயர் வந்தது இத்துடன் போதும். உன் பெயரைச் சொன்னால் சின்னத்துரை பூரித்துப் போகிறான். ஏதோ முடிச்சுப் போட்டால் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும். சொன்னதைக் கேள்' என்று கெஞ்சினேன். இரவோடு இரவாக அவரோடு போயிருக்கிறாள். வந்து அவரே அழைத்துப் போனாராம்.... சை!"

சின்னத்துரைக்கு அவர் என்ன சொல்கிறார் என்பதே விளங்க வில்லை..

"பானுவுக்கா சொன்னீர்கள்? அந்தப் பயல் யார், மாமா? நீங்கள் பார்த்தீர்களா?" என்று உதடுகள் துடிதுடிக்க விசாரித்தான்.

"பார்த்தீர்களாவாவது? உனக்கு விஷயமே தெரியாதா அப்போது? அன்றைக்கென்னவோ பாசாங்குக்காரி என்றாயே? உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேனே? பெரிய உத்தியோகம் செய்தான். வெளியே மதிப்பு. அவ்வளவுதான். அந்த அம்மாள் கொதித்துப் போய்த்தானே பானுவை வேலையை விட்டுத் தள்ளி விட்டு உன்னை வைத்திருக்கிறாள். உன் தாயார் பத்து நாட்கள் ஏதோ சமையல் காரியத்தைக் கவனித்துக் கொண்டாள் போலிருக்கிறது. ஊருக்குப் போவதற்கு அவன்தானே பானுவை வந்து அழைத்துக் கொண்டு போயிருக்கிறான்? உன்னை எதற்கு அந்த ஊருக்கு வரச் சொல்லி யிருக்கிறானாம்?"

"என்ன?"

சின்னுவுக்கு இருதயத் துடிப்பே நின்று விட்டாற்போலிருந்தது. 'எப்படிச் சாதுரியமாகப் பேசினார்? தலை மறை



வாக விஷமக்காரப் பயல்கள், போலீஸ் அப்படி இப்படி என்று கதை கட்டி விருக்கிறாரா? கதை! அவன் ஊகம், சந்தேகம் எல்லாம் நிசம்தானா? ஆனால் அவனுடைய அம்மா உண்மையை மறைத்து, 'பானு வேறு யாருடனோ ஓடி விட்டாள்' என்று பொய் சொல்ல வேண்டிய காரணம்?...

சின்னத்துரைக்கு இத்தனை குழப்பத்தையும் சமாளித்துக் கொண்டு ஐயாசாமிக்குப் பதில் கூற வேண்டியிருந்தது.

"அப்படியா, மாமா? எனக்குக் கேட்கவே பிடிக்கவில்லையே?..."

"ஊரே 'கொல்'லென்றாகி விட்டது. இந்தக் கழுதை இப்படித் துணியும் என்று நான் நினைக்கவில்லை.......அம்மா எங்கே?" என்று கேட்டார் ஐயாசாமி.



ஐயாசாமி அவன் பட்டிருந்த ஐந்து ரூபாய்க் கடனுக்காக விசாரித்தார். ஆனால் சின்னத்துரைக்கு உடனே தாயாரைப் பார்த்து, 'ஏன் பொய் சொன்னாய்' என்று கேட்டு உண்மையை அறிந்து கொள்ளாத போனால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது.

அப்போது அவர்களுக்கு மிகவும் சிரமமான தசையாக இருந்தது. அரிசிப் பஞ்சம் தலைதூக்கி நின்ற காலம் அது. அவனுடைய ஆஸ்பத்திரிப் படுக்கையினால் பெருகி விட்ட செலவுகள் வேறு கடனாக வளர்ந்து அவர்களை நாற்புறமும் நெருக்கிக் கொண்டிருந்தன. எனவே கமலம்மாள் அத்தனை நாட்களாக இல்லாதபடி, ஹோட்டலில் மா அரைக்கும் வேலையை ஏற்றுக் கொண்டிருந்தாள்.

ஐயாசாமியை அனுப்பி விட்டுச் சின்னத்துரை நேராக 'மணீஸ் கபே'யின் பின்புறம் வழியாக அம்மாவைத் தேடிச் சென்றான். குப்பைத் தொட்டி, எச்சில் இலைகள் எல்லாவற்றையும் தாண்டிச் சின்னு அச் சமயம் அங்கே வரக்கூடும் என்பதை அவன் தாயார் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அடுப்புப் புகையும் எண்ணெய்ப் புகையும் கவிய வேலையில் ஈடுபட்டிருக்கும் கிழவர் கிட்டுவிடம் கமலம்மாள் சொல்லிக் கொண்டிருந்தாள்:

"அசட்டுப் பிள்ளை. ஆஸ்பத்திரியிலே எப்படி விழித்து விழித்துக் கத்தினான் தெரியுமோ? 'என்னை அவன்தான் அடித்தான், காவேரியில் தள்ளினான்' என்று மார்க்கபந்துவின் பெயரைச் சொல்லித் திட்டினான். 'டீ பானு, பானு' என்று கத்தினான். எனக்குச் சொரேல் என்றது. அவனுக்கு ஏதோ சித்தத்தில் பட்டிருக்கிறது. இப்போது சொல்ல மாட்டேனென்கிறான். நமக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்? மகராஜனை ஊரை விட்டு மாற்றினார்களோ, பிழைத்தேன்......"

"ஆமாம் தாயே! பெரிய இடத்து விவகாரம். இந்தக் கண்ணால் பார்த்ததை வாயால் விடக்கூடாது. நம்முடைய தொழிலைக் கவனிக்கவே நமக்கு நேரமில்லையே?..." என்றார் கிழவர் அனுபவ பூர்வமாக.

"பெண்ணாகட்டும் பிள்ளையாகட்டும், யாரும் இந்தப் பக்கம் வருவதில்லையாமே? இந்தக் காரணமே பிள்ளைக்குப் பிடிக்கவில்லையாம். வீட்டுப்பக்கம் எட்டிப் பார்ப்பதில்லையாம். ஸ்டேஷன் பக்கம் இருக்கிறானே, அமிர்தம் கதைகதையாகச் சொன்னாள். நேற்றுப் பால் வாங்க வந்த இடத்திலே. சுந்தரியம்மாளுக்கு வியாதி கூட இதே மனக்கோளாறினால் தானாம். இரண்டுங்கெட்டான் பெண்ணை வேலைக்குக் கொண்டு விட்டாலே இப்படித்தான். நான் அவன் பேரைக்கூட ஸ்மரிப்பதில்லை. சின்னுவுக்கு என்னமோ எப்படியோ சமாதானம் சொன்னேன். அவனுக்குப் பாவம், சூது வாது. மனசிலே ஒண்ணும் வைத்துக் கொள்ளத் தெரியாது..."

சின்னத்துரை எதையும் விசாரிக்கவே அவசியமிருக்கவில்லை! இனியும் மார்க்கபந்துவை நாடிப்போக அவன் உள்ளம் உவக்குமா? ஆனால் அவர் தன்னிடம் பேசியதையும் அழைத்ததையும் மட்டும் அவனால் கபடமுள்ள வார்த்தைகளாக நினைக்க முடியவுமில்லை; மறக்க முடியவுமில்லை.

ஆனால் ஒருவேளை அவனுக்குத் துரோகம் செய்து விட்டதற்கு ஈடாக ஏதேனும் உத்தியோகம் போட்டுத் தருவாரோ, என்னமோ?

இந்த எண்ணம் வந்ததும் தன்னையுமறியாமல் சின்னு பெருமூச்செறிந்தான்.

பானுவும் அவனுக்கு உரியவள் இல்லை; உத்தியோகமும் இல்லை. காதல் போன வழியிலே அந்த ஆசையும் கருகிப் போயிற்று!

நாடெங்கிலும் பொதுத் தேர்தல் அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஒலிபெருக்கி, பூமாலை, வெள்ளைச்

நான்கு மருந்துகள் அடங்கிய 'அனஸின்' காட்டிலும் வேறொன்று இவ்வளவு விரைவில் குணமளிப்பதில்லை

1. க்வினைனின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்

வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரிதநிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காத வில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை அணா 2 மட்டுமே

நான்கு மருந்துகளின் சேர்க்கையான 'அனஸின்' வேண்டுமென்றே கேளுங்கள்





"நம் முன்னோர்கள் நமக்கொரு அற்புதமான வாத்தியம் வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதுதான் நாகஸ்வரம். அந்த நாகஸ்வர இன்னிசை மூலம் இறைவனுடனேயே ஒன்றிவிடலாம்!" இவ்வாறு சென்ற மாதம் இருபத்தெட்டாம் தேதி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் ராஜாஜி கூறினார். இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு முதல்முறையாக விஜயம் செய்த சென்னை கவர்னர் திரு ஏ. ஜே. ஜான், "எனக்கு முன்பிருந்த கவர்னர் திரு ஸ்ரீபிரகாசாவைப் போலவே நானும் இந்தக் காந்தி மண்டபப் பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடிவு செய்துள்ளேன்" என்று சபையோரின் பெருமகிழ்ச்சிக்கிடையே கூறினார். 1. பிரார்த்தனைக் கூட்டம் திருவீழிமிழலை கோவிந்தராஜன், தட்சிணாமூர்த்தி இவர்களுடைய நாகஸ்வர இன்னிசையுடன் தொடங்கியது. 2. திருமதி செல்வம் திருநாராயணன் துதி கீதங்கள் பாடினார். 3. கீதை பாராயணம் நடைபெறுகிறது. 4. ராஜாஜி அவர்களும், சென்னை கவர்னர் திரு ஏ. ஜே. ஜானும்.

சுவர், மைதானம் முதலியவற்றுக்கும் மேடைப் புலிகளுக்கும் ஒரே மாதிரியான கிராக்கி. சின்னத்துரை இந்தச் சந்தடியிலே தான் ஆரம்பித்திருந்த மசால்வடை வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டு போனான். மசால்வடைக்குச் சுக்கிர தசை அடித்தது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலே அவனுக்கும் கிராக்கி ஏற்பட்டது. சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் சாரமற்ற பேச்சுக்களாக இருந்தால் அவனுடைய மசால்வடை கூட்டத்தினருக்கு ஒரு மாற்றையும் விறுவிறுப்பையும் கொடுத்தது. காரசாரமான கர்ஜனையாக இருந்தாலோ, அவனுடைய மசால் வடையை மக்கள் ருசித்துக் கொண்டு இன்னும் பன்மடங்கு உற்சாகத்துடன் 'ஜே' கோஷத்தையோ 'வாழ்க' ஒலியையோ எழுப்பினார்கள். எனவே, சின்னத்துரை வியாபாரம் நடத்தும் இடத்துக்கே பொதுமக்கள் திரளாக வந்தார்கள். இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்ட அபேட்சகர்கள் அவனைப் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திலே வியாபாரம் செய்ய அழைத்துப் போவதற்குப் போட்டி போட்டுக் கொண்டு கைக்கூலியும் கொடுக்க முன் வந்தார்கள் என்றால் அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

சின்னத்துரைக்கு இதெல்லாம் தமாஷாக இருந்தது. கவலையில்லாமல் வியாபாரம் ஆயிற்று. இரண்டு மணிக்கு மேல் கண்ணாடிப் பெட்டி நிறையச் சரக்குடன் கிளம்பினால் திருச்சி டவுன் போவதற்குள் ரயில் வண்டியிலேயே அநேகமாகப் பெட்டி காலியாகிவிடும். மறுபடியும் வீடு திரும்பி இன்னொரு முறை கிளம்புவான். ஒரு நாளைக்குச் சராசரி மூன்று ரூபாய்களுக்குக் குறையாமல் லாபம் கிடைத்தது.

அன்று ராகவபுரம் மைதானத்திலே பெரிய கூட்டம் கூடியிருந்தது. வெகு தூரத்துக்கு அப்பாலிருந்தே, அது புரட்சிக் கட்சியாரின் கூட்டம் என்பது தெரிய வந்தது. பக்கத்துக்குப் பக்கம் ஒலிபெருக்கிகள் அமைத்திருந்தார்கள். அண்மையில் வெளி வந்திருந்த ஒரு சினிமாப் பாட்டின் மூலமாக, முதலாளி வர்க்கத்தினரையும் சங்கீதத்தையும் சேர்த்து அந்த ஒலிபெருக்கிகள் கொலை செய்து கொண்டிருந்தன.

சின்னத்துரைக்கு அரசியலையோ, கட்சியையோ, கொள்கையையோ பற்றி ஒருநாளும் கவலை கிடையாது. அவனுக்கு வியாபாரம் தானே முக்கியம்? கூட்டத்தையும் மக்கள் ஆவலையும் ஆரவாரத்தையும் கண்டு யாரோ பெரிய பேச்சாளர் பேசப் போகிறார் என்று

நினைத்துக் கொண்டு அவன் கூட்டத்தில் புகுந்தான்.

பாட்டு நின்றது. தொடர்ந்து வழக்கம்போல் ஒருவர் மேடையில் ஏறி, பாட்டாளித் தோழர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். பூமாலை; கரகோஷம்; பேசப் போவது யாரோ என்ற எண்ணத்துடன் சின்னத்துரை உற்றுக் கேட்டான்.

"இப்போது, தோழியர் அங்கயற் கண்ணியார் அவர்கள் பேசுவார்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டுமென்பதில்லை. செல்வச் சீமானின் மகளாக இருந்தும் பாட்டாளி மக்களின் நல்வாழ்வுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு, இயக்கத்துக்காக, உடல் பொருள் கருதாமல் உழைப்பவர். கல்லூரிப் பட்டம் பெற்றவர்; இளம் வயதினர். அவருடைய சொற்பொழிவை நீங்கள் இப்போது கேட்கப் போகிறீர்கள். நம் இயக்கம் எவ்வளவு பெரிய திட்டங்களைக் கொண்டு மகத்தான காரியங்களைச் சாதிக்கப் போகிற தென்று அறியப் போகிறீர்கள்..." என்று ஒரு தோழர் அவளைக் கூட்டத்துக்கு அறிமுகம் செய்து வைத்த போது, கரகோஷம் வானத்தைத் தாக்கிவிட்டது போலிருந்தது.

சின்னத்துரை திறந்த வாய் மூடாமல் மேடையைப் பார்த்தான். சிவப்புக் கரையிட்ட வெள்ளைச் சேலை; சிவப்புச் சோளி. செதுக்கிய தந்தச் சிலை போல் ஒரு பெண் நின்றாள். அவ்வளவு பெரிய கூட்டத்தில் அது போல் பெண்ணொருத்தி சொல் மாரி பொழிந்து சின்னு கண்டிருக்கவுமில்லை; கேட்டிருக்கவுமில்லை.



"அன்பு மிக்க பாட்டாளித் தோழர்களே! தோழியரே!" என்று விளித்துத் தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அவள் பேச்சை ஆரம்பித்தாள். "நாட்டுக்குச் சுதந்திரம் வந்து விட்டது. ஆனால் பாட்டாளி மக்களுக்கு என்ன உண்டு? இங்கே கூடியிருக்கும் நீங்கள் அனைவரும் உழவாளிகளும் தொழிலாளிகளுமாகிய பாட்டாளி மக்கள். உங்களைப் பார்த்தால் கல்லும் கண்ணீர் விடும். ஆனால் நாட்டில் இப்போதுள்ள பணக்கார ஆதிக்கம் கல்லைக் காட்டிலும் கடின சித்தமுள்ளது. ஓய்வில்லாமல் உழைக்கிறீர்கள்: உண்ணக் கஞ்சியில்லை. களைப்பென்பது இல்லாமல் கஷ்டப்படுகிறீர்கள்; கட்டத் துணியில்லை. பாடெல்லாம் உங்களுக்கு, பலனெல்லாம் பிறருக்கு. உழைக்க நீங்கள்; உல்லாசத்துக்கு வேறு கும்பல்..." என்றெல்லாம் பாட்டாளி மக்களுக்குப் பரிந்து, ஒரு மணி நேரம் வீணை கொஞ்ச வேண்டிய குரலிலே அவள் பணக்காரர்களைத் தாக்கு தாக்கென்று தாக்கித் தீர்த்தாள். முதலாளிகள் ஆட்சியை முறியடித்து விட்டுப் புதுமையான சமுதாயத்தை அமைப்போம் என்று வெற்றி முரசம் கொட்டினாள். கடைசியாகப் பாட்டாளிகளின் நல்வாழ்வுக்காகவே தொண்டு செய்யத் துடிக்கும் தோழர் பரிதி மாலுக்கே குழுமியிருக்கும் தோழர்கள் அனைவரும் தங்கள் வாக்குரிமைகளை வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

பிறகு, 'தோழர் பரிதிமால் அவர்கள் இப்போது உங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்லுவார்கள்' என்ற அறிவிப்புடன் பேச்சை முடித்துக் கொண்டு, கைதட்டல் ஆரவாரத்துடன் நகர்ந்தாள். தோழர் பரிதிமால் ஒலி பெருக்கி முன் வந்தார். சின்னத்துரை இப்போது மெள்ள நகர்ந்து நகர்ந்து மேடைக்குச் சமீபமாக வந்திருந்தான். தோழரை நன்றாகப் பார்க்க முடிந்தது. சின்னத்துரை அவரைக் கூர்ந்து நோக்கினான். எடுப்பான நாசி; பெரிய விழிகள்; பார்வையிலே ஒரு அலட்சியம்; நையாண்டி மட்டுமில்லை. உக்கிரமும் கூட இருந்தது. நல்ல உயரமும் தகுந்த பருமனுமான உடற்கட்டு. ஜனங்கள் கை தட்டுகையிலே சின்னு உற்று உற்றுப் பார்த்தான். அவனுக்கு எப்போதோ, எங்கோ பார்த்தாற்போல் அந்த முகமும் விழிகளும் ஒரு பிரமையை ஊட்டின. ஆனால் நினைவுகளைக் கிளறிக் கிளறிப் பார்த்தும் எங்கே, எப்போது என்ற பொறி தட்டுப்படவில்லை.

'மூக்கும் விழிகளும் இதுபோல் வேறு எவருக்கேனும்...அல்லது ஜாடை இருக்குமோ என்னமோ' என்று எண்ணிக் கொண்டான். தோழர் பேசத் தொடங்கி விட்டார். இல்லை, பேச்சு என்றோ, பேசினார் என்றோ சொல்லுவது மதிப்பைக் குறைப்பதாகும். தீக்கங்குகள் சுடர் தெறித்துச் சிதறின என்று சொல்லலாம். அவர் எப்படி அப்படி அநாயாசமாக வார்த்தைகளை அடுக்கினார், யார் யாரைத் தாக்கினார்,

நந்தவனம்

சங்கர்

தாத்தாவின் நந்தவனம் பாப்பா!—இங்கு
தடையொன்று மில்லையடி பாப்பா!

காத்தாட வந்தாலும் போதும்—
கண்ணுக்குள்
ஆயிரம் காட்சிகள் தோணும்!

(தாத்தாவின்)

நல்ல துளசி மணக்கும்—நெஞ்சில்
நால்வகை வேதம் முழங்கும்!

அல்லல்கள் யாவையும் தீரும்—அங்கே
ஆடி மகிழ்ந்திடு பாப்பா!

(தாத்தாவின்)

வண்ணத்துப் பூச்சி பறக்கும்—சிறை
வண்ணத்தில் உள்ளம் சிலிர்க்கும்

எண்ணத்தில் மூச்சில் எழுத்தில்—இறை
எங்கும் நிறைந்தே இனிக்கும்!

(தாத்தாவின்)

முத்துப் பிறந்தகதை யோடி!—உள்ளம்
மூங்கி எடுத்ததடி பாப்பா!

சுத்தும் கடலுக்குள் ஈசன்—ஒளி
காட்டி மறைத்ததடி பாப்பா!!

(தாத்தாவின்)

ஆலம் பழத்துக்குள் பாப்பா—ஓர்
அண்டம் இலங்குதடி பாப்பா

காலம் முழுதும் அடக்கி—வழி
காட்டும் சிறுகதை போலே!

(தாத்தாவின்)

நமக்கென்ற நந்தவனம் பாப்பா!—
வெள்ளி
நாள்தோறும் வந்திடடி பாப்பா!

சுகமென்ற வாழ்வு வாழாத—தாத்தா
தம்முடனே ஆடலாம் பாப்பா!

(தாத்தாவின்)



ஜனங்கள் எதற்குக் கோஷங்கள் செய்தார்கள் என்பதெல்லாம் சின்னுவுக்கு ஒன்றுமே மூளையில் சரியாகப் புரிபடவில்லை. 'இவன் யார்? எங்கே பார்த்திருக்கிறோம்' என்ற சிந்தனையே அவன் மூளையைத் துருவிக் கொண்டிருந்தது.

கூட்டம் முடிய இரவு ஒன்பது மணியாகி விட்டது. காவிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவன் ரயிலிலே வந்து ஏறினான். அவன் ஏறிய பெட்டியிலே ஒரு கோஷ்டி அங்கயற்கண்ணியின் சண்டமாருதப் பேச்சையும், பரிதிமாலின் நெருப்புப் பறக்கும் சொல்மாரியைப் பற்றியும் உற்சாகமாக விவாதித்துக் கொண்டிருந்தது. அவர்களில் ஓரிரண்டு பேர்கள் ரயில்வே ஊழியர்கள் என்பதும் சின்னுவுக்குத் தெரியும்.

"இதற்கு முன்கூட அவர் பேசிக் கேட்டிருக்கிறோம். இருந்தாலும் இன்றையப்பேச்சு ரொம்பப் பிரமாதம்..." என்றார் ஒருவர்.

"இவர்களைப் போன்ற பேச்சாளர்களின் கையிலே தானே கட்சியின் ஜீவநாடியே இருக்கிறது? ஓட்டுத் தான் எப்படிக் கிடைக்கும்?" என்றார் முதியவரான இன்னொருவர்.

"சண்டமாருதம் பக்கத்திலிருந்து வீசும்போது தீப்பொறிகள் நாற்புறங்களிலும் வெடித்துச் சிதறுகின்றன. எல்லாம் அங்கயற்கண்ணியின் மகிமை, தம்பி!" என்றார் முன்னால் பேசியவர்.

"ஆமாம். இல்லாத போனால் அவர் தேர்தலுக்குக்கூட நின்றிருக்க மாட்டாரே? அவருடைய சக்தியெல்லாம் புஸ்வாணமாய்ப் போச்சு, கட்சிக்கே ஒரு தூண் சாய்ந்தமாதிரி என்ற நிலைமை கூட வந்து விட்டதே?"

"அப்படியா?"

"என்ன, தெரியாதா உங்களுக்கு? தகப்பன் செய்த சூழ்ச்சியில்தான் அவர் ஒரேயடியாக அமுங்கிப் போனாரே?..."

"சூழ்ச்சியா? திறமை படைத்த அவர் சூழ்ச்சியில் அகப்படுவதா....?"

"அதெல்லாம் பெண் பிள்ளைகள் மனசு வைத்தால் ஆகாதது என்ன உண்டு? ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே...." என்று கூறிச் சிரித்தார் கிழவர்.

"ரொம்ப ரொம்ப உண்மை...ஒரு பெண் அவர் சக்தியை அமுக்கினாள். இன்னொருத்தி ஊதிக் கனலைப் பொறி பறக்க வைக்கிறாள்..."

இதைக்கேட்டு அங்கிருந்த பெண்மணி உள்ளூற நகைத்தாள். சின்னுவுக்குப் பானுவின் அழகிய முகம் நெஞ்சில் மிதந்தது; வேதனை பெருமூச்சை வெளிப்படுத்தியது. (தொடரும்)



காடையம்பட்டி ஜமீன்தார் மாகாளி தாசன் என்பவர் உடலைத் துறந்து விண்ணுலகம் எய்தினார். அங்கே காளியம்மன் பாதத்தில் விழுந்தார்.

"அம்மனே! நான் மகா பாபங்கள் செய்து விட்டேன். கோபமும் துவேஷமும் என்னை ஏமாற்றி விட்டன! நான் பாபக் குழியில் விழுந்தேன். என்னுடைய வம்சமாவது நல்வழியில் வாழும்படி அருள வேண்டும், தாயே! ஈசுவரி!" என்று அழுதார்.

"அப்படியே!" என்றாள் தேவி காளி சிரித்துக் கொண்டு.

"நான் இவ்விடமே இருக்கலாமா?" என்று கேட்டுக் கொண்டார்.

"நீ சில நாட்கள் உன் பேரன்மார் வீட்டில் நாயாக வளர்ந்து யோக்கியமாக இருந்துவிட்டுப் பிறகு இவ்விடம் வரலாம். உன்னுடைய உள்ளம் அதனால் சுத்தம் அடையும், போ" என்றாள்.

ஜமீன்தாரின் முன் சரித்திரத்தைச் சொல்லுகிறேன். துக்கமும் பயமும் உண்



டாக்கும் கதைகள் படிப்போர் மனத்தைச் சுத்தமாக்கும்; புளியும் சாம்பலும் போட்டுச் செப்புச் செம்பைச் சுத்தி செய்வது போல்.

* * *

காடையம்பட்டி ஜமீன்தார் தம்முடைய ஒரே குழந்தையும் தம் மகளுமான வள்ளியை ரெட்டியூர் ராஜப்பனுக்குக் கொடுத்து விவாகம் செய்தார். அந்தக் குடும்பம் பரம்பரை விரோதிகளாயினும் ஏதோ ஒரு காரணத்தினால் இப்படிச் செய்தார்.

பழைய விரோதம் மறுபடியும் துளிர்த்து முற்றிக் கொண்டு வந்தது. ராஜப்பனுடைய கர்வம் அதிகமாகப் போய்விட்டது.

ஒருநாள் பத்து ஆட்களை விட்டு ராஜப்பனை நன்றாகப் புடைத்துவிட்டு வர உத்தரவிட்டார் ஜமீன்தார். ஜமீன்தார் கட்டளையின்படி அவர்கள் சென்றார்கள்.

அதற்குள் ராஜப்பனுடைய ஆட்களும் கும்பல் கூடி யிருந்தார்கள். யுத்தம் பெரிதாகப் போய்விட்டது. ஜமீன்தாரே நேராகச் சென்று தம் ஆட்களை உற்சாகப்படுத்திச் சண்டை நடத்தினார். ராஜப்பனுடைய இரண்டு கால்களும் ஒடிந்து அவன் கீழே தரையில் விழுந்து கிடந்தான். யுத்தம் முடிந்தது. ஜமீன்தார் வெற்றியுடன் வீடு திரும்பினார்.

மகள் தகப்பன் வீட்டுக்கு வந்துவிட்டாள். ராஜப்பன் ஆஸ்பத்திரியில் நான்கு மாதங்கள் இருந்தான். ஜமீன்தாரே செலவுக்குக் கொடுத்தார். எப்படியாயினும் மாப்பிள்ளை தானே. காயங்களைச் சொஸ்தப்படுத்த முடியவில்லை. இரண்டு கால்களையும் வெட்டி விட்டால்தான் உயிர் தப்பும் என்றார்கள் ஆஸ்பத்திரியில்.

"உயிர் இருந்தால் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டிருக்கலாம். விதவையான பின் என்ன வாழ்க்கை?" என்று மகள் அழுதாள். சஸ்திர வைத்தியர்கள் கால்களை வெட்டி விட்டுச் சொஸ்தப்படுத்தினார்கள். ராஜப்பன் பிழைத்து எழுந்தான்.

• • •

பகை மறந்து போயிற்று.

"அந்த ஆட்கள் அவ்வளவு பலமாகத் தாக்கி யிருக்கலாகாது" என்று சொன்னார் ஜமீன்தார்.

"எதிர்க் கட்சிப் படை நம்மை பலமாகத் தாக்கியபோது நாம் சும்மா இருக்க முடியுமா?" என்றான் காளியப்பன். அவன் தான் ஜமீன்தாரின் முக்கியஸ்தன். ராஜப்பனும் பேச்சில் கலந்து கொண்டான்.

"மாமா! நீங்களே நேரில் வந்து 'அடி!' 'நொறுக்கு' என்று ஆர்ப்பாட்டம் செய்தீர்களே!" என்றான்.

"நடந்தது நடந்து போயிற்று. இப்போது இந்த வீட்டிலேயே இரு; சும்மா இரு. தண்டச் சோறு தின்று கொண்டிரு" என்றார் ஜமீன்தார்.

மகளுக்குக் கோபம் வந்து விட்டது.

"இப்படிப் பேசாதீர்கள்! உங்கள் சோறு எங்களுக்கு வேண்டாம். நான் கூலி வேலை செய்து என் வாழ்க்கை நடத்துகிறேன்" என்றாள்.

ஜமீன்தாருடைய மகள் கூலி வேலை செய்தால் ஊரார் நகைப்பார்கள் அல்லவா? ஆனபடியினால் ஜமீன்தார் தம் நடத்தையை மாற்றிக் கொண்டார். மாப்பிள்ளையைக் கொஞ்ச நாட்கள் கவுரவமாகப் பார்த்து வந்தார். மகளுக்குக் கோபம் வராமல் நடந்து கொண்டார்.

ஆனால் இது எவ்வளவு நாள் சாத்தியம்? ஜமீன்தார் கொடியவர்.

"இந்த மாப்பிள்ளையை எப்படியாவது தீர்த்து விடுவது" என்று முடிவு செய்தார். மகளிடம் சொல்ல பயந்தார். ஆனாலும் அவளுக்கு எப்படியோ விஷயம் தெரிந்து விட்டது. வீட்டில் சமையற்காரன் சொல்லி விட்டான்.





"ஆமாம், தாயே, ராஜப்பனுக்கு விஷம் போட்டுப் பாயசம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார்" என்று ரகசியமாக வள்ளியம்மாளிடம் அவன் உண்மையைச் சொன்னான்.

"ஐயோ!" என்று கதறினாள்.

"என்னை விதவையாக்கவா அப்பா ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்று அழுது கொண்டு இன்னது செய்வது என்று தெரியாமல் அம்மன் கோயிலுக்குப் போய், "ஈசுவரி! என்னைக் காப்பாற்று!" என்று அழுதாள். ஈசுவரியினுடைய திட்டம் ஈசுவரிக்கு அல்லவோ தெரியும்!

ஒரு நாள் ஜமீன்தாரே திடீர் என்று இறந்தார். விஷம் தவறான பாத்திரத்தில் கலந்து போயிற்று! இரண்டு நாட்கள் வயிற்று வலியும் பொறுக்க முடியாத உபத்திரவமும் அனுபவித்து, "நான் மகா பாபி, சண்டாளன்! காளியம்மா, என்னைக் காப்பாற்றுவாய்" என்று சொல்லி விட்டு உயிர் நீத்தார்.

பிறகு வள்ளியம்மாளும் முடவன் ராஜப்பனும் ஜமீன்தாருடைய நிலங்களையும் சொத்தையும் அடைந்து சுகமாக அனுபவித்தார்கள்.

அழகான மூன்று குழந்தைகளும் பிறந்தன. பெரிய பையன் பெயர் சின்ன ராஜா. அவர்கள் முன்னோர்களுடைய சரித்திரம் குழந்தைகளுக்குத் தெரியாமலே வளர்த்தார்கள். வயதான பின் சிலர் சொல்லித் தெரிந்து கொண்டு இப்படியும் உண்டா என்று சிரித்தார்கள்.

"முன்னோர்கள் குணம் வம்ச பரம்பரை யென்று சொல்லுகிறார்களே!" என்று கேட்டான் சின்ன ராஜா. அவனுக்கு இப்போது பன்னிரண்டு வயது.

தாயார் வள்ளி பதில் சொன்னாள். "இல்லை, என் கண்ணே! அம்மன் அருள் இருந்தால் தகப்பனை விட மகன், அவனை விடப் பேரன் எல்லாரும் நல்லவர்களாக இருப்பார்கள்" என்றாள்.

"நான் நல்லவனாக இருப்பேன்!" என்றான் சின்ன ராஜா.

"சரி! வயலுக்குப் போ! அங்கே எப்படி ஏர் உழுகிறார்கள் என்று பார்த்து விட்டு வா!" என்றான் ராஜப்பன்.

"கருப்பா, வா!" என்றான் சின்னராஜா.

'கருப்பன்' என்றதும் அமாவாசைக் கருப்பான ஒரு அழகிய நாய் வாலை ஆட்டிக் கொண்டு தோட்டத்திலிருந்து சின்ன ராஜாவிடம் வந்தது.

"போகலாம் வா! வயலுக்குப் போகலாம்" என்றான் பையன்.


கருப்பன் முன்னால் ஓடிற்று. சின்ன ராஜா பின்னால் சென்றான். நாய் யார் தெரியுமா? ஆனால் அது நாய்க்கும் தெரியாது. யாருக்கும் தெரியாது.

இப்போது கதை ஆரம்பத்தைத் திரும்பப் படியுங்கள்.



பொங்கல் வருகுது

லால்குடி கிருஷ்ணமூர்த்தி.



பொங்கல் வருகுது என்றதுமே இன்பப்
போதை பிறக்குது நெஞ்சினிலே
கங்குல் விலகுது பார்முழுதும் புதுக்
காட்சி விரிந்திடக் காணுதம்மா!
சங்கம் முழங்கிடக் கேட்குதம்மா தமிழ்ச்
சங்கம் வளர்த்திட்ட சாதியரின்
மங்காப் புகழ்தனைச் சாற்றுகின்ற ஒரு
மங்கல நாளிந்தப் பண்டிகையாம்!!

ஏற்றம் அழுத்திய கால்களுக்கும் அந்த
ஏரைச் சுமந்திட்ட தோள்களுக்கும்
நாற்றைச் செருகிய கைகளுக்கும் இந்த
நாளில் வணக்கத்தைச் சொல்லிடுவோம்
ஆற்றுக்குயிர் தரும் வானமுதை இங்கு
அள்ளிச் சொரிந்திடும் செங்கதிரைப்
போற்றிப் பணிந்து துதித்து நின்றுபால்
பொங்கலும் ஆக்கிப் படைத்திடுவோம்!

உண்ண உணவு அளிப்பவளாம் பொன்னி
ஓயாது ஓடி உழைப்பவளாம்
கண்ணென நம்மையும் காப்பவளாம் அந்தக்
கன்னிக்குப் பொங்கலைப் பொங்கிடுவோம்
பெண்ணையும், வைகை, பொருநையும் நம்அன்னை
பெற்று வளர்த்திட்ட செல்வியராம்
பண்ணை வளமெல்லாம் பேணிடுவார் அந்தப்
பாவையர்க்காகவும் பொங்கல் வைப்போம்

எங்கும் கதலியும் செந்நெலுமாய் நல்ல
இன்சுவை தந்திடும் செங்கரும்பாப்
பொங்கி மலர்ந்திட்ட பார்மகளின் உளப்
பொங்கலே தைப்பொங்கல் ஆனதம்மா!
தொங்கும் சலங்கை கிலுகிலுக்கப் பல
தொண்டுகள் செய்திடும் ஆவினத்தின்
பங்கிற்கும் ஓர்பொங்கல் உண்டு என்ற தமிழ்ப்
பண்பினிற் காயிரம் அஞ்சலிகள்!



20. ஒரே சட்டம்தான்!

முதல் அமைச்சர் மித்திரகேது ராஜ குடும்ப வழக்கை விசாரிக்கத் தயங்கினாரல்லவா? இதைக் கண்டு விக்கிராந்த பூபதி பயங்கரமாக நகைத்த வண்ணம் கூறினார். "அமைச்சரே! நன்றாகச் சொன்னீர்கள்! சாதாரண குடும்பத்தின் வழக்கு விசாரணைகளை இந்த ராஜ சபையில் ஏன் நடத்த வேண்டும்? அவைகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்ல நம் நாட்டில் எத்தனையோ நீதி சபைகள் இருக்கின்றன. ஆனால் இது ராஜ குடும்பத்தின் வழக்காக இருக்கும் காரணத்தாலேயே, இன்று இதை இச்சபைக்குக் கொண்டு வந்துள்ளேன். பாரபட்சம், பச்சாத்தாபம் எதுவுமற்ற நேர்மையான விசாரணையையே நடத்துவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

ராஜசபையில் மீண்டும் மௌனமே குடி கொண்டிருந்தது.

அரசர் மீண்டும் கேலியாக நகைத்தவாறே, "சபையோரே, நன்று! நன்று! நியாயத்தை எடுத்துக் கூற உங்களுக்கு நாவன்மையற்று விட்டது. இதோ, நியாயத்தை நானே அழைக்கின்றேன்" என்றார். அப்பொழுது அரசரின் பார்வை வேறு புறத்துக்குத் திரும்பிற்று. அவரது விழிகள் இரண்டும் எரிமலை போல் இருந்தன.

"ஏ, பெண்ணே! இது அந்தப்புரமல்ல. தர்பார் மண்டபம்! இப்பொழுது நான் உன் கணவனில்லை; நாட்டு மக்களின் காவலனான அரசன்! நீ செய்துள்ள குற்றங்களைப் பூரணமாகக் கூறி இச்சபையில் ஒப்புக் கொள்ளுவாயா?" இவ்வாறு அரசரின் குரலிலிருந்து கடுமையான சொற்கள் வெளியாயின.

பாவம்! குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த ராணிமல்லிகா அப்பொழுது முகத்தை மூடியவண்ணம் விசித்து விசித்து அழுது கொண்டிருந்தாள்.

மீண்டும் அரசர் அவளை நோக்கியவண்ணம் கூறலுற்றார்:

"உனது மௌனம் குற்றத்தை உறுதி செய்வதாக இருக்கிறது. ராஜாங்கத்துக்கு விரோதமான காரியங்களைச் சதிகாரர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடருவது முன் காலம் முதல் வழங்கி வரும் ராஜரீகம்.

"ராஜாங்கத்தின் அரசுரிமைக்கு உரியவனான ராஜகுமாரன் விஜயனை நீ சூழ்ச்சியின் மூலம் தடுக்க முயன்றிருக்கிறாய். இதற்கு ஆதாரமான விசாரணைகளை நிகழ்த்தியாகி விட்டது. சூழ்ச்சியின் மூலமாகவே ராஜகுமாரன் இறக்கும்படியான குற்றங்களையும் புரிந்திருக்கிறாய்!

"உன்னால் கடத்தப்பட்ட ராஜகுமாரன் இனி திரும்பி வருவதற்கான புலன்கள் எதுவுமே கிடைக்கவில்லை. ஆகவே, அவன் இறந்து விட்டதாகவேதான் கருத வேண்டியிருக்கிறது. இத்தகைய சதி வேலைகளைப் பொதுமக்களில் எவரேனும் செய்திருந்தால் அவர்களுக்குக் கொலை தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அளிக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

"இதே சூழ்ச்சிக் குற்றத்தைப் புரிந்துள்ள குற்றவாளியான ராணி மல்லிகாவுக்கு நான் கொலை தண்டனை விதிக்கவில்லை. சிறைத் தண்டனையும் விதிக்க விரும்பவில்லை. ஆனால் இந்நாட்டின் எல்லைக்கு அப்பாலுள்ள காட்டின் மயானத்

திலேயே வாழட்டுமெனத் தீர்ப்பளிக்கிறேன். அவள் 'ராணி' என்ற பாரபட்சத்தினால் அல்ல; 'பெண்' என்ற ஒரே காரணத்தால்!''

இவ்வாறான அரசரின் தீர்ப்பைக் கேட்ட சபையினர், அனுதாபம் நிறைந்த இரகசியக் குரலில் பேசத் தொடங்கினர். இரண்டாம் அமைச்சராக இருந்த ஒரு பெரியவர் எழுந்து நின்று, ''மகா பூபதி! தங்களது தீர்ப்பை மீண்டும் தீர்க்காலோசனை செய்ய வேண்டுகிறேன்!'' என்றார்.

அரசரின் முகத்தில் அப்பொழுது கண்டிப்பே மிகுந்திருந்தது. அவர் கம்பீரத்துடன் சபையை நோக்கி, ''விக்கிராந்தனின் அரசாட்சியில் மன்னனுக்கும் மக்களுக்கும் ஒரே சட்டம்தான்! அதை மாற்ற இயலாது!'' என்றார்.

அப்பொழுது திடீரென வெளிப் புறத்தில் பலவிதமான சப்தங்கள் எழுந்தன. ஏதோ ஒரு வகையான ஆரவாரங்களும்கேட்டன. ஒரு ராஜ சேவகன் சபையின் நடுவே வந்து நின்று, ''மகாராஜா! ராஜகுமாரர்கள் இருவரும் வந்து விட்டனர். தங்களது தமக்கையார் ராணி நளினிதேவி அவர்களும் வந்திருக்கிறார்கள்!'' என்றான்.

சேவகன் கூறிய செய்தியால் அப்பொழுது சபையில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. ராணி நளினிதேவியின் வருகையைப் பற்றிய செய்தியொன்றே அரசரை மிகுந்த வியப்புக் கடலில் ஆழ்த்திற்று.

அவர் சபையை விட்டு எழுந்து வேகமாகச் சென்றார். அவரைத் தொடர்ந்து சபையிலிருந்த அனைவருமே சென்றனர்.

அரண்மனையின் வெளிப்புறத்தில் நின்று கொண்டிருந்த ரதத்தில் ராணி நளினியையும், ராஜகுமாரியையும் கண்டவுடன் அரசரின் முகத்தில் பெருமகிழ்ச்சி தோன்றியது. அவர் தம் கைகளைச் சைகையுடன் உயரே தூக்கியதைக் கண்ட சேவ





கர்கள். "ராணி நளினாதேவி அவர்களுக்கு ஜே!" என்று மூன்று முறைகள் கோஷமிட்டனர். அரசர் ரதத்தின் சமீபத்தில் வந்து, ராணியை வணங்கிய வண்ணம் அன்புடன் வரவேற்றார்.

ரதத்தை விட்டு ராணி கீழே இறங்கியதும் ராஜகுமாரியான மேகலாவும் மறுபுறம் வழியாகக் கீழே இறங்கினாள். பிறகு, விஜயன் கீழே இறங்கிக் கொண்டு தன் மீது சாய்ந்தவண்ணம் இருந்த விமலனையும் கீழே இறக்கி விட்டான். இப்பொழுது தான் அரசரின் கண்கள் அவர்கள் பக்கம் திரும்பின. அரசரும் மற்றோரும் திடுக்கிட்டவாறே, "இதென்ன? விமலனுக்கு என்ன ஆபத்து?" என்றனர்.

ராணி நளினா சைகையின் மூலம் பின்னிட்டுக் கூறுவதாகச் சொல்லவும், அவர்கள் வியப்புடனேயே பார்த்தனர்.

விமலனின் கிழிந்த உடைகளையும், இரத்தக் காயங்களையும் கண்டோர் அனைவரும், கவலையுடன் பேசிக் கொண்டனர்.

அரசர் திடுக்கிட்டு ஒரு கணம் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போனார். அடுத்த கணம் "யார் அங்கே?" என்று அதிகாரக் குரலில் கேட்டார்.


அங்கிருந்த அத்தனை பேரும், "இதோ!" "இதோ!" என்று ஓடோடியும் வந்தனர்.

"உடனே அரண்மனை வைத்தியரை அழைத்து வாருங்கள். விமலனுக்கு வேண்டிய வைத்திய உதவிகளை விரைவில் ஏற்பாடு செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார்.

விமலனுக்கு அரண்மனை வைத்தியர்களால் அவசரச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவனது உடலிலிருந்த காயங்களுக்கு மருந்து தடவி அவனைத் தனிமையான படுக்கையில் கிடத்தியிருந்தனர்.

ராஜகுடும்பத்தினர் அனைவரும் ஒரு தனிமையான அறையில் சந்தித்தனர். அரசர் தம் தமக்கையாரையும் அவளது மகளையும் வெகுவாக உபசரித்து அவளது க்ஷேமலாபங்களைப் பற்றியும் விசாரித்தார். ராணி நளினாவும் அநேக விஷயங்களைக் கூறிய பின்னர், ராஜகுமாரனைக் காட்டில் சந்தித்த விவரங்களையும் கூறினாள். விஜயன் காணாமற் போன தினத்திலிருந்து அன்றைய ராஜசபை நடவடிக்கை வரையில் ஒன்று விடாமல் அரசரும் கூறினார். இவைகளைக் கேட்ட ராணி மிகுந்த அதிசயமும், துயரமும் கொண்டாள். முடிவாக அரசர், தமது தமக்கையாரை மறுநாளும் தங்கி, ராஜாங்க ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். ராணியும் அதற்குச் சம்மதித்தாள்.

இரவு நெடுநேரம் வரையில் தமக்கையாரான ராணி நளினாதேவியும், தம்பியான விக்கிராந்தரும் அளவளாவிப் பேசிய வண்ணம் இருந்தனர்! (தொடரும்)



உங்கள் கடிகார வியாபாரியிடம் 50,000 திறமைவாய்ந்த வேலையாட்கள் இருக்கின்றனர்

உங்கள் கடிகார வியாபாரி ஒற்றை ஆளாக தன் ஷாப்பில் வியாபாரம் செய்கிறார் என்று நீங்கள் எண்ணலாம். தவிர அவரிடம் எத்தனை பேர் வேலை செய்கிறார்களென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்-கண்களுக்குத் தென்படாமலிருக்கலாம். ஆனால் 50,000 திறமை வாய்ந்த வேலையாட்கள் பின்னணியிலிருந்து தேவையானபொழுது கடிகார வியாபாரிக்கும் உங்களுக்கும் உதவியளிக்க ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். ஜுவெல்ட்—லீவர் கடிகாரம் செய்வதில் விசேஷ பயிற்சி பெற்ற இந்த 50,000 கைத்திறன் வாய்ந்த நிபுணர்கள் ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மூன்று நூற்றாண்டுகளாக கடிகாரத் தொழிலில் பாரம்பரியமாக ஆர்வம் செலுத்துவதால் அவர்களுடைய ரத்தத்திலேயே ஊறிக் கிடக்கின்ற இயற்கையான அறிவுத் திறன் சிறு விஷயங்களையும் நுணுக்கமாக ஆராயும் தன்மை இவைகளால் உலகிலேயே ஸ்விட்ஸர்லாந்து கடிகாரங்கள் பெயர் பெற்றவையாகிவிட்டன. தயாரிப்பாளரிடமிருந்து அணிபவரின் கையை அடையும் வரை, கடிகாரங்களை திறமை சாலிகளும், கவனமுள்ளவர்களும் கையாண்டு வருவதை ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத் தொழில் அதிபர்கள் கண்காணித்து வருகிறார்கள். ஆதலால்தான் இந்த 50,000 நிபுணர்களும் தங்களுடைய உதவியையும் ஆதரவையும் தகுதிவாய்ந்த கடிகார வியாபாரிக்கு அளிக்கின்றனர். எனவே சிறந்த கடிகாரங்கள் எவை என்பதை உங்கள்கடிகார வியாபாரி ஒருவர் மட்டுமே எடுத்துச்சொல்ல முடியும். சிறந்த கடிகாரத்தை தேர்ந்தெடுக்க வழிகாட்டியாக விளங்குவதோடு உங்களுக்குத் தேவையானபோது பயனளிக்கக் கூடிய முறையில் பணி ஆற்றுவார் என்பதும் நிச்சயம், உங்கள் கடிகார வியாபாரியின் அனுபவம் உங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

ஜுவெல்கள் பொருத்தப்பட்ட ஸ்விஸ்—லீவர் கடிகாரம் ஒரு அவசியமான தேவைப் பொருளேயன்றி ஆடம்பரத்திற்கல்ல

ஸ்விட்ஸர்லாந்து கடிகார தயாரிப்பாளர்கள்

FHI-24-TAM



இசை விழாவில் தெய்வக் குழல்

சாவி

நேற்று முன்தினம் என்னைத் தேடி வந்த சங்கீத ரசிகர் ஒருவரைப் பார்த்து, "தாங்கள் திருமருகல் நடேசபிள்ளையின் நாதசுரம் கேட்டிருக்கிறீர்களா?" என்றேன்.

"பல தடவை கேட்டிருக்கிறேன். அற்புதமாக வாசிப்பாரே!" என்றார் அவர்.

"செம்பொனார் கோயில் ராமசாமி?...."

"அடாடா! அவர் குழலை எடுத்தால் நம் தலை சுழலும்!"

"நாகூர் சுப்பையாவின் வாசிப்பு!"

"ஆண்டவனுக்கே அர்ப்பணம்.."

"திருவிடைமருதூர் சிவக்கொழுந்து மதுரை பொன்னுசாமி, மன்னார்குடி சின்னப் பக்கிரி, கீரனூர் சகோதரர்கள் இவர்களை.."

"கேட்காமலிருக்க முடியுமா? தெய்வாம்சம் பொருந்திய வாசிப்பல்லவா....?"

"..!..!..!..!"

"என்ன ஆச்சரியப்படுகிறீர்கள்?" என்று கேட்டார் ரசிகர்.

"இல்லை; இவர்களெல்லாம் முன் தலைமுறையைச் சேர்ந்த பழைய வித்வான்களாயிற்றே. இவர்களைத் தாங்கள் எப்படிக் கேட்டிருக்க முடியும் என்று தான் ஆச்சரியப் படுகிறேன்" என்றேன்.

"நான் கேட்டதாக உமக்கு யார் சொன்னது? இவர்களுடைய வாசிப்பை நேரில் கேட்டவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்" என்று ஒரு போடு போட்டார் அந்த ரசிகர்.

பின்னோடு அந்த ரசிகர் "ஆமாம், தாங்கள் இந்த சீஸனில் நடந்த நாதசுரக் கச்சேரிகளையெல்லாம் கேட்டீர்கள் அல்லவா!" என்றார்.

"ஆமாம்; செவியாரக் கேட்டேன்."

"ஏது? இந்த வருஷம் நாதசுர வாத்தியத்துக்கு யோக காலம் போலிருக்கிறதே! கச்சேரி விவரங்களை எனக்குக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல வேணும்" என்றார்.

"எப்படிச் சொல்ல வேண்டும்? சொல்லும் போது சங்கீதத்தில் எனக்குள்ள வித்வத் திறமையைக் கொஞ்சம் காட்டிக்கொள்ளலாமா? அல்லது சாதாரணமாகப் புரியும்படி எளிய முறையிலேயே சொல்லட்டுமா?"

"வித்வத் திறமையோடு சொல்லுவது எப்படி?" என்று கேட்டார் ரசிகர்.

"சங்கீத வித்வான் கல்யாணி ராகத்தில் அசைவு இல்லாத காந்தார ஸ்வரத்தைப் பிடித்தது சம்பிரதாய விரோதமாயிருந்தது."

"....உம்; அப்புறம்?"

"பல்லவியைக் கண்ட ஜாதித் திருபுடையில் பாடியதற்குப் பதிலாக சதுச்ர ஜம்பைத் தாளத்தில் பாடியிருக்கலாம்."

"ஐயா! போதும் போதும்! சாதாரணமாகப் புரியும்படி சொல்லுவது எப்படி?...." என்று கேட்டார் ரசிகர்.

"சில மரங்கள் இலை என்பதே இல்லாமல் பூமயமாய்க் குலுங்குவதைப் பார்த்திருக்கிறோம். அந்தப் புஷ்பங்கள் தென்றல் வீசும்போது பொல பொல வென்று கீழே உதிர்வதையும் கண்டிருக்கிறோம். அன்றையக் கச்சேரியில் வித்வான் தோடிராக ஆலாபனையில் உதிர்த்த பிர்க்காக்கள் எனக்கு மேற்கண்ட இனிய காட்சியையே நினைவூட்டின!"

"பலே, பலே! இதுதான் எனக்குப் புரிகிறது. இந்த முறையிலேயே விமரிசனம் மேலே நடக்கட்டும்" என்றார் ரசிகர்.

* * *

மியூஸிக் அகாடமி என்னும் சங்கீத வித்வத் சபையின் ஆரம்ப விழாவன்று இவ்வருஷ மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திருவீழிமிழலை சகோதரர்கள் நாதசுரம் வாசித்தார்கள். பழைய வழியை அனுசரித்த சம்பிரதாயமான வாசிப்பு. மூச்சு வாங்கி விடுவது உள்படச் சகோதரர்கள் இருவரும் ஒரு கட்டுப்பாட்டோடு இருக்கிறார்கள். தந்தையார் தொடங்கிய கச்சேரியைச் சிறிது நேரத்துக்கெல்லாம் திரு சுப்பிரமணியபிள்ளையின் குமாரர்களான திரு கோவிந்தராஜனும் திரு தட்சிணாமூர்த்தியும் தொடர்ந்து வாசித்தார்கள். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? இவ்விரு இளைஞர்களுடைய வாசிப்பில் நல்ல கவர்ச்சி இருந்தது. தவில் வாத்தியத்தில் புகழ் பெற்று விளங்கும் நாச்சியார் கோயில் ராகவபிள்ளையின் வாசிப்பும் சேர்ந்து அன்றையக் கச்சேரி முதல்தரமாக அமைந்தது. கல்யாணி, ஆனந்த பைரவி, மாயாமாளவ கௌளை, தரங்கிணி முதலிய ராகங்களில் கீர்த்தனங்கள் கம்பீரமும் அழகும் பொருந்தி விளங்கின. ராகமாலிகையில் பந்துவராளியையும் கானடாவையும் அமோகமாகக் கையாண்டு, கடைசி கடையாகத் திருப்புகழ் வாசித்துப் பெரும் புகழ் பெற்றார்கள். நவீன கால மோஸ்தர்களைப் புகுத்திச் சம்பிரதாயமான கர்நாடக பாணியைக் கெடுக்காமல் கட்டுப்பாடுடன் வாசிக்கச் செய்துள்ள






சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற சங்கீத விழாக்களில் நாதகர வித்வான்கள் பலர் கலந்துகொண்டு இன்னிசை பொழிந்தார்கள். இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சபை விழாவில் இம்மாதம் இரண்டாம் தேதி இரவு ஒரு மாபெரும் நாககர இசை விழாவே நடைபெற்றது. பல குழல் இசைவாணர்கள் ஒரே மேடையில் சேர்ந்தாற் போல் அமர்ந்து தனித் தனியாக வாசித்த காட்சிகளைப் படத்தில் காணலாம்.

1. காருகுறிச்சி திரு அருணாசலம். 2. மதுரை எம். பி. சேதுராமன், எம். பி. பொன்னுசாமி, 3. இஞ்சிக்





குடி [illegible] கண்ணும் அவர் குமாரரும். 4. செம்பனார்கோவில் எஸ். ஏ. [illegible] கோஷ்டி. 5. திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை ஜோடி. 6. திருவிடைமருதூர் விருபாக்ஷப் பிள்ளை கோஷ்டி. 7. தவில் வித்வான் வெங்கடேசன். 8. திருவீழிமிழலை சகோதரர்கள். 9. சின்னமனூர் வி. வி. கணேசன் கோஷ்டி. 10. குழிக்கரை பிச்சையப்பா கோஷ்டி. 11. திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளையின் குமாரர்கள் கோவிந்தராஜன், தட்சிணாமூர்த்தி. 12. மன்னார்குடி எஸ். பரமசிவம் பிள்ளை ஜோடி.



போட்டோ: விச்

பெருமை, இவர்களுடைய தந்தையரையே சேரும். தந்தையரின் கண்காணிப்பில் தன யர்களின் கீர்த்தி சீக்கிரமே பரவிப் பெருகும் என்று எதிர்பார்க்கிறேன்.

இவ்வருஷம் அகாடமியார் ஆரம்பவிழாவை நாதசுரக் கச்சேரி மூலம் தொடங்கியது போலவே, முடிவையும் மங்கள வாத்தியத் துடன் மங்களகரமாக முடித்தார்கள். கடைசி நாள் அன்று குழிக்கரை திரு. பிச்சையப்பா கச்சேரி நடைபெற்றது அன்று அவர் எடுத் துக்கொண்ட ராகங்கள் அவருக்குப் போதிய புகழைத் தேடித் தரவில்லை. ரசிகர்களின் காதுக்கு அதிகப் பழக்கமில்லாத நளின காந்தா போன்ற ராகங் களைப் பாடாமல் தோடி ஷண்முகப்பிரியா போன்ற நாதசுரத்துக்கு ஏற்ற ராகங்களை வாசித்துக் கச்சேரியைச் சோபித மாக்கி யிருக்கலாம். அன்றும் திரு ராகவ பிள்ளை தான் தவில் வாசித்தார். அவர் தவில் தான் வாசித்தாரா? அல் லது ஏதாவது இந்திர ஜால வித்தைகள் புரிந் தாரா என்று அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள். அவர் தவில் வாசிக்கும் போது எழும் ஒலிகளில் தான் எத்தனை விதமான இனிமை! ஒரு சமயம் உடுக்கையின் சத்தத்தைக் கேட்கிறோம்! ஒரு சமயம் சரத்காலமாரியின் ஓசை-யைக் கேட்கிறோம். ஒரு சமயம் மேகம் கர்ஜிக்கிறது. ஒருசமயம், புறாக்கள் 'குடு குடு' என்கின்றன! இடி இடிக்கிறது! அலைகள் சப்திக்கின்றன! பூமி அதிர்கிறது! ஆலாட்சி மணி கணகண வென்று ஒலிக்கிறது! சங்க பேரிகைகள் 'ஜாம் ஜாம்' என்று பிரமாத மாக முழங்குகின்றன!



நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

தமிழிசை விழாவிலும், பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியிலும் திருவெண்காடு சுப்பிர மணிய பிள்ளை வாசித்தார். அவர் வாசிப் பில் ராகத்தின் பூர்ணமான தொடர்ந்த ரூபத்தைக் காண முடியவில்லை. அவர் துண்டுத் துண்டாக வாசிக்காமல், ராகங்களைச் சிதைக்காமல் அனுஸ்வரங்களோடு வாசித் தால் அவருக்கு உரிய வழியில் அவை சோபித மாக இருந்திருக்கும். தவிர நாதசுரத்துக்குத் தம்புரா சுருதி அவசியம்தானா என்ற கேள்வி யும் எழுகிறது. நாதசுர வாத்தியம் இசைக் கருவிகளிலேயே ராஜவாத்தியமாகக் கருதப் படுகிறது. இதற்குள்ள காம்பீர்யமும், கவர்ச்சியும், நெடுந் தூரம் வரை கேட்கக் கூடிய நாதமும் வேறெந்த வாத்தியத்துக் கும் கிடையாது. அந்தக் கம்பீரமான வாத்தி யத்தைத் தம்புரா சுருதிக்குள் அடக்கிக் கட்டுப்படுத்துவது எதற்கு என்றுதான் தெரிய வில்லை. ஸிவாளி பொருத்திய நாதசுரத்துக்கு ஏற்ற ஒத்து ஸிவாளி சுருதிதான். தம்புரா சுருதி விஷயத்தில் நீண்ட காலமாகவே அபிப் பிராய பேதம் இருந்து வருகிறது. இவ்வருஷ வித்வத் சபைக்குத் தலைமை தாங்கிய பிரபல நாதசுர வித்வான் திருவீழிமிழலை சுப்பிர மணிய பிள்ளை, நாதசுரத்துக்கு மற்ற ஒத்து வாத்தியங்கள் ஒத்துவராது; ஸிவாளி பொருத் திய நாதசுர சுருதிதான் பொருத்தம் என்ப தற்கு ஆதார பூர்வமான காரணங்களை விளக்கிக் கூறியுள்ளதைத் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை கவனித்திருக்க வேண் டும். ஆயினும் அவரும் பல காலமாகவே தம்புரா சுருதியை விடாமல் பிடிவாதமாக வைத்துக் கொண்டுதான் இருக்கிறார். ஆகவே இனி அவருடைய சுய உரிமையில் நாம் தலையிடவேண்டியதில்லை என எண்ணுகிறேன்.

சென்ற டிசம்பர் மாதம் 28-ந் தேதி யன்று இரவு தமிழிசையில் காருகுறிச்சி அருணாசலம் கச்சேரி செய்தபோது காலஞ் சென்ற திருவாவடுதுறை ராஜரத்தினமே நேரில் வந்து வாசித்தது போல் பிரமை தட்டியது.

இவர் திருவாவடுதுறை யின் சீடர் என்று கேள் விப்படுகிறேன். அது உண்மையானால் திரு அருணாசலம் வாசிப்பைக் குறித்து வியப்படைவ தற்கு ஒன்றுமில்லை. அன்று இவர் வாசிப்பை நேரில் கேட்டவர்களும், ரேடி யோவில் கேட்டவர்களும் எல்லாருமே பாராட்டி ஞர்கள். இரவு ஒன்பதரை மணிக்குத் தொடங்கிய கச்சேரி சரியாக இரண்டு மணி வரை நடை பெற்றது. அன்று இவர் தம்முடையதேனருவி போன்ற தெய்வக் குழலிசையால் மண்டபம் முழுவதையும் நாத வெள்ளத்தில் நிரப்பி விட்டார். பல்லவிக்கு எடுத்துக் கொண்ட ஷண்முகப்பிரியாவில் கீழேயே வெகு நேரம் நின்று விஸ்தாரமாகச் சஞ்சாரம் செய்தார். பிறகு மெள்ள மெள்ள மேலே போய் மேல் பஞ்சமத்தை எட்டியபோது நாதம் கட்டுப் படாமல் வழுக்கிப் பிசிறியது.

அப்புறம் கரகரப்பிரியா ராக ஆலாபனை செய்து சக்கனிராஜா கீர்த்தனம் தொடங் கியதும், ரசிகர்கள் மெய்ம்மறந்து பரவச மானார்கள். பிறகு, ரஞ்சனி ராகம் பாடி ரஞ்சகமாய் முடித்தார். இதற்குள் மணி இரண்டாகி விடவே மங்களம் பாடினர். மண்டபத்தை விட்டு வெளியே சென்ற ரசிகர்கள் "ராஜரத்தினம் மறைந்த தவ் டத்தை அருணாசலம் பூர்த்திசெய்துவிட்டார்" என்று பேசிக் கொண்டே போனார்கள்.

* * *

தற்சமயம் முன்னணியில் உள்ள நாதசுர வித்வான்கள் பலருடைய கச்சேரிகளும் இவ் வருஷ இசை விழாக்களில் கேட்கும் வாய்ப்பு ரசிகர்களுக்குக் கிட்டியது. ஆயினும் நாதசுரக் கலையில் முன்னுக்கு வந்துள்ள பல இளைஞர் களின் வாசிப்பை பைன் ஆர்ட்ஸ் சொஸைட் டியில்தான் கேட்க முடிந்தது. அங்கே பிரபல

நாதகரக் கலைஞர்களுடன் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் நாதகரஇளைஞர்களும் சேர்ந்து அமர்ந்து வாசித்தார்கள். ஒவ்வொருவரும் நேரத்தைப் பங்கிட்டு செய்து தனித் தனியாக வாசித்துப் பரவசமூட்டினார்கள். எல்லாவற்றையும்விட எல்லா நாதகர வித்வான்களும் சேர்ந்து ஒரே மேடையில் தோன்றிய காட்சியை என்றென்றும் மறக்க முடியாது. திருவிடைமருதூர் வீருசாமி, திருவெண்காடு சுப்பிரமணியம், குழிக்கரை பிச்சையப்பா, மதுரை பொன்னுசாமி, சேதுராமன், செம்பனார் கோயில் ராஜரத்தினம், நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன், சின்ன மனூர் கணேசன், மன்னார்குடி பரமசிவம், இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு இவ்வளவு பேரும் மேடையில் ஏறிப் பெரிய இடநெருக்கடியை உண்டாக்கினார்கள். அன்று மதுரை சேதுராமன், பொன்னுசாமி இவ்விருவருடைய வாசிப்பும், நாமகிரிப் பேட்டை கிருஷ்ணனுடைய வாசிப்பும் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றன. இவர்களுடைய குழல் நாதம் தனிக் கவர்ச்சியுடன் இருந்ததோடு வாசிப்பும் அமோகமாக அமைந்தது. நாமகிரிப் பேட்டை கிருஷ்ணனைப் பற்றி ஒரு வார்த்தை. இவர் அன்று கையாண்டது சாதாரணமாக இப்போதைய நாதகர வித்வான்கள் கையாளும் பாரி நாயனம் அல்ல. பழமையான 'எச்' சுருதி கொண்ட திமிரி நாயனத்தையே கையாண்டார். இவர் வாசித்த திமிரி நாயனத்தின் நாதம் கம்பீரமாகப் பளிச்சென்று ஒலித்தது. ஆயினும் அன்று இவர் இந்தச் சிறிய வாத்தியத்துக்குரிய சீவாளியை உபயோகப் படுத்தாமல் பாரி நாயனத்துக்குரிய பெரிய சீவாளியை உபயோகித்தார். இதனால் திமிரியின் இயற்கையான இனிய நாதம் ஆங்காங்கே சோபிக்காமல் போய் விட்டது. ஆயினும் பழமையான திமிரி நாயன முயற்சியைப் பெரிதும் பாராட்டவே வேண்டும்.


திரு ராகவ பிள்ளை (தவில்)

இவ்வருஷ சங்கீத விழாவில் தமிழகத்தின் தனிப் பெரும் வாத்தியமான தெய்வக்குழல் இசைக்குத் தனி கௌரவமும் பெருமையும் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சி அடைகிறோம்.


கடைத்தெரு செல்வோர்
முதலில் ஆடைகளே
வாங்குகின்றனர்...
FABRICS...
பிரகாசமான, வசீகரமான புதிய பிரிண்டுகளுடன் கூடிய புகழ்பெற்ற உயர்ந்த ரக ஆடைகள், எங்கு பார்த்தாலும் நாரீமணிகளின் மனத்தை ஆகர்ஷிக்கின்றன. அடுத்த தடவை நீங்கள் ஆடைகள் வாங்கச் செல்லும் போது, மொரார்ஜி ஆடைகளையே கேளுங்கள்.
கடைசியாக
மொரார்ஜி
ஆடைகளே
வாங்குகின்றனர்...
Morarjee
FABRICS
வாயில்கள் • புடவைகள் • பிரீன்டுகள் • பிளானல்கள் , பாப்ளின்கள்
ஷர்டிங்குகள் • ஸூட்டிங்குகள் • டிரில்கள் • லாங்க்ளாத் • வேஷ்டிகள்
ஸ்ரீ மொரார்ஜி கோகுல்தாஸ் ஸ்பின்னிங் & வீவிங் கோ., லிட்.
பரேல், பம்பாய் - 12
மானேஜிங் ஏஜண்டுகள்: பிரமால் & சன்ஸ்
MG-2

கடல் கண்ட கனவு

இருபத்தாறும் அத்தியாயம்

கனவின் அலைகள்!


சித்தன்னை வாசல் துறவி தம்முடைய பேச்சுக்குப் பூர்வாங்கமாகக் கீழ்க்கண்டவாறு பாடத்தொடங்கினார்.

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"

இந்த வார்த்தைகளை உரக்கப் பாடாமல் பரிசுத்தமான இசையோடு மந்திரங்களை உச்சரிப்பது போல ஓதினார் துறவி. பூபதி திகைப்போடு அந்த வார்த்தைகளைக் கேட்டான்.

"என்ன பூபதி! திடீரென்று நான் பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டேனே என்று பார்க்கிறாயா? எனக்கும் கொஞ்சம் பாட்டு வரும். அதோ தள்ளி நடந்து போய் நிற்கிறாரே இசைத் துறவி, அவருக்கும் சங்கீதத்தில் அபாரமான ஞானம் உண்டு. நான் ஒரு சமணத் துறவியாயிற்றே, அதனால் ஏதோ சமண சமயத்தை யொட்டி ஒரு துறவுப் பாடலை உன்னிடம் சொல்கிறேன் என்று நினைக்காதே. நான் பாடிய பாடலுக்கும் சமண சமயத்துக்கும் சம்பந்தமே இல்லை. உண்மையில் நான் பாடியது ஒரு பாடலே இல்லை. அது ஒரு சூத்திரம். அதிலும் இலக்கணச் சூத்திரம்! நமது தமிழ் இலக்கணத்திலே வருகிற சூத்திரம்!" என்றார் துறவி. இந்த இடத்தில் உதயசந்திரன் குறுக்கிட்டுப் பேசினார்.

"துறவியாரே! இலக்கண நூலிலே வருகிற சூத்திரந்தான்! என்றாலும் அந்தச் சூத்திரத்தைப் பாடியவர் யார்? சாமானியமான மனிதரா? தொல்காப்பியர் அல்லவோ பாடினார் அந்தப் பாடலை! வெறும் இலக்கணத்தைச் சொல்ல வந்த புலவர் தம்மையும் மறந்து அற்புதமான ஒரு கவிதையை யல்லவா பாடி விட்டார் அந்த அடிகளிலே! பஞ்ச பூதங்களினால் ஆகிய இந்த உலகத்தை எத்தனை அருமையாக வர்ணித்து விட்டார்! கலந்த மயக்கம் என்ற அந்த இரண்டு வார்த்தைகளுக்குள்ளேதான் எத்தனை ஆழமான பொருள் இருக்கிறது, பார்த்தீர்களா?" என்றார் உதயசந்திரன்.



பூபதிக்கு இந்தச் சர்ச்சையிலே மனம் செல்லவில்லை. மருண்டு மருண்டு பார்த்தான். சித்தன்ன வாசல் துறவி பூபதியைப் பார்த்துச் சொன்னார்:

"பூபதி! ஆத்திரப்படாதே! உனக்குச் சம்பந்தமில்லாத ஒரு விஷயத்தை நாங்கள் பேச மாட்டோம். ஆகையால் கொஞ்சம் பொறுமையாகக் கேள்! தொல்காப்பியர் என்ற மகான் ஒரு இலக்கண விதியைச் சொல்ல வந்த சூத்திரத்தில், இந்த உலகின் மயக்கத்தை இத்தனை அழகான சொற்களின் மூலம் தெளிவுபடுத்துகிறார். ஐந்து விதமான பூதங்கள் சேர்ந்தது இந்த உலகம் என்று சொல்ல வந்தவர் அதை ஐந்தும் கலந்த மயக்கம் என்கிறார்! வானமும் காற்றும் நெருப்பும் தண்ணீரும் பூமியும் நமக்குத் தெரியும் விதத்தில் நமக்கு முன்னால் தோன்றி வருகின்றன. இவை கலவை. ஆனால் இந்த ஐந்தும் நம்முடைய உடம்புக்குள்ளும் சேர்ந்து அமைந்திருக்கின்றன! இந்த விஷயம் நமக்குத் தெரிகிறதோ? இல்லை! இது மயக்கம்! எனவே உலகம் என்பது நம்முடைய கண்ணுக்குத் தெரிகிற கலவை மட்டுமில்லை! நம்முடைய கண்ணுக்குத் தெரியாத மயக்கம் இருக்கிறதே அந்த மயக்கமும்சேர்ந்ததுதான் உலகம்! இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இது வரை நீ கண்ணுக்குத் தெரிகிற உலகத்தைப் பார்த்து முடித்து விட்டாய்! கடல் கடந்து செந்தமிழ் நாட்டுக்குச் சென்றதன் பயனாக இந்த உலகக் கலவையை நன்றாகக் கண்டு கொண்டு விட்டாய்! ஆனால் ஐந்தும் கலந்த உலக மயக்கத்தை எத்தனை தூரம் கண்டு தெளிந்திருக்கிறாய் என்பதைப் பற்றி நீ சிந்தித்துப் பார்க்க வேண்டும்!"

இப்படி ஒரு பெரிய புதிரைப் போட்டார் துறவி. பூபதி சொன்னான்:

"பெரியவரே! சித்தன்ன வாசல் மலையிலேயிருந்து என்னோடு பேசிய போது இப்படியெல்லாம் நீங்கள் தத்துவம் பேசவில்லை! எனக்குப் புரிகிற விஷயங்களை எனக்குப் புரிகிற முறையில் எடுத்துச் சொன்னீர்கள். ஆனால் இப்பொழுது இலக்கணச் சூத்திரங்களுக்குள் எல்லாம் என்னை இழுத்தடிக்கிறீர்களே! உண்மையில் நீங்கள் சொல்கிற கலப்பும் மயக்கமும் என் மூளையைத்தான் கலக்கியடிக்கின்றன. தயவுசெய்து விஷயத்தைச் சொல்லுங்கள்!"

இப்படிக் கூறினான் சித்திராங்கபூபதி. துறவி சிரித்தார்! உதயசந்திரனும் புன்முறுவல் செய்தார். புன்முறுவல் செய்தவாறே துறவியைப் பார்த்து உதயசந்திரன் சொல்லுவார்:

"பூபதியைக் கலங்க வைக்காமல், இவனுடைய மயக்கத்தைத் தெளிய வையுங்கள், துறவியாரே!"

உதயசந்திரன் இப்படிச் சொன்னதும் இசைத் துறவி நேரடியாக விஷயத்துக்கு வந்தார். சொன்னார்:

"பூபதி! உன்னுடைய மனத்தில் சந்திரசூடனின் வரலாறு நன்றாகப் பதிந்திருக்கிறது. எனவே சந்திரசூடனிடத்தில் உனக்கு வெறுப்பு இருக்க வேண்டியது நியாயம். ஆனால் அது எந்த அளவில் இருக்கிறது என்பதை இப்பொழுதே என்னிடம் கூறுகிறாயா?" என்று கேட்டார் துறவி.

"ஐயா! என்னுடைய தாய் நாட்டுக்கு அத்தனை பெரிய துரோகத்தைச் செய்து விட்ட சந்திரசூடனிடம் எனக்கு ஆரம்பத்தில் கோபமும் ஆத்திரமும் உண்டானது உண்மை. ஆனால் அந்த வெறுப்பும் ஆத்திரமும் ஏனோ என் உள்ளத்தில் இப்பொழுது தீவிரமாக ஏற்படவில்லை! என்னையும் மீறிச் சந்திரசூடனிடத்தில் எனக்கு அநுதாபமே உண்டாகிறது!" என்றான் பூபதி. இந்த இடத்தில் உதயசந்திரன் குறுக்கிட்டார்.



"உண்மை பூபதி! அதிலும் யாழ் நங்கையின் தந்தை சந்திர

கூடன்தான் என்று தெரிந்த பிறகு, கொஞ்ச நஞ்சம் இருந்த ஆத்திரமும் அடியோடு போய் விட்டது! சந்திரகூட னிடம் ஒரு காதலே உண்டாகி விட்டது! அப்படித்தானே?''

சித்திராங்க பூபதிக்குக் கோபம் உண் டாக்க வேண்டும் என்ற நோக்கத்துட னேயே பேசியது போல் இருந்தது. உதயசந்திரனின் வார்த்தை! பூபதிக் குக் கோபம் வந்தது! ஆனாலும் உதய சந்திரனுடைய முகத்தைப் பார்த்ததும் அந்தக் கோபம் எல்லாம் உள்ளத்துக் குள்ளே பதுங்கியது. இந்த உணர்ச்சிக் குமைப்பிலே பூபதி பேசினான்:

''அமைச்சர் திலகமே! தேசபக்தி என்பதுதான் எது? சாருகேசிக்குத் தன்னுடைய தாய்நாடான வலம்புரித் தீவிலிடத்தில் அளவற்ற தேசபக்தி யிருந்தது. அதனால் அவள் இந்தத் தீவி லிருந்து பேரியாழ் மறைந்து விட்டதே என்று துடிதுடித்தாள்! சந்திரகூடனின் மன நிலை எப்படி? சந்திரகூடனுக்குத் தன்னுடைய அரசனிடத்திலும் தன்னு டைய நாட்டிலும் அளவற்ற தேசபக்தி யிருந்தது! அதனால்தான் அவர் பேரியா ழைத் தூக்கிக் கொண்டு தம்முடைய தாய்நாட்டுக்கு ஓடினார்! அவருடைய செயலுக்குக் காரணமும் தேச பக்தி தானே? ஆகையால் தேசபக்தி நிறைந்த சந்திரகூடனை நான் ஏன் வெறுக்க வேண்டும்?''

இவ்வாறு வீராவேசமாகப் பேசினான் பூபதி. இந்தப் பேச்சு துறவியின் உள்ளத்தை உருக்கியது. அந்த உருக் கத்தினூடு அவர் சொல்லுவார்:

''சித்திராங்கா! உன்னுடைய அன்பு உள்ளத்தை உருக்குகிறது. ஆனாலும் உணர்ச்சிகளைக் கடந்து நின்று உண்மை யைப் பார்க்க வேண்டும். அதுதான் தர்மம். இந்த உலகில் நல்ல காரியம், தீய காரியம் இரண்டுக்குமே ஒவ்வொரு வகையான அன்பும் பக்தியுந்தான் காரணமாக அமைகின்றன. அதனால் எல்லாவிதமான அன்பையும் நியாய மான அன்பு என்று கூறிவிடக் கூடாது. சாருகேசிக்குத் தன்னுடைய நாட்டி னிடம் இருந்த அன்பு தர்ம நியாய மானது. ஆனால் சந்திரகூடனுக்குப் பேரியாழிடத்தில் இருந்த அன்பு விபரீத மானது. சாருகேசிக்குப் பேரியாழிடத் தில் இருந்த பாசம் உரிமையும் நியாய மும் நிறைந்தது. இரண்டையும் ஒன்று போலக் கருதி ஒப்பிடுவது தவறு. உண்மையில் சந்திரகூடனை என்னால் மன்னிக்கவே முடியாது. அவன்தான் இந்தத் தீவின் கேட்டுக்கே காரணம்.''

சித்தன்ன வாசல் துறவி இத்தனை கண்டிப்போடு பேசும்போது உதயசந் திரன் அவரைக் கையமர்த்தினார்.

''துறவியாரே! குற்றவாளியே நியா யாதிபதியாகவும் இருப்பது எந்த நாட் டிலும் எந்தச் சமூகத்திலும் இல்லை! சந்திரகூடனைப் பற்றியும் அவனுடைய குற்றத்தைப் பற்றியும் தீர்ப்புச்சொல்ல உங்களுக்கு அதிகாரம் இடையாது! அந்த அதிகாரம் சித்திராங்க பூபதிக்கும் இல்லை. ஏனென்றால் அவனும் இந்தப் பேரியாழ் வழக்கிலே சம்பந்தப்பட்ட வன்! எனவே என்னைப்போல் ஒரு மூன்றும் மனிதன்தான் இந்த விஷயத் தில் தீர்ப்புச் சொல்ல வேண்டும். என் னுடைய தீர்ப்பு என்ன வென்றால் ஒரு மனைவிக்கு வேறு எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியம் தன்னுடைய கண வன்தான்! தாய் நாட்டையும் விட முக்கியம் கணவன்தான்! நம்முடைய தமிழ்ப் பண்பாடு அதுதான்!

''தெய்வம் தொழாஅள்
கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை''

என்றல்லவா திருவள் ளுவர் பாடினார்! தெய்வத்தையும் விட முக்கியம் கணவன் தான் என்று சொல்லி விட்ட பிறகு, தேசம் எந்த மூலை? எனவே



தன்னுடைய தாய் நாட்டுக்காகக் கணவனையே வெறுத்த சாருகேசியை நான் பெரிதாகக் கருதவில்லை! அதே போலப் பேரியாழிடம் தன்னுடைய அரசன் பிரியப்பட்டான் என்பதற்காகச் சந்திரசூடன் வலம்புரித் தீவின் அழிவைக் கூடப் பொருட்படுத்தாமல், மனைவியையும் பொருட்படுத்தாமல் இரவுக்கு இரவே அந்தயாழைத் தூக்கிக்கொண்டு ஓடியதும் பெருந் தவறு! சாருகேசி தான் செய்த தவற்றுக்குப் பிராயச் சித்தமாகத் தனது உயிரையே தியாகம் செய்தாள்? அந்த உயிர்த் தியாகம் அவளை உத்தமியாக உயர்த்தி விட்டது. சந்திரசூடனோ தன்னுடைய தவற்றுக்குப் பிராயச்சித்தமாகக் கடலிலே அனாதையாக மிதந்த குழந்தையைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்து, பேரியாழ்ப் பயிற்சியிலேயே வளரும்படி குங்கும மாளிகையிலே சேர்த்தார். அதோடு இந்த வாழ்வையே துறந்து, பரம வைராக்கியத்தோடு அருக தேவனுடைய சரண கமலங்களிலே தம்மை அர்ப்பணித்து நின்றார். சதாவும் வலம்புரித்தீவின் புனர் வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்தார். அதோடு நிற்கவில்லை. இன்று பேரியாழும் சித்திராங்க பூபதியும் இந்தத் தீவுக்கு வந்து சேர்வதற்குக் காரணமாக இருந்தவரும் சந்திரசூடன் தான்! துறவியாரே! இப்படிப்பட்ட சந்திரசூடனை நான் எப்படி வெறுக்க முடியும்! சந்திரசூடனுடைய ஒத்துழைப்பு கிடைத்திருக்கா விட்டால், எனக்கு எப்படிக் குங்கும மாளிகையின் இரகசியங்கள் எல்லாம் தெரிந்திருக்கும்? பூபதி! நீயும் பேரியாழும் கரை சேர்ந்து விட்டதற்கு நன்றி செலுத்த வேண்டிய தருணம் இப்பொழுது வந்து விட்டது! இதோ நம் எதிரே வீற்றிருக்கும் சித்தன்னவாசல் துறவியான சந்திரசூடருக்கு உன்னுடைய நன்றியை இனி நீ செலுத்தலாம்! அதோ இசைத் துறவியும் உன்னை நோக்கி நடந்து வருகிறார் பார்! அவர் வேறு யாருமில்லை. தரங்கவல்லியை மணந்த பாண்டிய குமாரன்தான் இசைத் துறவியின் கோலத்திலே காட்சி தருகிறார்!"

மேகங்கள் விலகிப் பூரண நிலவு பொழிந்து கொண்டிருந்தது. கலங்கரை விளக்கிலிருந்து ஒளிக் கற்றைகள் கடலின் பரப்பிலே சிதறிக் கொண்டிருந்தன. அந்த ஒளி மயமான மணற் பரப்பிலே துறவிகள் இருவருடைய பாதங்களையும் தொட்டு வணங்கிக் கண்களிலே ஒற்றிக் கொண்டான் பூபதி. அந்த நீலக் கடல் இந்தக் காட்சியைக் கண்டு, தன்னுடைய எண்ணற்ற கனவுகளிலே ஒரு கனவு நனவாகி விட்டது போல எண்ணி ஓரே உற்சாகத்தில் அலைக் கைகளைக் கொட்டி முழக்கியது! அப்பொழுது உதயசந்திரன் பூபதியைப் பார்த்துச் சொன்னார்:

"சித்திராங்க பூபதி! இந்த வலம்புரித் தீவைச் சுற்றி வளைத்துக்கொண்டு கோஷம் இடுகிற இந்தக் கடல் வெறும் தண்ணீர்ப் பரப்பு என்று எண்ணி விடாதே. பஞ்ச பூதங்களும் கலந்த மயக்கமாகிய இந்த உலகத்தில் இந்தக் கருநீலக் கடலுக்குள்ளே பஞ்சபூதங்களும் ஒன்று சேர்ந்து இயங்குகிற ஒரு இதயம் இருக்கிறது! தமிழ் நாட்டு மன்னர்கள் மாட மாளிகைகளையும்கூட கோபுரங்களையும் கட்டி வாழ்ந்து, கடைசியிலே இந்த மண்ணிலே தங்கள் உடலை மடித்தார்கள்! பேரழகிகளான எத்தனையோ எழிலரசிகள் இந்தக் கடல் சூழ்ந்த நிலவுலகிலே தங்கள் காதலைக் கொட்டி மாண்டார்கள்! நம்முடைய முன்னோர்கள் எல்லாரும் இந்த வையத்தில் உன்னதமான இலட்சியங்களோடு வாழ்ந்து உன்னதமான இலட்சியங்களுக்காகவே தங்கள் வாழ்வை நீத்தார்கள்! இத்தனை மாறுபாடுகளுக்கும் இத்தனை மரணங்களுக்கும் நிலைக்களனாக அமைந்த நிலப்பரப்பை, இந்த நீலக் கருங்கடல் எத்தனையோ பல நூற்றாண்டுகளாகப் பார்த்துப் பார்த்து இதயம் பொறுக்காமல் கூச்சலிடுகிறது. ஆனால் அந்தக்கூச்சலையும் பேரிரைச்சலையும் காது கொடுத்துக் கேட்க யார் இருக்கிறார்கள்? ஓயாமல் ஒழியாமல் இப்படிக் கூப்பாடுபோட்டுக் கதறுகின்ற கடலின் இதயத்துக்கு யார் செவிசாய்க்கிறார்கள்? யோசித்துப் பார்! பேரியாழ் என்ற புனித வாத்தியத்தைத் திருடிக் கொண்டு போனபோது இதே நீலக் கடல் பேரிரைச்சல் இரைந்தது! சந்திரசூடனுடைய காதில் அது விழவில்லை. பிறகு இதே பேரியாழைத் தேடிக் கொண்டு நீ புறப்பட்டாய்! அப்போதும் இதே நீலக் கடல் கூப்பாடு போட்டது! யார் அதைக் கேட்டார்கள்? இப்பொழுதும் இந்தக் கடல் இரைகிறது! இதை யார் கேட்கிறார்கள்? ஏதோ மூடத்தனமான குருட்டு நம்பிக்கையோடு பேசுகிறேன் என்று எண்ணாதே! மனிதனுக்கு இதயம் இருப்பது போல இந்த இயற்கைக்கும் இருக்கிறது. இந்தக் கருங்கடலின் கனவுகளையும் அதன் எண்ணங்களையும் அறிந்து கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு! அது இந்த அலையின் குரலைக் கேட்பதுதான்! இத்தனையும் எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்த இரவு

முழுதும் நீ இந்த அலைகடலின் கரையிலே மனம் ஒருமித்துச் சிந்தனை செய்ய வேண்டும்! நாளைக் காலை உன்னுடைய முடிவை எங்களுக்குச் சொன்னால் போதும்! அது வரை நாங்கள் பொறுத்திருக்கிறோம். உன்னுடைய திருமண உறவு ஒரு பெரிய அரசியல் விஷயம். பல நாடுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகிற ஒரு முக்கியமான தீர்மானம் அது. எனவே ஆர அமர நீ சிந்திக்க வேண்டும்!''

இப்படிச் சொன்னார் உதயசந்திரன். இசைத் துறவி இந்த இடத்தில் பேச ஆரம்பித்தார்:

''பூபதி! சித்தன்னவாசல் மலையிலேயிருந்தபோது நீ என்னிடம் இந்தக் கடலின் அலைகளிலே எழுகிற சங்கீதத்தைப் பற்றிச் சொன்னாயே, நினைவிருக்கிறதா? 'அலையாவது சங்கீதமாவது' என்று நான் உதாசீனமாகப் பேசினேனே, அந்தப் பேச்சுத்தானே உனக்குக் கோபமூட்டியது. இப்பொழுது கேட்கிறேன் ஒரு விஷயத்தை: இந்த அலைகளின் சங்கீத ஒலிக்குக் காரணமாக அமைந்த சிலையின் அடியிலே யாருடைய இதயம் இருக்கிறது? நன்றாக யோசித்துப் பார். சாருகேசி என்ற வீரப் பெண்ணின் உடல் அந்தச் சிலையின் அடியிலே புதைக்கப்பட்டுக் கிடக்கிறது. அதுமட்டுந்தானா? எத்தனையோ தியாக புருஷர்களின் இதயங்கள் இந்த மண்ணுக்குக் கீழே கிடந்துதான் துடிக்கின்றன. நீ கேட்கும் ஒவ்வொரு அலையின் ஒலியிலும் எத்தனையோ இதயங்கள் துடிதுடிக்கின்றன என்பதை எண்ணிப் பார்! அத்தனை இதயங்களும் எந்த ஒரு இலட்சியத்துக்காக என்னென்ன தியாகங்களைச் செய்திருக்க வேண்டும் என்பதையும் ஒரு கணம் மனத்திலே உணர்ந்து பார்! அதன் பிறகு உன்னுடைய முடிவை நீ சொல்! அதற்காகத்தான் இந்த நிலவுப் பாறையிலே இன்றிரவு முழுதும் நீ தங்கியிருக்க வேண்டும் என்று உதயசந்திரன் சொல்கிறார்! உலக மக்களின் குரல் இந்த நீலக் கடலின் அலையோசையிலேதான் ஒலிக்கிறது. அரண்மனைக்குள்ளே இல்லை!''

இப்படி இசைத்துறவி சொன்னபோது உதயசந்திரன் சிரித்துக் கொண்டே குறுக்கிட்டார்.

''இசைத் துறவியாரே! நீங்களும் நம்முடைய பெரிய துறவியும் இருவரும் சேர்ந்து இந்த இரவிலேயே சித்திராங்க பூபதியையும் காவி உடைக்குள்ளே பொதிந்துவிடாதீர்கள்! இளைஞர் அவர்! அவரையும் துறவியாக்கிச் சமணமும் சாக்கியமும் ஒன்று சேர்ந்துவிட்ட உங்களுடைய காவிக் கூட்டத்திலே சேர்த்து விடாதீர்கள்! பூபதி! இந்த ஒரு இரவு மட்டும் நீ நிம்மதியாகச் சிந்தித்தால் போதும். நாளைக்கு நீ இங்கே தங்க வேண்டும் என்று சொன்னாலும் உன்னை விடப் போவதில்லை. நாளைக் காலையிலிருந்து அரண்மனையின் நான்கு மதில்களுக்குள்ளும் இருக்க வேண்டியவன் தான் நீ! இந்த ஒரு இரவுதான் உலகத்தை — இந்த வெளி யுலகத்தை— நீ எங்களைப் போலச் சுதந்திரமாகப் பார்க்க முடியும்! நாளையிலிருந்து நீ வலம்புரித் தீவின் அரசன்! சாதாரண மனிதனைப் போல வெளியே வரமுடி



யாத ஒரு வேந்தன் நீ! உரிமைகள் என்பதெல்லாம் இந்த இரவோடு சரி. நாளைக் காலையிலிருந்து உனக்குக் கடமைகள்தான் உண்டு. உரிமைகள் கிடையாது! ஆகையினால் இந்த நிலவுப் பாறையிலே இன்றிரவு கழியட்டும்!''

இவ்வாறு சொல்லிப் பூபதியை அங்கே தனிமையில் விட்டு விட்டுச் சற்றுத் தொலைவிலே பாழடைந்த கோவிலின் சுற்றுப்புறத்திலே உதயசந்திரனும் துறவிகளும் சென்றார்கள். தனிமையின் நிர்ணயமும், கடலின் கரையிலே எண்ண அலைகள் எப்படி எழும் என்ற நுட்பமும் நன்றாக அறிந்த மூவரும், பூபதியை ஒரு பெரிய புதிருக்கு விடை

காண வேண்டிய மன நிலையிலே ஏகாந்தமாக விட்டுச் சென்றது முதலில் எப்படியோ இருந்தது பூபதிக்கு! சற்று நேரத்துக்கெல்லாம் அவனுடைய மனம் சிந்தனையின் ஆழத்திலே மூழ்க ஆரம்பித்தது!

'முத்தரையமன்னர் தம் புதல்வியைப் பூபதிக்கு மணம் முடிக்க எண்ணுகிறார். தன்னுடைய அன்னையும் அந்தத் திருமண உறவுக்குச் சம்மதிக்கிறாள். ஆனால் தன்னுடைய மனம்?....'

யாழ் நங்கையின் நினைவு பூபதியின் மனக் கடலிலே சுழல் சுழலாகச் சுழன்றது! அலை அலையாக மேலெழுந்தது!

சித்திராங்கனுடைய நினைவுச் செவிகளிலே பேரியாழின் ஓசை கேட்டது! ஆகா! எத்தனை இன்பமான நாதம் அது! வானத்துத் தேவதைகளை வையகத்துக்குக் கொண்டு வந்து நிறுத்துகிற புனிதமான ஒலி அல்லவா அது!

சாருகேசியை நினைத்தான்! பேரியாழும் கையுமாக அவள் அலைகளின் மேல் நின்றாள்! நீலமேக யாழ்ப்பாணர் வந்தார். அவருடைய வயோதிகக் கையிலே அந்தப் பேரியாழ் தவழ்ந்தது! மறுகணம் மீண்டும் சாருகேசியின் தோற்றம்! அவளுடைய கையிலே பெண் குழந்தை தவழ்கிறது! மறுகணம் இரண்டு உருவங்களும் மறைந்து விடுகின்றன. அந்த எல்லையற்ற கருநீலக் கடல் தெரிகிறது! அதன் அலைகளுக்கு மேலே ஒரு சிறிய படகு மிதக்கிறது! அந்தப் படகிலே சாருகேசியின் குழந்தை!

பூபதியின் கண் முன்னால் சந்திரசூடன் வந்து நின்றான்! யாழைத் திருடிய கள்வனாக நிற்கவில்லை. சற்று முன்பு வரை தன்னோடு பேசிக்கொண்டிருந்த அதே துறவுக் கோலத்தில் சந்திரசூடனுடைய நினைவுத் தோற்றம் பூபதியினுடைய கண்களிலே நின்றது! மறுகணம் இசைத் துறவி தோன்றினார். அடுத்தகணம் உதயசந்திரன்! உடனே சட்டென்று உடலிலே மின்னல் பாய்வது போல ஒரு சிந்தனை! அந்தப் பழைய சித்தரின் உருவம் தெரிந்தது பூபதியின் கண்களுக்கு!

இத்தனையும் நிஜமில்லை. வெறும் மனப் பிரமைதான்! ஆனால் நிஜத்தையும்விட எத்தனை நிஜமாக இருக்கிறது இந்தப் பிரமை! பூபதி அப்படியே கண்களை மூடினான்.

நிலவுப் பாறையிலே சாய்ந்தவாறே பூபதி ஒரு கனவு கண்டான். அவனுடைய உள்ளத்தையும் உடலையும் பின்னித் தவழ்ந்து வந்தது அந்தக் கனவு.

''இளவரசே! உங்களுக்கு நாளைக் காலையில் பட்டாபிஷேகம் செய்வது என்று முடிவாகிவிட்டது. உங்களுடைய திருமண உறவு பற்றி உங்களுடைய தீர்மான முடிவைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார் அன்னையார். இப்பொழுதே உங்களை அழைத்து வரும்படி தங்கள் அன்னையாரின் கட்டளை!''

இவ்வாறு குரல் கேட்டது. வேறு யாருமில்லை அந்தக் குரல்! வலம்புரித் தீவின் மந்திரநாயகந்தான் அவ்வாறு சொல்லிப் பூபதியை அழைத்தார்.

''திருமண முடிவா! இப்பொழுதே சொல்ல வேண்டுமா? அப்படி என்ன அவசரம்?'' என்றான் சித்திராங்க பூபதி!

மந்திரநாயகம் பணிச்சென்று மறுமொழி சொன்னார்.

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள் இளவரசே! நாளைக் காலையில் உங்களுக்கு மகுடம் புனையப் போகிறோம். நாளையிலிருந்து நீங்கள் இந்த வலம்புரித் தீவின் வேந்தர். நாளைக்காலையிலிருந்து நீங்கள் எங்களுடைய மதிப்புக்குரிய அரசர்! எங்களுடைய மதிப்புக்குரிய அரசியார் யார் என்று நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? வாருங்கள். அன்னையார் காத்திருக்கிறார்கள். புறப்படுங்கள்!''

இவ்வாறு அவசரப்படுத்தினார் மந்திரநாயகம் கனவிலே! பூபதி தன்னுடைய கனவிலே எழுந்தான்! தன்னுடைய கனவிலே நடந்து சென்றான்! தன்னுடைய கனவிலே தெரிந்த தனது அரச மாளிகைக்குள்ளே தன்னுடைய கனவுக் கால்களால் நடந்து கொண்டே சென்றான் பூபதி!

மாளிகையின் முன் வாசலைத் தாண்டினான்! கனவுப் போர் வீரர்கள் கனவு வணக்கத்தைக் கனவுப் பூபதிக்குக் கனவிலே செலுத்தினார்கள்! இதோ கனவு மாளிகையின் கனவு மன்றம்! கண்களை நன்றாகத் திறந்துதான் நடக்கிறான் பூபதி கனவிலே! ஆனாலும் இது கனவா நனவா என்று அந்தக் கனவிலேயே ஒரு சந்தேகம் உண்டாகிவிட்டது பூபதிக்கு! கண்களை மூடி மூடி விழிக்கிறான். நம்ப முடியவில்லை அவனால்! கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடுகிறது! விம்மிக் கொண்டே, கூச்சலிட்டுக் கொண்டே அன்னையின் முன்பாக ஓடுகிறான்! இந்தப் பரிதாபக் கண்ணீருக்குக் காரணம் அன்னையின் அருகிலே யாழ் நங்கையைக் கண்டதுதான்! ஆம்; யாழ் நங்கை வலம்புரி மகாராணியின் அருகிலே இருந்தாள். ஆனால் எப்படி? ஒரு சமணத் துறவியின் கோலத்திலே காட்சிதந்தாள் யாழ் நங்கை! (தொடரும்)

மனங்கவரும் அன்பளிப்பு!

கவர்ச்சிகரமான புதிய டப்பாவில்

பாரியின் மிட்டாய்கள்




பாரி கம்பெனியார் அவர்களுடைய ருசி வாய்ந்த மிட்டாய்களை இப்பொழுது கவர்ச்சிகரமான புதிய டப்பாவில் வழங்குகிறார்கள். கண்ணுக்கினிய வர்ணங்களுடனும், அழகிய 'கோபி கிருஷ்ணு' சித்திரத்துடனும் கச்சிதமாகச் செய்யப்பட்ட இந்த டப்பாவை அன்பளிப்பாக வழங்கினால் அது எவர் மனதையும் கவரும் என்பது திண்ணம்!



வாய்க்கு அரிய விருந்து
அளியுங்கள் —
பாரியின் மிட்டாய்களை
வாங்குங்கள்!

PRS. 4342 பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்


'பின்லே'
பாப்லின்கள்
தி பின்லே மில்களின் தொகுப்பு

நாதஸ்வர இசை வாணர்கள்

பாபநா[illegible]

குடகு, குணகடல், குமரி, வேங்கடம் என்ற நான்கு எல்லை கொண்ட தமிழ் நாட்டிலும், கேரள நாட்டிலும், உள்ள ஆலயங்கள் அளவற்றவை. ஆலயங்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்களுக்கு ஆறு கால பூஜை அபிஷேக காலங்களிலும், திருவிழாக் காலங்களில் வீதியுலாவிலும், ஒவ்வொரு தென்னாட்டு வீட்டுக் கல்யாணங்களிலும் மிகவும் இன்றியமையாது முழங்கும் மங்கள வாத்தியம் நாகஸ்வர மேளம். யாதொரு ஆடம்பரமும் விளம்பரமுமின்றித் தொன்று தொட்டு இன்றளவும் நமது கர்நாடக சங்கீதத்தை இந்த நாகஸ்வர வித்வான்களே போஷித்துக் காத்து வருகிறார்களென்று உறுதியாகக் கூறலாம்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த அந்த வாத்திய வித்வான்களுள் கூறைநாட்டு நடேசன் என்பவர் சங்கீத லட்சணத்திற்கே ஓர் ஆதரிச புருஷராவார். அந்த நாளில் எல்லா நாகஸ்வர வித்வான்களும் அவரை அந்த வாத்யத்துக்கே தந்தை என்று போற்றி வந்தனர். திருமருகல் நடேசன் உள்பட அனைவரும் அவரைப் பெரியவராகவும் குருவாகவும் போற்றி மதித்தார்கள்.

1912-ல் திருக்கடையூர் கார்த்திகை சோமவாரத்தன்று கூறைநாட்டு நடேசன் அவர்கள் வாசித்த நாட்டை ராகமும், மல்லாரியும், ரீதிகௌளை அடதாள வர்ணமும் இன்று நினைத்தால் கூட உடல் புல்லரிக்கின்றது. வயசில் சற்றே சிறியவரான திருமருகல் நடேசன் தென்னாடெங்கும் புகழ்பெற்றவர். 1905-ம் ஆண்டென்று நினைவு; திருவனந்தபுரத்தில் நடந்த மாயூரம் பழைய சாமி ஐயங்கார் வீட்டுக் கல்யாண ஊர்வலத்தில் அவர் வாசித்த பைரவி ராகச் சிறப்பையும் வர்ணிக்க அப்பொழுது சிறுவனாயிருந்த என் அறிவுக்குத் திறனில்லை. பூரணப் பிரவாகமாய் வரும் அகண்ட காவேரி வெள்ளத்தை அந்த வாத்தியத்துக்கு உவமை சொல்லலாம். செவிபடைத்த மக்களெல்லாம் தன் நினைவு இழந்து இரவு முழுவதும் அந்த ஊர்வலம் சென்ற வீதிகளிலும் சாலைகளிலும் நான்கு மைல் தூரம் கேட்டுக் கொண்டே நடந்தார்கள். அவ்வூரிலிருந்த சமஸ்தான மஹா வித்வான்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

அடுத்தபடியாக மன்னார்குடி சின்னப் பக்கிரி எந்த ராகத்தை வாசித்தாலும் அவர் கையாளும் வக்ர சஞ்சாரங்களும் துரிதகால சஞ்சாரமும் அலுப்புத் தட்டாமல் தனிச் சிறப்பாக இருக்கும்.

சின்னப் பக்கிரி மேளமும் கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர் பாட்டும் ஒரே ரகமென்று அந்த நாளில் பிரசித்தி. இதனால் வைத்தியநாதய்யர் பாட்டை "மேளகாரப் பாணி" என்று கூடச் சொல்லுவார்கள். இவ்விருவரும் உற்ற நண்பர்கள். கற்பனைத் திறனில் ஒருவரை யொருவர் மிஞ்சினவர்கள். 1911ல் மாசிமகத் திருவிழாவில் திருச்செந்தூரில் பத்துநாட்களும் வாசிக்க வந்திருந்தார் முருக பக்தரான சின்னப் பக்கிரி.

அடுத்த ஆண்டு ராஜமன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி பங்குனி மஹோற்சவத்தில் கோட்டூர் கோபாலசாமி முதலியாருடன் சின்னப் பக்கிரியவர்களின் ரேவதி ராகத்தைக் கேட்டு உலகை மறந்தேன். அகந்தை, படாடோபம் முதலிய எவ்வித துர்க்குணமும் அவரிடம் கிடையாது. உயர் நற்குணங்களுக்கெல்லாம் பிறப்பிடம் எனலாம்.

கும்பகோணம் சிவக்கொழுந்து என்ற பிரபல நாகஸ்வர வித்வான் பெரிய யோக்யதை யுள்ளவர். இசை வேளாளர் குலத்தவருக்கெல்லாம் அவரிடம் பெரும் மதிப்பு உண்டு. அவர் வீட்டில் —1907-ம் வருஷம் என்று நினைவு—நடந்த ஓர் திருமணத்தில் எல்லா நாகஸ்வர வித்வான்களும் வந்திருந்தார்கள். அன்றிரவு வாசித்த சின்னப்பக்கிரியின் சங்கராபரண ராகத்தை அவர்கள் கேட்டதும் இதைப் போல் முன்பின் கேட்டதில்லையென்று வியந்து அன்றைய தினம் தங்கள் நாகஸ்வர வாத்தியத்தைக் கையால் தொடவே விரும்பவில்லையாம்.

இவரது சம காலத்தவர்களான செம்பனார் கோவில் ராமஸ்வாமியும், மதுரை பொன்னுசாமி பிள்ளையும் ஒவ்வொரு வகையில் மகா தீரர்கள். எந்த ராகத்தை வாசித்தாலும், தொட்ட இடமெல்லாம் ராக ஜீவன் மின்னும்படி வாசிப்பதில் செம்பனார் கோவில் ராமசாமி ஒப்புயர்வற்றவர். ரூபகம், ஜம்பை, சாப்பு தாளங்களில் பல்லவி வாசிப்பதில் இவருக்கு வெகு பிரியம். சிறுசிறு பல்லவி ஒரு கணையில் வாசித்து, ராக மாலிகையாய்ப் பல்லவியை முடிப்பதில் என்ன அற்புத கற்பனையும், பிருக்காவும் இருக்குமென்பதை அனுபவித்த எனக்கு எழுதத் தெரியவில்லை. சாவேரி, நாட்டக் குறிஞ்சி, கானடா ராகங்களை அவரிடம் கேட்டதை மறக்கும்படி இன்னும் வேறு யாரிடமும் கேட்கவில்லை. மதுரை பொன்னுசாமி பிள்ளை உயர்ந்த லக்ஷண வித்துவான். மேளங்களையும் கருவியையும் நிர ஆராய்ந்து இசை இலக்கண நூல்கள் பல எழுதியவர் மட்டுமல்ல; எதையும் தம் நாகஸ்வர வாசிப்பில் சாதித்துக் காட்டும் திறமையுள்ளவர். ஸ்வர ஸ்தானத்



திரு ராஜரத்தினம்

தோறும படிப்படியாய் ராகங்களை அவர் வாசிக்கும் பொழுதும் மந்த்ர ஸ்தாயியில் சஞ்சரிக்கும் பொழுதும் அலை ஓய்ந்த கடல் போலச் சுருதி லயம் மனோகரமா யிருக்கும். 1913 ல் நாகை ஆடிக் கிருத்திகையன்று அவ்வூர் மாரியம்மன் கோவில் வீதியுலாவில் அவர் வாசித்த ஆனந்த பைரவி ராகத்தைக் கேட்டு அசந்து போனேன்.

சிதம்பரம் வைத்தியநாதன் அவர்கள் தனி ரகம். ஆள்கண்ட சமுத்திரம் என்பார்களே அவ்விதம், ரசிக்கும் கூட்டத்தைக் கண்டால் கடல்மடை திறந்தாற் போன்ற வாசிப்பு. ராகம் பல்லவிகளில் தேட்டையான நிர்ணய ஞானம். வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்வதிலும் பிரசித்தர். சேத்தூர் ஜமீன் தாரின் ஆஸ்தானத்தில் தேவதான மென்ற சிவாலய மகோத்சவத்தில் பழனி மிருதங்கம் சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையான பழனி முத்தையா பிள்ளையின் தவிலுடன் அவர் வாசித்தார். சில வருஷகாலம் சிதம்பரம் திருவிழாவில் கைங்கர்யம் செய்யாமல் ஒதுங்கியிருந்தார். தன்உலக யாத்திரை முடிந்துவிட்டதை உணர்ந்தவர்போல இறப்பதற்கு முதல் வருஷம் நடராஜப் பெருமான் திருவிழாவில் பத்து நாட்களும் தமது இனிய நாதஸ்வர இசை அமுதத்தை அப்பெருமானுக்குத் தாமாகவே அர்ப்பணம் செய்தார். அவ்வாண்டு சிதம்பரம் எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார் என்ற என் குருநாதருடன் (எம்பார் விஜயராகவாச்சாரியாரின் தந்தை) அந்தக்கச்சேரிகளைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒருநாள் கமாஸ் ராகமும் அதில் 'சீதாபதே' கீர்த்தனமும் அதற்கு ஸ்வரமும், மற்றொரு நாள் ஹுசேன் ராகமும் கேட்டு மூன்றுமணி நேரம் பரவசமானேன்.

மின்னல் வெட்டுப்போல அபரிமிதமாய் நாகஸ்வரம் வாசிக்க ஆரம்பித்த வேகத்திலேயே, திருவிடைமருதூர் சிவக்கொழுந்து அகால மரணமடைந்து விட்டார்.

இதுவரையில் அடுக்கி வந்த நாதஸ்வர வித்வான்களிடம் எந்த அம்சங்களெல்லாம் சிறந்தவையோ அவை யெல்லாம் ஒருங்கே நிறைந்து திராக்ஷ பாகம் என்று சொல்லும்படி அற்புத ரசஞ் செறிந்தது, திருவாவடுதுறை டி. என். ராஜரத்தினம்பிள்ளையின் தேவகானம். அவரைப் போல் சுருதியோடு லயித்து வாசித்தவர்கள் இரண்டொருவரே இருக்கலாம். " 'கமலப் பதமலரினை' என்பதைப்போல் ஹரிகாம்போதியில் ஒருரசமான கற்பனையை வேறு எதிலும் நான்காணவில்லை" யென்று சொன்ன உத்தம ரசிகரை நான் இழந்தேன். அவர் ஆன்மா சாந்தி அடைக!

பொங்கற் பள்ளு!

தமிழழகன்

பொங்கலோ பொங்கல்-இன்பப்-பொங்கலோ பொங்கல்!
மங்கலநாள் எங்குமின்றே மகிழும் தெய்வப் பொங்கல்! (பொங்)

செந்நெல்தந்த பொன்னரிசி சர்க்கரை சீனி—கூடத்
தேன்கனிகள் முந்திரி திராட்சையும் கூட்டி
வண்ணப்புதுப் புத்துருக்கு நெய்யையும் விட்டு—பல
வண்ணமிகு மண்ணடுப்பில் பொங்கிய பொங்கல்!

வெண்ணெய்கொண்டு மண்தரையில் வண்ணம் மெழுகி—அதில்
வெள்ளரிசி மாப்பொடியால் கோலமுமிட்டு
கண்ணுக்கொளி கூட்டும்கடர் அண்ணலுக்கென்றே—வைத்துக்
கைகூப்பி ஏத்தவரும் காவியப் பொங்கல்!

மாடுகன்று காலிகளை மஞ்சள் நீராட்ட—நல்ல
மணம்கமழும் சந்தனம் செங்குங்குமம் வைக்க
காடுமலை வாழ்கவென்றே தூபங்கள் காட்ட—அவை
களிப்புடன் கும்மாளமிட்டுக் கட்டவிழ்த் தோடும்!

கழுத்திலுள்ள மணிச்சங்கிலி 'கணீர்' என்றசைய—வரும்
காளையோடும் துள்ளியோடும் கோமாதாவினை
முழுக்கவனம் செலுத்திப் பொங்கல் படைத்தே—உலகம்
முழுதும் நலம் எழுக என்றே தொழுது மகிழ்வோம்!




மங்களவாத்திய மன்னர்கள்

தமிழ்கூறும் நல்லுலகுக்கே உரிய நாதஸ்வரக் கலை மிகவும் புராதனமான தெய்விகக் கலையாகும். முக்காலமும் நடைபெறும் வழிபாட்டின் போது நமது தேவாலயங்களில் ஒலிக்கும் மங்கள வாத்தியத்தின் இன்னிசை மகத்தானது. உத்ஸவமான திருவிழாக் காலங்களிலும், மங்களகரமான முகூர்த்தக் காலங்களிலும், பொங்கல் போன்ற பண்டிகை தினங்களிலும் இந்தத் தெய்வக் குழலின் தேனருவி இசை கேட்டு மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த இன்னிசைக் கருவியைப் பல நாதகர வித்வான்கள் கையாண்டு தமிழகத்தின் ஒப்புயர்வற்ற கலையை நமக்கு வாழையடி வாழையாய் வழங்கி வந்திருக்கிறார்கள். அத்தகைய ஒப்பற்ற கலைஞர்கள், மங்கள வாத்திய மன்னர்கள் பலர் இப்போது நம்மிடையே இல்லை. அவர்களுடைய திருவுருவங்களை இந்தப் பொங்கல் இதழில் வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

— ஆசிரியர்



திருமருகல் நடேசன்



செம்பனார்கோவில் ராமசாமி



நாகூர் சுப்பையா



திருவிடைமருதூர் வெங்கடமூர்த்தி


மன்னார்குடி சின்னபக்கிரி


சிதம்பரம் வைத்தியநாதன்


மதுரை பொன்னுசாமி


கீரனூர் சின்னத்தம்பி


கீரனூர் கண்ணப்பன்



செம்பனார்கோவில் கோவிந்தசாமி



அம்பாசமுத்திரம் கண்ணுசாமி (தவில்)



வழுவூர் முத்துவீரு (தவில்)





மலைக்கோட்டை பஞ்சாபகேசன் (தவில்)




நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் (தவில்)



வசீகரத்திற்கும்
வனப்பிற்கும்..
கிரிஜா
ரெமி
ஸ்னோ & பவுடர்



1



2

ஜனவரி முதல் தேதியன்று சென்னை சங்கீத வித்வத் சபையின் 'சதஸ்' மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ நித்யானந்த கனுங்கோ அவர்களின் தலைமையில் கூடியது. இவ்வருஷ வித்வத் சபை மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திருவீழிமிழலை சுப்பிரமணியபிள்ளை அவர்களுக்குச் சங்கீத கலாநிதி பட்டத்தையும், பட்டத்துக்குரிய விருதையும் வழங்கினார்கள்.

வித்வான்கள் ஆனையாம்பட்டி சுப்பையர், உமையாள்புரம் கோதண்டராமய்யர், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், சென்னை பாலகிருஷ்ணய்யர், விதுஷி மயிலை கௌரி அம்மாள் ஆகியோரையும் கௌரவித்துப் பட்டம் வழங்கினார்கள். முதல் படத்தில்: உமையாள்புரம் கடம்—கோதண்டராமய்யர், வயலின் சென்னை பாலகிருஷ்ணய்யர், கோட் வாத்யம் பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மயிலாப்பூர் கௌரி அம்மாள்—பரதம்; 2. சதஸுக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீ நித்யானந்த கனுங்கோ, சங்கீத கலாநிதி பட்டம் பெற்ற திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை, காரியதரிசிகள் வே. ராகவன், கே. சௌந்தரராஜன்; 3. வித்வத் சபை நடத்திய சங்கீதப் போட்டியில் பரிசு பெற்ற மாணவிகளையும், பேராசிரியர் கல்கி அவர்களின் ஞாபகார்த்தமாகக் 'கல்கி'ப் பத்திரிகையின் அதிபர் திரு சதாசிவம் அவர்கள் வழங்கிய தம்புரா முதல் பரிசு பெற்ற திருமதி வி. சாரதாவையும் படத்தில் காணலாம்.

3



பரிசு பெற்ற எழுத்தாளர்கள்

'கல்கி' மாதச் சிறுகதைப் போட்டி ஆரம்பித்து கடந்த டிசம்பர் மாதத்துடன் எட்டு மாதங்கள் ஆகின்றன. ஆனாலும் நவம்பர் மாதச் சிறுகதைப் போட்டி முடிவு வரையில்தான் கதைகள் பிரசுரமாகி யிருக்கின்றன. டிசம்பர் மாதத்திய முடிவை இந்த இதழில் வேறு பக்கத்தில் காணலாம்.

நவம்பர் மாதம் வரை பரிசு பெற்ற ஏழு எழுத்தாளர்களின் படங்களை மிக்க மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் வெளியிட்டிருக்கிறோம். இவர்களுடைய கதைகளை அச்சிலே படித்தபோது அளவற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தோம். தமிழ் வசன இலக்கியத்துக்குக் 'கல்கி' செய்து வரும் தொண்டைக் குறித்து எண்ணற்ற தமிழ் அன்பர்கள் எழுதியிருப்பதைப் படிக்கும்போது நமக்குப் பெருமையாகவே இருக்கிறது.

பரிசுக் கதைகள் ஒவ்வொன்றும் ஒரு தனி அமைப்பு ; ஒவ்வொன்றிலும் ஒரு தனிச் சிறப்பு ; ஒவ்வொரு கதையும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் வெவ்வேறு அம்சத்தை விளக்குவது ; ஒவ்வொரு கதையின் தமிழ் நடையும் தனியான இனிமை யுடையது., கதைப் போக்கும் தனித்தனியே மேன்மை யுடையது ; மனோதர்மத்தின் உயர்வும் தனிச் சிறப்புடையது.

மொத்தத்தில். தமிழகத்தில் சிறு கதை இலக்கியம் எவ்வளவு அருமையாக, அதிசயமான உத்திகளுடன் வளர்ந்து வருகிறது என்பதற்குப் போட்டியில் பரிசு பெற்ற ஏழு கதைகளே சிறந்த அத்தாட்சியாக விளங்குகின்றன.

பரிசுபெற்ற கதைகள் நேயர்களின் அபிப்பிராயத்தை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கின்றன என்பதை நேயர்கள் நமக்கு எழுதியுள்ள பல்வேறு வகையான கடிதங்களிலிருந்து நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

சில நேயர்கள் பரிசுக் கதைகள் ஒவ்வொன்றின் தராதரத்தைப்பற்றி விமரிசனம் செய்து அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் பலவிதங்களில் ஒன்றோடு ஒன்று மாறுபட்டிருக்கின்றன.

மே மாதப் போட்டிக் கதையைவிட ஜூன் மாதப் போட்டிக் கதையைச் சிறந்தது என்று முதலில் சிலர் எழுதினார்கள். பிறகு அடுத்த மாதப் போட்டிச் சிறுகதை வெளியானதும் ''இந்தக் கதை ரொம்ப ஜோர். இந்தக் கதைக்கு நூறு ரூபாய் கொடுத்தது போதாது ; ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம்'' என்று ஒரு ரஸிகர் எழுதுகிறார். இன்னொரு பரிசுக் கதை வெளிவந்தவுடன் இன்னொரு ரசிகர் ''வார்த்தைக்கு வார்த்தை லட்சம் ரூபாய் கொடுக்கலாம்'' என்று எழுதுகிறார்.

இந்தக் கடிதங்களை யெல்லாம் படிக்கும்போது நமக்கு உண்மையிலேயே மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகிறது.

இலக்கிய விஷயங்களில் அபிப்பிராய'பேதம் ஏற்படுவது இயற்கைதான். அது இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் அவசியந்தான். ஆனாலும் அதில் ஒருமாதிரி சகிப்புத்தன்மை காட்டுவது தான் இலக்கியப் பண்பாகும்.

பரிசுபெற்ற எழுத்தாளர்களைப் பற்றி ஒரு வார்த்தை. ஒவ்வொரு எழுத்தாளரும் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சிலர் பல கதைகள் எழுதி அனுபவம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். சிலர் இந்தப் போட்டிக் கதையில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலமாகவே எழுத்துலகில் பிரவேசித்தவர்களா யிருக்கிறார்கள். தாம் எழுதிய முதல் கதையையே பரிசுக்குரிய கதையாகத் தேர்ந்தெடுத்துத் தமக்கு ஊக்கமளித்திருப்பதை ஒரு எழுத்தாளர் நன்றியுடன் குறிப்பிட்டு எழுதி யிருக்கிறார். மற்றொருவர் 'எனக்குக் 'கல்கி'ப்|பத்திரிகை மூலமாகத்தான் எழுதும் பழக்கமே ஏற்பட்டது. என் இதயத்தில் தோன்றும் சிந்தனைகளுக்ுக் கற்பனை உருவம் கொடுக்க முடிந்தது' என்று பூரிக்கிறார். இவ்வாறு பரிசு பெற்ற எழுத்தாளர்கள் எழுதி யிருப்பது போலவே பிரசுரத்துக்குத் தகுதி வாய்ந்த கதைகளை எழுதிச் சன்மானம் பெற்ற எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் தமிழ் நாட்டுக்கு அப்பால் உள்ள தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு இடங்களில் வாழும் தமிழ் எழுத்தாளர்களும் 'கல்கி' மாதச் சிறுகதைப் போட்டியில் பங்கு பற்றிக் கதைகள் எழுதி யிருக்கிறார்கள். மாதச் சிறுகதைப் போட்டியில் உற்சாகமாகக் கலந்து கொண்டுவரும்" இளம் எழுத்தாளர்கள் அத்தனை பேருக்கும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாதாமாதம் சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்டு வாசக நேயர்களை மகிழ்விப்பதுடன் தமிழ் வசன இலக்கியத்தை வளர்த்துத் தமிழ்ப் பணி புரியும் தொண்டில் ஈடுபட்டு இறவாப் புகழுடைய சிறுகதைகள் இயற்றித் தமிழ் எழுத்தாளர்கள் உலகப் புகழுடைய வேண்டும் என்பதே நமது அவா. தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏற்படும் சிறப்பு தமிழ் நாட்டுக்கே ஏற்படும் சிறப்பாகுமல்லவா?



மே மாதம் : இரு புதல்வர்கள்.
எஸ். ஜானகி

ஜூன்



கல்யாண மண்டபம்.
— சங்கர்

ஜூலை




அன்பளிப்பு
—எ. கே. பட்டுசாமி

ஆகஸ்டு



சாகாத வாழ்வுக்குச் சஞ்சீவி
— கோமதி சுப்பிரமணியம்

செப்டம்பர்




முத்தாலம்மனின் கண்ணீர்
— பட்டாபி நாராயணன்

அக்டோபர்



வலம்புரிச் சங்கு
— நா. பார்த்தசாரதி

நவம்பர்



பணமா ? பாசமா ?
— சரவணன்



தேனாம்பேட்டை (காங்கிரஸ் மைதானம்) பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள எமது ஸ்பெஷல் ஸ்டாலுக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்



"கூடி இருந்து குளிர்ந்து"

பேராசிரியர் அ. சீநிவாச ராகவன்

கண்ணால் காண்பது வில்லிப்புத்தூர், அதைச் சுற்றிலும் உள்ள கழனி, புழக்கடைப் பொய்கை, செங்கழுநீர், ஆம்பல், மார்கழிப் பனி—ஒரே வார்த்தையில் தமிழ்நாடு. ஆனால் மனத்தால் காண்பதோ நந்த கோகுலம். இதை, 'திருப்பாவை'யின் முதற் பாட்டே பேசி விடுகிறது.

ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார் போன்ற மேனி கதிர்மதியம்போல்
முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்

[ஏர் - அழகு, ஆர்ந்த - படிந்த, கண்ணி - கண்ணை உடையவள்]

என்று பாடிக் கொண்டு போவது யார் தெரியுமா, 'சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமியர்.' போகின்ற வழியில், தமது தோழிகளைத் துயில் எழுப்பும் இவர்கள், 'அடி ஆயர் குலத்துப் பெண்ணே! தூங்காதே, எழுந்து வா' என்றுதான் தோழியரின் ஒரு சிலரை அன்புடன் அழைக்கிறார்கள்.

'குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம்
பொற்கொடியே'

[கோவலர் - இடையர்]

இப்படி ஒருத்திக்குச் 'செல்ல' அழைப்பு. இன்னொருத்திக்கோ 'பாலால் வீடு சேறாகும் செல்வமுடையவன் தங்கை' என்ற பட்டம்.

கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன்
தங்காய்.

[கற்றெருமை - கன்றை உடைய எருமை]

ஆம், 'திருப்பாவை'யில் வரும் சிறுமியர் எல்லாரும் இடைச்சியர். அவர்களுக்குக் கிடைத்த பாக்கியமே பாக்கியம். அவர்கள் வாழும் இடைச்சேரியில் கண்ணன் வளர்கிறான், அவன் அண்ணன் பலராமனும் வளர்கிறான், நந்தகோபன் அரசாள்கிறான், எம்பெருமாட்டி யசோதை, 'கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தாய், குல விளக்காய்' வீற்றிருக்கிறாள். ஆம், இது நந்த கோகுலம், இறைவன் மண்ணுலகத்துக்கு இறங்கி வந்து, மக்களிடையே விளையாடி, அவர்கள் உள்ளத்தைத் தன்பால் திருப்பி, உயிர்களை உய்யக் கொண்ட புண்ணியத் தலம்.

பாவை நோன்பு நோற்கும் சிறுமியர், தமக்குச் சிறந்த கணவன் வாய்க்க வேண்டும் என்று கருதி இந்த நோன்பை நோற்பது பழங்காலத்து வழக்கம். 'திருப்பாவை'யில் வரும் ஆயர்பாடிப் பெண்களோ, கண்ணனையே அடைய வேண்டும் என்று எண்ணி நோன்பு நோற்கிறார்கள்.

எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம்
ஆட்செய்வோம்.

என்று கண்ணனிடம் இவர்கள் பேசுவதாக, 'திருப்பாவை' சொல்லுகிறது. ஒருவரை ஒருவர் எழுப்பி, ஒன்றாகச் சேர்ந்து, நோன்பு நோற்கச் செல்லும் இவர்கள், முதலில் நந்தகோபன் அரண்மனைக்குச் செல்கிறார்கள். 'எங்கள் நோன்புக்கு, ஒலிக்கின்ற பறை என்னும் வாத்தியத்தை வழங்குவதாக, நேற்றே கண்ணன் வாக்கு அளித்திருக்கிறான்.

நாங்கள் அவனைக் காண வேண்டும், பறையைப் பெற வேண்டும். தெரிகிறதா? எங்கே, கொஞ்சம் தயவு புரிந்து, வாசற் கதவைத் திறந்து விடு. உள்ளே சென்று கண்ணனைக் காண அனுமதி தா' என்று அரண்மனை வாசற் காப்பானை வேண்டுகிறார்கள்:

நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே கொடித்தோன்றும்தோரண
வாசல் காப்பானே மணிக் கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்
நேர்ந்தான்

[கொடித் தோன்றும்-கொடிகள் விளங்கும்; தாள்-தாழ்ப்பாள்; அறைபறை-ஒலிக்கின்ற பறை; நென்னலே-நேற்றே; வாய்நேர்ந்தான் - வாக்குத் தந்தான்]

எப்படியாவது உள்ளே சென்று கண்ணனைக் காண வேண்டும் என்ற ஆசைதான் இந்தப் பாட்டில் எவ்வளவு அற்புதமாக வெளிப்படுகிறது! வாசற் காப்பான் பெரிய மனது பண்ணிக் கதவைத் திறந்து விட வேண்டுமே, அதற்காக அவனுக்கு ஒரு புகழ்மாலை. 'நீ என்ன சாதாரணமானவனா, அரசன் நந்த கோபனுக்கல்லவா பணி செய்கிறாய், அவனுடைய கோயிலை அல்லவா காக்கிறாய், நீ உள்ள இடம் அரசனுடைய வெற்றிக் கொடி ஆடும் தோரண வாசல் அல்லவா, நீ என்ன சாமானியப்பட்டவனா?' என்று சிறுமியர் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு பேசுகிறார்கள்.

'அதெல்லாம் சரி, அரண்மனைக்குள்ளே சிறுமியரான உங்களுக்கு என்ன வேலை? பொழுது விடியவில்லை, அதற்குள்ளே வந்து நிற்கிறீர்களே? கதவைத் திறந்து விடுவதாவது? உங்களுக்கா? பேசாமல் வீட்டுக்குப் போங்கள்' என்ற குறிப்பை, அவன் முகத்தில் கண்டார்களோ என்னவோ?' இல்லை, இல்லை. அப்படி எண்ணாதே. கண்ணன் சொல்லித்தான் வந்திருக்கிறோம். ஆமாம், நேற்றே சொன்னான், 'வாருங்கள் பறை தருகிறேன்' என்று. அவனை எழுப்புவதற்கு வந்திருக்கிறோம். இது அவன் கட்டளை. இங்கே பார், எவ்வளவு சுத்தமாய் வந்திருக்கிறோம் பார்த்தாயா. உன்னுடைய வாயால் 'இல்லை' என்று மறுக்காதே. எங்களால் தாங்காது. உன்னைப் போலத்தான் இருக்கிறது இந்தக் கதவு. இது நேச நிலைக் கதவு. கண்ணனிடம் உனக்கு உள்ள பரிவு தானே, அவனைப் போய் நாங்கள் தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும் என்று எங்களைத் தடுத்து நிறுத்தச் சொல்கிறது? அதே நேசந்தான் கண்ணனிடம் இந்தக் கதவுக்கும். ஆகவே அதுவும் எங்களைத் தடுக்கிறது. எங்கே. கதவைத் திறந்து விடு' என்று ஆயர் பாடிப் பெண்கள் கெஞ்சுகிறார்கள்:

தூயோமாய் வந்தோம் துயில்எழப் பாடுவான்
வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா நீ
நேச நிலைக்கதவம் நீக்கு ஏல்ஓர் எம்பாவாய்

[பாடுவான்-பாடுவதற்காக; முன்னம் முன்னம்-முதல் முதலில்; மாற்றாதே-மறுக்காதே; அம்மா-தாங்காது என்பதைக் காட்டும் அசை]

இப்போது நாம் நந்தகோகுலத்தில் மட்டும் இல்லை. கண்ணனிடத்தில் தீராப் பெருங்காதல் கொண்ட இடைச் சிறுமியர் கூட்டத்தில் ஆண்டாளோடு நிற்கிறோம். அவர்களோடு நந்தகோபன் அரண்மனைக்குள்ளே போகிறோம். நந்தகோபனையும், யசோதையையும், பலராமனையும், கண்ணனையும் துயில் எழுப்ப, இவ் வாயர் சிறுமியர் பாடுகிறார்கள். கண்ணனுடைய பள்ளியறைக்கே போய் விடுகிறார்கள். அங்கு கண்ணனையும், கண்ணனுடைய நாயகி நப்பின்னையையும் எழுப்புகிறார்கள். 'கண்ணா! நீ கண் விழிக்கும் அழகை நாங்கள் காண மாட்டோமா? சதங்கை போல் பாதி மூடி, பாதி திறந்திருக்கும் உன் கண் மெல்லத் திறந்து, தாமரை போல் மலர்ந்து, எங்கள் பக்கம் திரும்பாதா?

கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?'

என்று ஏங்குகிறார்கள். 'கண்ணா எழுந்து வா! கம்பீரமாகச் சிங்கத்தைப் போல எழுந்து வா! மழைக் காலத்தில் மலைக் குகையில் உறங்குகிற சிங்கம் விழித்துக் கொள்கிறது. அதன் கண்களில் நெருப்பைப்போல் பொறி பறக்கிறது. பிடரி மயிர் சிலிர்க்கிறது. நாற் புறமும் அசைந்து, உடம்பை வளைத்துச் சோம்பல் முறித்து, முழங்குகிறது சிங்கம். பிறகு வெளியே புறப்படுகிறது. இப்படி ஆற்றலோடும் பெருமிதத்தோடும் அல்லவா நீ எழுந்து வரவேணும்' என்று அவர்கள் பேசும் பேச்சில் உணர்ச்சியும் அழகும் நிரம்பிய கவிதை மலர்கிறது. :

மாரிமலை முழஞ்சில் மன்னிக் கிடந்து [உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலே

[முழஞ்சில்-குகை; வேரிமயிர்-உளைமயிர்; பொங்க-சிலும்ப; எப்பாடும்-நாற்புறமும்; பேர்ந்து-அசைந்து; மூரிநிமிர்ந்து-பெருமை தோன்ற நிமிர்ந்து; போதருமாப் போலே-வருவது போலே]

கண்ணன் எழுந்து வருகிறான், ஆய்ச்சியர் நோற்ற நோன்பின் நோக்கம் நிறைவேறி விடுகிறது.



பார்த்து வாங்குங்கள்.

இந்த மாதிரி

இனாம் பரிசுக் கூப்பன்

நீங்கள் வாங்கும்



ஓ.கே. வனஸ்பதி

டின்களில் உள்ளதா என்று நன்கு கவனித்து வாங்குங்கள்

1 பவு., 2 பவு., 5 பவு., 10 பவு., லீவர்–லிட் டின்களில் கிடைக்கின்றன.

உங்கள் அருகிலுள்ள 'ஓ.கே.' வியாபாரி உங்களுக்கு உதவி செய்ய இருக்கிறார்



குடும்பத்திலுள்ள பெண்கள் கவனிக்கவும்: இந்தப் பரிசுத் திட்டம் உங்கள் லாபத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தேவையான ஒரு பூரண ஸெட் பாத்திரங்களை நீங்கள் இனாமாகப்பெறும்வரை இதுநீடிக்கும். டின்னில் கூப்பன் இருக்கிறதா எனக் கவனியுங்கள். இல்லையென்றால், "ஏன் இல்லை"?. என்று கடைக்காரரிடம் விசாரியுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ் - 1

EP

கண்ணனைப் பெறுவதே இந்த நோன்பின் நோக்கம். அது நிறைவேறுவதற்கு அவன் உதவியையே நாடுகிறார்கள். அவனும் வாக்களித்தான், உதவி செய்வதாக. எப்போது? 'நென்னலே வாய் நேர்ந்தான்!' நேற்றே. இந்த உயிர் தோன்றிய அந்த நாளிலேயே, 'இதைக் காப்பேன்' என்று அவனுடைய கருணை பேசி விட்டது. வாக்களித்து விட்டது. இனி என்ன குறை? அவனே நேரில் வந்து விட்டான். 'என்றென்றும் அவன் புகழைப் பாடுவதே எங்கள் இன்பம். இன்று, எங்களுக்கு இரங்கி அவன் எங்கள் முன் தோன்றிய இன்று, அந்த இன்பம் எல்லையற்றதாகிவிட்டது. அவனைப் பாடுவோம்' என்று எண்ணி, ஆயர்பாடிச் சிறுமியர் கண்ணனுடைய பெருமையைப்பாடுகிறார்கள். 'போற்றி, போற்றி' என்று அவனை வாழ்த்துகிறார்கள். 'அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க்குலத்தில்' பிறந்த தமக்கு, தம்முள் ஒருவனாகவே அவன் இறங்கி வந்து அருளிய கருணையை எண்ணி உருகுகிறார்கள். 'இனி எங்களை விட முடியாது, அப்பா, உன்னாலும் முடியாது.

உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு
ஒழிக்க ஒழியாது.

தெரிகிறதா?' என்று உரிமையோடு பேசுகிறார்கள். பிறகு அவனிடம் சன்மானம் வேண்டுகிறார்கள். கண்ணனைப் பெற வேண்டும் என்பதற்காக, இது வரையில், கண்ணுக்கு மை இடாமல், கூந்தலில் பூ முடித்துக் கொள்ளாமல், தீவிரமாக நோன்பு நோற்றார்கள். நெய்யையும், பாலையும் உண்ணாமல் விலக்கி இருந்தார்கள். இப்போது கண்ணன் கிடைத்து விட்டான். அவன் 'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தன்,' தன்னோடு இசையாதவர்களையும் வென்று தன்னருளிலே கூட்டுவிப்பவன், தன்னோடு இசைந்தவர்களுக்குத் தோற்றுத் தன்னையே முழுதும் தந்து விடுபவன். அவன் வந்து விட்டான். இனி, இந்த உலகத்துப் பொருள்கள், அவனிடமிருந்து தம்மைப் பிரித்து விடுமோ என்ற கவலை இல்லை. பெண்கள் அல்லவா, அவர்கள் குரலாக நின்று, தன் உள்ளத்தையே பேசும் ஆண்டா



ளும் பெண்தானே, அவர்கள் கேட்கும் பரிசுகள், முதலில் நகைகள். ஆம், சூடகம் (கையில் அணியும் ஆபரணம்), தோள்வளை, தோடு, செவிப்பூ (காதில் அணியும் நகை), பாடகம் (காலில் அணிவது) இவை முதலான பலப்பல ஆபரணங்கள். இவற்றை அணிவார்களாம், அவன் தந்த பரிசாக. பிறகு, நல்ல ஆடை உடுக்க வேண்டுமாம். அதன்பின், சோறு மறையும்படி அதில் நெய் வார்த்து, முழங்கை வழியே அந்த நெய்யும் சோறும் ஒழுகும்படி, தம்மை மறந்து, பாற்சோறு உண்ண வேண்டுமாம். இத்தனை வைபவங்களையும் கண்ணனோடு கூடியிருந்தே, அந்தச் சேர்க்கையில் ஏற்படும் குளிர்ந்த உள்ளத்தோடு, எல்லோருமாக அனுபவிக்க வேண்டுமாம். இதைப் பாடுகிறாள் ஆண்டாள் :

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்
தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்று அனைய பல்கலனும் யாம்
அணிவோம்.
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்து ஏல் ஓர் எம் பாவாய்

[நாடு - நாட்டில் உள்ளவர்; புகழும் பரிசினால் - புகழும்படிக்கு; வழிவார - வழிந்திடும் படியாக]

இறைவனுக்கு ஆட் செய்வதையே நோக்கமாகக் கருதி அவனை நேரிலே காணச் சென்ற ஆய்ப்பாடிச் சிறுமியர், அதற்காக இவ்வுலகத்துப் பொருள்களையும், அவற்றின் பேரில் உண்டாகும் காமங்களையும் ஒதுக்கி வைத்தார்கள். கண்ணனை நேரில் கண்டதும், அவனோடு இந்த உலகத்திலேயே கூடி இருக்கிறோம் என்ற உணர்வு பெற்ற உடன், அவர்களுக்கு எதனையும் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போகிறது. வில்லிப்புத்தூர் கண்ணன் விளையாடும் ஆயர்பாடியாக மாறிய பிறகு, அவன் நிறைந்த அந்த ஊரில் உள்ள எதை ஒதுக்குவது, எதற்காக ஒதுக்குவது ?

ஆண்டாளுடைய பக்தி, இந்த மண்ணை — நாம் நடமாடும் இந்தப் புழுதியை — இறைவனுடைய விளையாட்டுத் தலமாகக் கண்டது. காண்பதற்காக, நந்தகோகுல இடைச்சியாக, அவள் தன்னைப் பாவித்துக் கொண்டாள். பாவனையின் முதிர்ச்சியினால், கண்ணனோடு இடையறாத தொடர்பு கொண்ட கோபியாக மாறினாள். இந்த உலகம் அவளுக்கு இறைவன் நடமாடுகின்ற பிருந்தாவனம் ஆயிற்று. இங்குள்ள இன்பங்கள், அவனை மறைக்கின்ற இடர்ப்பாடுகளாகத் திரியாமல், அவனோடு கூடியிருந்து பெறும் இன்பமாகவே நின்றன.

மார்கழி முடிந்து, தை பிறக்கும் இந்த நல்ல வேளையில் பக்தியே நோன்பு, அதுவே பயன். இந்த நோன்பினால் இங்கே இவ்வுலகத்திலேயே எல்லா இன்பங்களையும் பெறலாம்,

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'*

என்பதை உணர்வதற்கு ஆண்டாளுடைய 'திருப்பாவை' என்ற அருமையான பக்தி இலக்கியம் உதவுகிறது. அதைப் பாடி மகிழ்வோம். ஆண்டாளைப் போல நாமும் இறைவனோடு கூடி இருக்க முயல்வோம். வருகிற பொங்கல் திருநாளை இறைவனிடத்தில் நாம் வளர்க்கும் அன்புத்திருநாளாகக் கொண்டாடி,

'பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி இருந்து குளிர்ந்து'

எல்லோருமாக இன்புறுவோம். இதுவே ஆண்டாளுடைய தெய்வத் தமிழ் காட்டுகின்ற பாதை.

*ஞானசம்பந்தர் அருளியது

பரம ரகசியம்



உங்களுடைய பிலிப்ஸ் ரேடியோ பல ரகசியங்களைக் கொண்டது. அது புதிய விதிகளின்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதில் எங்களால் தயாரிக்கப் பட்ட விசேஷ தனிப்பாகங்கள் இருக்கின்றன. அது எல்லோராலும் பழுதுபார்க்கப்படக் கூடிய ரேடியோவல்ல. உங்களுடைய ரேடியோவைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் பிலிப்ஸ் வியாபாரியிடம் இருக்கின்றன. அவரிடம் உண்மையான தனி உறுப்புக்களும், சரியான பழுதுபார்க்கும் கருவிகளும், உங்களுடைய ரேடியோவைப்பற்றி எல்லா விதிகளும் அடங்கிய 'பிலிப்ஸ் ஸர்வீஸ் மான்யுவல்' என்ற புத்தகமும் இருக்கின்றன.

எனவே உங்கள் ரேடியோவுக்கு மேற்பார்வை தேவைப்பட்டால் . . .

. . . அதை உங்கள் பிலிப்ஸ் வியாபாரியிடம் ஒப்படைத்து விடுங்கள்



பிலிப்ஸின் விற்பனையும் சேவையும் ஒருங்கே கைகோர்த்துச் செல்கின்றன. பிலிப்ஸ் ரேடியோ தொடர்ந்த சேவையை அளிக்கிறது. அதன் தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் அது கண்டு பரிசோதிக்கப்படுகிறது. பிலிப்ஸ் ரேடியோ எங்கு விற்கப்பட்டாலும், அதை எல்லா இடத்திலும் பழுதுபார்த்துக் கொள்ளலாம்.

PHILIPS **பிலிப்ஸ்** ரேடியோ

பிலிப்ஸ் எலக்டிரிகல் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்

PSPH 307



பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷ மாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம் பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற் பசையில் டாக்டர் ஆர். ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப் படுகிறது. ரத் தக் கசிவு வீங்கிய ஈறு புண்ணானாலும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பிவிடும் ஆனபடி யால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற் பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கிய மான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப் படலாம்.
தந்த வைத்தியரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது



“நமஸ்காரம். சித்திக்குத் தாங்கள் ஒழுங்காக அனுப்பி வந்த பணத்தைத் திடீரென்று நிறுத்தி விட்டீர்கள். இரண்டு மாதங்களாக உங்கள் சித்தி மிகவும் சிரமப்படுகிறாள். ஞாபகப்படுத்தி எழுதிய கடிதத்துக்கும் பதில் இல்லை. உங்களுக்கு உடம்புக்கு ஏதாவது நேர்ந்து விட்டதோ என்று சித்தி ரொம்ப வருத்தப்படுகிறாள். இந்தக் கடிதத்துக்கும் பதில் இல்லையென்றால் உங்கள் சித்தி புறப்பட்டு அங்கே வந்து விடுவாள்.

உங்கள் சித்தி சொல்படி,

மீனலோசனி”

இந்தக் கடிதத்தைப் படித்ததும் கேசவனுக்குக் கோபம் தான் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் அந்தக் கடிதம் முத்து முத்தாக எழுதப் பட்டிருந்ததாகையினால் உடனே கிழித்தெறிய மனம் வரவில்லை. அதை எழுதியவள் ஒரு இளம் பெண் என்று அவனது உள் மனம் ஏனோ அவனுக்குச் சொல்லிற்று. அந்தக் கையெழுத்தின் அழகைப் பார்க்கும் போதே அந்தக் கடிதத்தை எழுதியவளின் அழகை மானசீகமாக அவனால் காண முடிந்தது.

சித்தி! அவளை நினைக்கும்போதே அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் தகப்பனார் மட்டும் இரண்டாந்தாரமாக அவளை மணக்காதிருந்தால், அவன் மனம் இத்தனை தூரம் சஞ்சலம் அடைய நேர்ந்திராது. இத்தனைக்கும் அவன் இன்னும் சித்தியைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை.

கேசவனுக்கு மூன்று வயதாயிருக்கும் போதே அவன் தாயார் இறந்து விட்டாள். குழந்தைப் பிராயமாதலால் தாயைப் பிரிந்த துயரம் அவனை அதிகமாக வாட்டவில்லை. ஆனால் அவன் தகப்பனார் மனைவியைப் பிரிந்த துக்கத்தில் பாதி உடம்பாகி விட்டார். குழந்தை கேசவன் மட்டும் இல்லை என்றால் அவர் தம் உயிரையே மாய்த்துக் கொண்டிருப்பார். கேசவனை வளர்ப்பதற்காக அவர் துக்கத்தை ஒருவாறு மறந்திருந்தார். அவர் ஒரு பிராசுதாராகையால் அவருக்கு வாழ்க்கையில் வேறு கஷ்டம் இல்லை. ஆகிய அளவுக்கு மீறி மிகவும் செல்வமாகக் கேசவனை வளர்த்தார். கேசவன் எதை விரும்பினாலும் அது மறு கணம் அவன் கைக்கு வந்துவிடும். வயது வளருவது போலவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கேசவனிடம் முரட்டுப் பிடிவாதமும் வளர்ந்து கொண்டே வந்தது.

கேசவன் நாலாம் பாரம் வரையில் உள்ளூரிலேயே படித்தான். அவன் வகுப்பு மாணவர்கள் சென்னைக்குப் போய்ப் படிப்பதை அறிந்து அவனும் சென்னைக்குப் போக விரும்பினான். கேசவன் ஒரு காரியத்தைச் செய்ய விரும்பினான் என்றால் அதை மாற்றத் திரி நேத்திரனை பரமசிவனாலேயே முடியாது. குழந்தைப் பிராயத்தில் வளர்ந்த பிடிவாதம் இப்பொழுது வலுப்பட்டு வைரம் பாய்ந்து அசைக்க முடியாதபடி ஆகிவிட்டது. சென்னையில் ஒரு வீடு பார்த்து அங்கு ஒரு சமையற்காரனையும் அமர்த்தி, கேசவனைச் சென்னையில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ப்பதைத் தவிர அவன் தகப்பனாருக்கு வேறு வழியில்லை என்றாகி விட்டது. கேசவன் எஸ். எஸ். எல். ஸி. யில் தேறிக் கல்லூரியில் மேல் படிப்புக்குச் சேர்ந்தான். வசதியாக ஹாஸ்டலிலேயே தங்கினான். அவன் போக்கை மாற்ற முடியவில்லையாதலால் அவன் தகப்பனார் அவன் வழியே செல்ல வேண்டியதாயிற்று.

ஒருவாறு ‘இண்டர்மீடியட்’ பரீட்சை முடிந்தது. கேசவனுக்குத் தான் பரீட்சையில் எப்படியும் தேறிவிடுவோம் என்று பரிபூரண நம்பிக்கை பிறந்தது. பரீட்சை முடிந்ததும் ஊருக்குக் கடிதம் எழுதிப் போட்டு விட்டுச் சில நாட்கள் நிம்மதியாயிருந்தான் கேசவன். நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டும், சினிமா, நாடகம் பார்த்துக் கொண்டும் ஜாலியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் அவன் மன நிம்மதியை இழக்கச் செய்த அந்தக் கடிதம் வந்தது. அவன் அந்தக் கடிதத்தைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவன் தாயார் இறந்து வெகு நாட்களுக்குப் பிறகு தகப்பனார் இப்படி அடியோடு மாறி விடுவார் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. தன் தாயார் ஸ்தானத்தில் இன்னொருத்தி இருப்பதை அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அப்பா எப்படி இவ்வித முடிவுக்கு வந்தார்? இவ்வளவு விரைவில் அம்மா இறந்த



தாய்நாட்டின் விடுதலைக்காக வீரப்போர் புரிந்த வீரபாண்டியக் கட்டப் பொம்மன் வரலாற்றைக் கடலூர் அமெச்சூர் நாடகக் குழுவினரும் ஜில்லா ஆயுதப் போலீஸ் நாடகக் குழுவினரும் சேர்ந்து டிசம்பர் 22ந்தேதியன்று நாடகமாக வெகு சிறப்பாக நடித்தனர். 'பாஞ்சாலங் குறிச்சியின் வீழ்ச்சி' என்னும் இந்நாடகத்துக்குத் தென் ஆற்காடு ஜில்லா கலெக்டர் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

துக்கத்தை எப்படி மறந்தார் என்பதுதான் அவனுக்கு ஆச்சரியமா யிருந்தது.

அப்பா இரண்டாந்தாரம் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார் என்று நினைத்தாலே அவனுக்கு, துக்கம் துக்கமாக வந்தது. ஐம்பது வயதான தன் அப்பாவுக்கு இப்படி ஒரு மனத் தளர்ச்சி ஏற்படுவானேன் என்று நினைத்துக் கேசவன் மனம் புழுங்கினான்.

அப்பாவின் கடிதம் மிகவும் சுருக்கமாக, ஆனால் அழுத்தமாக அவருடைய தீர்மானத்தை அவனுக்குத் தெரிவித்தது.

''அன்புள்ள கேசவனுக்கு,

அநேக ஆசீர்வாதம். இந்தக் கடிதத்தை மிகவும் அவசரத்தில் உனக்கு எழுதுகிறேன். விவரம் எல்லாம் நேரில் பேசிக் கொள்ளலாம்.

நான் பல காரணங்களை உத்தேசித்து, முக்கியமாக உன் நன்மைக்காக, சுந்தரியை இரண்டாந்தாரமாக மணந்து கொள்ள நிச்சயித்து விட்டேன். உனக்கும் பரீட்சை முடிந்து விட்டபடியினால் எப்படியும் நீ இங்கு வர வேண்டியதுதான். நீ இன்றே புறப்பட்டு விடு. மற்றவை நேரில்.

அன்புள்ள,
அப்பா ''

இந்தக் கடிதத்தைப் படித்ததும் கேசவன் தமிழ் சினிமாக்களில் வரும் கதாநாயகன் மாதிரி தலையை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு, ''அப்பா! அப்பா!! அப்பா!!!'' என்று மூன்று முறை அலறினான். பிறகு, ''ஹஹ்ஹஹ்ஹா!'' என்று சினிமாச் சிரிப்பு ஒன்று சிரித்தான்.

'ஐயோ! அன்புள்ள அப்பா! என்ன அன்பு வேண்டிக் கிடக்கிறது! என்னுடைய நன்மையை உத்தேசித்துத்தான் இவர் மறு விவாகம் செய்து கொள்ளுகிறாராமே! இப்படி எழுதினால் இவருடைய சுயநலம் ஒருவருக்கும் தெரியாது என்ற எண்ணமா...?' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் கேசவன். அவன் உள்ளம் பொருமியது.

குழந்தைப் பருவத்திலிருந்து படிந்து விட்ட அவனது முரட்டுப் பிடிவாத குணம் என்னும் பாம்பு தகப்பனாரின் கடிதத்தைக் கண்டதும், சீறிப்படமெடுத்துஆடியது. அப்பாவின்கடிதத்தில் கண்ட விஷயத்தைப் பற்றிச் சிறிதும் அவன் யோசித்துப் பார்க்க நினைக்கவில்லை. ஊருக்குப் போய் அப்பாவின் முகத்தில் விழிக்கவே அவனுக்கு விருப்பமில்லை. உடனே, யாருடனும் சொல்லிக் கொள்ளாமல், எங்கேனும் ஒரு கண்காணாத தேசத்துக்குப் போய் விட வேண்டும் என்று அவன் மனம் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது.

நல்ல வேளையாக அவனது திட்டத்தை ஒழுங்காக நடத்துவதற்குச் சாதகமாகப் பரீட்சையும் முடிந்து விட்டது. அவன் அப்பொழுதிருந்த உள்ளக் குமுறலின் வேகத்தில், பரீட்சை முடிவைப் பற்றியோ தனது வருங்கால வாழ்வைப் பற்றியோ கொஞ்சங்கூடப் பொருட்படுத்தவில்லை.

கேசவன் ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்து அதில் பின்வருமாறு எழுதினான்:

'' அப்பா அவர்களுக்கு,

என் நன்மையை உத்தேசித்து, நீங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் அக்கிரமமான காரியத்துக்கு ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட்டேன். நேரில் அங்கு வந்து உங்களோடு இது பற்றி வாதம் செய்து கசப்பை வளர்த்துக் கொள்ளவும் நான் தயாராயில்லை. நான் எங்கேயோ போகிறேன். என்னைத் தேட முயல்வது உங்களுக்கு வீண் சிரமம்.

கேசவன்.''

இந்தக் கடிதத்தைத் தன் தகப்பனுக்கு அனுப்பிவிட்டு, கேசவன் அன்றைக்கே தன் அறையைக் காலி செய்து கொண்டு பம்பாய்க்குச் சென்று விட்டான். அங்கு அவனது நண்பன் ஒருவனின் உதவியால் ராணுவத்தில் சேர்ந்து விட்டான்.

நாலைந்து வருஷங்கள் சென்று விட்டன. கேசவன் இப்பொழுது ராணுவ இலாகாவில் ஒரு அதிகாரி. அவனுடைய முரட்டுப் பிடிவாத குணம் அந்த இலாகாவில் படிப்படியாக விரைவில் முன்னுக்கு வரப் பெரிதும் உதவியாயிருந்தது. முன்பு எந்தக் குணம் அவனுக்கு

ஒரு பெரிய குறையாயிருந்ததோ, அந்தக் குணமே இப்பொழுது அவன் இலாகாவில் அவனுக்கு மிகவும் நல்ல பெயரைக் கொடுத்தது: கண்டிப்பும் கருமாக இருந்து மேலதிகாரியின் தயவை அவன் வெகு விரைவிலேயே பெற்று விட்டான்.

இந்திய ராணுவத்தில் சேர்ந்து திறமையாகச் சேவை புரிந்து நல்ல பெயருடன் தாய் நாடு திரும்பினான். ஜபல்பூருக்கு வந்து சேர்ந்ததும்தான் அவனுக்குத் தாய் நாட்டின் நினைவு, மீண்டும் பிறந்த நாட்டைப் பார்க்க வேண்டும் என்னும் ஓர் ஆர்வம் எல்லாம் திரும்பின. அதற்கு ஏற்றாற்போல், அவன் தங்கியிருந்த தென்னிந்தியப் பிரமுகர் வீட்டுக்கு வந்த பத்திரிகையில் காணப்பட்ட விளம்பரம் அவனைத் தென்னிந்தியாவுக்கே தூக்கிச் சென்று விட்டது.

முக்கிய அறிவிப்பு

திருச்சி ஜில்லா, முசிரி தாலூக்காவில் பெரிய மிராசுதாராயிருந்த வேதராமன் மூன்று மாதங்களுக்கு முன்பு காலமாகி விட்டார். அவரது ஏக புத்திரனாகிய கேசவன் குடும்பத்தை விட்டுப் பல வருஷங்களுக்கு முன்பே வெளியேறி விட்டார். அவர் இந்த விளம்பரத்தைக் கண்டதும் தம்மைத் தகுந்த முறையில் ருசுப்படுத்திக் கொண்டு தந்தையின் சொத்துக்கு உரியவராகலாம்.

இப்படிக்கு,
ஜம்புநாதன்,
வக்கீல்.

இந்த விளம்பரத்தைப் பார்த்ததும் கேசவனுக்குத் தன் பழைய நினைவுகளெல்லாம் மனக் கண் முன் தோன்றின.

'அப்பா இறந்து விட்டாரா? அவர் மறு விவாகம் என்னவாயிற்று?....நிச்சயம் அது நடந்திருக்கும். பின்பு அவள் என்னவானாள்? சரி, என்னவாயிருந்தாலும் ஊருக்குப் போய்ப் பார்த்தால் தெரிந்து விடுகிறது!' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கேசவன் அன்றைய தினமே ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

ஊருக்கு வந்து சேர்ந்து தன்னை ருசுப்படுத்திக் கொண்டு சொத்துரிமையைப் பெறுவதில் கேசவனுக்குச் சிரமம் சிறிதும் இருக்கவில்லை. வக்கீல் ஜம்புநாதனுக்குக் கேசவனைச் சிறு பிராயம் முதல் நன்றாய்த் தெரியுமாதலால், அவனைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் அவனுக்கு உரிய சொத்துக்களை அவனது உடைமையாக்கினார்.

இந்த விவகாரங்களெல்லாம் ஒருவாறு முடிந்ததும், கேசவன் தன் பூர்வீக வீட்டில் புகுந்து ஆராய்ச்சி செய்தான். விலை உயர்ந்த கட்டில், மேஜை, பீரோக்களெல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன.

கேசவன் வியப்புடன் யாவற்றையும் ஆராய்ந்தான். அச்சமயம் வக்கீல் உள்ளே வந்து, "மிஸ்டர் கேசவன், இதோ உங்கள் தகப்பனாரின் உயில். அதை ஒரு முறை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அவனிடம் உயிலைக் கொடுத்தார்.

கேசவன் அதை வாங்கிக் கவனமாகப் பார்த்தான். அதில் சொத்து முழுவதற்கும் அவனையே உரிமையாக்கியிருந்தது. உயிலின் ஷரத்துக்களைப் படித்தபோது அவன் துள்ளிக் குதித்தான். மாதம் ஐம்பது ரூபாய் அவன் சித்திக்கு அனுப்பி வைக்கும்படி அதில் அவன் தகப்பனார் எழுதியிருந்தார். கன்னியாகுமரியிலிருந்த அவன் சித்தியின் விலாசமும் கொடுக்கப்பட்டிருந்தது.

அவனுக்குச் சிறிதும் விருப்பம் இல்லாவிட்டாலும் உயிலின் வாசகப்படி கேசவன் ஒவ்வொரு மாதமும் சித்திக்குப் பணம் அனுப்பி வந்தான். நாலைந்து மாதங்களுக்கெல்லாம் அது அவன் மனத்தை உறுத்துவதற்கு ஆரம்பித்தது. உடனே பணம் அனுப்புவதை அவன் நிறுத்தி விட்டான்.

* * *

அன்று வந்த கடிதம் அவனை மிகவும் சலனப் படுத்திவிட்டது.

கேசவன் இதுவரையில் தன் கல்யாணத்தைப் பற்றியோ, குடும்ப வாழ்க்கையைப் பற்றியோ நினைத்துப் பார்த்ததேயில்லை. அதைப் பற்றியெல்லாம் நினைத்துப் பார்க்க அவனுக்குச் சந்தர்ப்பமே கிடைத்ததில்லை. இப்பொழுது அவனையும் அறியாமல் அவன் உள்ளத்தில் மண வாழ்க்கையைப் பற்றிய இன்ப நினைவுகள் இலேசாக இழையோடின. அதைத் தகர்த்தெறிய அவன் எவ்வளவோ முயன்றும் அவனால் இயலவில்லை.

முத்தான கையெழுத்தில் அன்று வந்த கடிதம் அவன் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பியது. 'அதை யார் எழுதியிருப்பார்கள்? நிச்சயம் ஒரு பெண்மணிதான் எழுதியிருக்க வேண்டும். கையெழுத்தில் பெண்மையின் பூரண எழிலும் ததும்பி நிற்கிறதே' என்று கேசவன் சிந்திக்கலானான். அவன் சிந்தனையின் நடுவே ஒவிய எழில் கொண்ட ஒரு பெண்மணியின் உருவம் நிழலாடியது. ஆனாலும், அவன் மனம் மட்டும் உறுதியாயிருந்தது. சித்தியின் விஷயத்தில் அவன் தன் அபிப்பிராயத்தைச் சிறிதும் மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை.




57 வருஷங்களாக
பிரக்யாதி பெற்றது.
லோத்ரா பெண்களுக்கு இன்றியமையாதது. ஆரோக்யத்திற்கும் ஆனந்தத்திற்கும் லோத்ராவை விட சிறந்த டானிக் கிடையாது. எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
கேசரி குடீரம் பிரைவேட் லிமிடெட்.
ராயப்பேட்டை, மதராஸ்-14.
லோத்ரா
பெண்களுக்கே
Lodhra

ஒரு வாரம் சென்றது. அன்று காலையில் அவன் வீட்டு வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து சுமார் நாற்பது வயது மதிக்கக் கூடிய ஒரு மாது இறங்கினாள். அவளைக் கண்டதும் கேசவனுக்கு அவனையும் அறியாமல் ஒரு மரியாதை ஏற்பட்டது.

"வாருங்கள்!" என்று கை கூப்பி அவளை வரவேற்றான்.

"என்ன....உனக்குத் தெரிந்திருக்காது. நான்தான் உன் சித்தி சுந்தரி!" என்று அந்தப் பெண்மணி சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள்.

கேசவன் முகம் அந்த வார்த்தைகளைக் கேட்டதும் கோபத்தினால் சிவந்தது. ஆனால் ஏனோ அவளைப் பார்த்து அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவளை நேரில் காணும் போது என்னவெல்லாம் ஏசிப் பேசவேண்டும் என்று கற்பனை செய்து வைத்திருந்தான்!

"கேசவா, உனக்கு விருப்பமில்லையென்றால் நான் இப்போதே ஊருக்குப் போய் விடுகிறேன். உன்னை நேரில் ஒரு முறை கண்டு விடவேண்டும் என்று ஆவலாயிருந்தது....!" என்று கூறி, சுந்தரி அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

கேசவனுக்கு என்ன சொல்லுவதென்றே தோன்றவில்லை. 'போ, வெளியே!' என்று அவளைப் பார்த்துச் சொல்ல முடியாமல் ஏதோ ஒன்று அவன் தொண்டையை அடைத்தது. விறுவிறு என்று அவனே போய், சுந்தரியின் மூட்டை, பெட்டிகளை உள்ளே கொண்டு போய் வைத்தான். சுந்தரியும் மலர்ந்த முகத்துடன் உள்ளே போனாள்.

கேசவன் பல் துலக்கி, ஸ்நானம் செய்து விட்டு வருவதற்கும் சுந்தரி காப்பி தயார் செய்து கூடத்துப் பெஞ்சியின்மேல் கொண்டு வந்து வைப்பதற்கும் சரியாயிருந்தது. கூடம் முழுவதும் காப்பியின் நறுமணம் கம்மென்று கமழ்ந்தது. கேசவன் அதையெடுத்து ஆற்றி, ரஸித்துச் சாப்பிட்டான்.

காப்பியைச் சாப்பிட்டுக் கொண்டே, கூடத்தையும் சமையலறையையும் ஒரு முறை பார்த்தான்.

அடாடா! சமையலறைதான் என்ன சுத்தமாயிருந்தது! அதற்குள் பெருக்கி, அடுப்பு மெழுகி, கோலம் போட்டு எவ்வளவு அழகாயிருக்கிறது சமையலறை! முன்பு அவன் சமையலறையை எவ்வளவு மோசமாக வைத்திருந்தான். போட்டது போட்டபடியே கிடக்குமே அங்கே!

கேசவனுக்கு ஒரே வியப்பாயிருந்தது. அவனையும் அறியாமல் சித்தியிடம் அவனுக்கு ஒருவித மரியாதை ஏற்பட்டது.

'அப்பா செய்த பிழைக்குச் சித்தி என்ன செய்வாள்!' என்று அவனை அவன் உள்மனம் கேள்வி கேட்டது.

தினசரி சித்தி அறுசுவை உண்டி தயாரித்துக் கேசவனுக்கு அன்போடு பரிமாறினாள். கொஞ்சமும் அலுத்துக் கொள்ளாமல், சித்தி தனக்காக ஒரு நாளைப் போலத் தினுசு தினுசாகச் சமைத்துப் போடுவதைக் கண்டு கேசவன் அயர்ந்து போனான்.

'இந்த உத்தமியை வீணாகத் தவறாக நினைத்துப் பணம் அனுப்பாமல் மனதைப் புண்படுத்திவிட்டோமே!' என்று அவன் மனம் மிகவும் பச்சாத்தாபப் பட்டது.

பத்து நாட்கள் ஆனந்தமாக ஓடின.

அன்று காலையிலே சித்தி பரபரப்பாக மூட்டை கட்டுவதில் முனைந்திருப்பதைப் பார்த்த கேசவனுக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை.

"சித்தி, என்ன மூட்டை முடிச்சுகள் பலமாயிருக்கிறதே! நீங்கள்...!" என்று மென்று விழுங்கி உளறிக் கொட்டினான்.

"...ஆமாம். நான் ஊருக்குப் போகலாம் என்றிருக்கிறேன். நான் இங்கே வந்து பத்து நாட்களாகி விட்டன. பாவம், குழந்தை மீனலோசனி தனியாக அவதிப் படுவாள். தானே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு வேலைக்கும் போக வேண்டுமென்றால் சிரமந்தானே!" என்றாள் சித்தி.

"சித்தி! முத்துக் கோத்தாற்போல் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாளே, அவளைத் தானே சொல்லுகிறீர்கள்?" என்று தன்னை மீறிய உற்சாகத்துடன் பலமாகக் கேட்டு விட்டான். அப்புறம் அவனுக்கே என்னவோ போல் ஆகிவிட்டது.

சித்தி அவனுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினாள். அதில் எல்லையற்ற குதூகலத்தையும் நாணம் கலந்த அசட்டுக் களையையும் கண்டாள்.

கேசவன் பரபரவென்று உள்ளே போய்க் கையில் காகிதமும் பேனாவுமாகத் திரும்பி வந்தான்.

"சித்தி! மீனலோசனியை இங்கேயே வரவழைத்து விடலாம். அவள் மட்டும் தனியே அங்கே இருப்பானேன்? நீங்கள் சொல்லுங்கள். நான் எழுதுகிறேன்..." என்றான் கேசவன்.

சித்தி அடக்க முடியாத வியப்புடன் வாக்கியம் வாக்கியமாகச் சொல்ல, கேசவன் எழுதலானான்.

* * *

கேசவனது கடிதம் கிடைத்த இரண்டாம் நாள் மீனலோசனி புறப்பட்டு மூசிரிக்கு வந்து சேர்ந்தாள். மீனலோசனியின் விஜயத்தால் அந்த வீடு முழுவதும் புதிய ஒளி வீசியது. கேசவனின் உள்ளமும் இனம் தெரியாத இன்பத்தில் விம்மியது.

'மீனலோசனி யென்று இத்தனை அழகாக இவளுக்கு யார் பெயர் வைத்தது? என்ன விசாலமான கண்கள்! அவற்றில்தான் என்ன கவர்ச்சி! நான் முழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கிறதே!' என்று கேசவனின் மனம் மீனலோசனியின் கரிய பெரிய விழிகளைப் பார்த்துக் கவி பாடத் தொடங்கியது.

"சித்தி! மீனலோசனி உங்களுக்கு என்ன உறவு? அதைப் பற்றி நானும் உங்களைக் கேட்கவில்லை; நீங்களும் சொல்லவில்லையே!" என்றான் கேசவன்.

"மீனலோசனி என் தம்பியின் மகள். தாய் தந்தையரை இளமையிலே இழந்து விட்ட அநாதைப் பெண். அவளை எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையில் படிக்க



சென்னை, தியாகராயநகர் ராஜாபாதர் முதலியார் தெருவில் இருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பாடசாலையினர், டிஸம்பர் 15ந் தேதியன்று ஸ்ரீமதி விசாலாட்சி நாராயணஸ்வாமி தலைமையில், தநுர்மாத பாராயண துவக்க விழாவை வெகு கோலாகலமாகக் கொண்டாடினர். ஸ்ரீமதி குகப்ரியை அவர்கள் பாவை நோன்பின் பெருமையைப் பற்றித் தெள்ளு தமிழில் மிகச் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். இப்பள்ளியின் முன்னேற்றத்தில் சிரத்தை கொண்டு தாராளமாகப் பொருளுதவி செய்துவரும் திருமதிகள் ராதாபாய் சுந்தரம் முதலியார் அவர்களும், புஷ்பாவதி கோவிந்தபிள்ளை அவர்களும் மாணவ மாணவிகளுக்குத் திருப்பாவை—திருவெம்பாவைப் புத்தகங்களைப் பரிசாக வழங்கினார்கள்.

வைத்தேன். பொறுப்புத் தெரிந்தவளாதலால், ஆறாம் படிவத்துடன் படிப்பை நிறுத்திக் கொண்டு உபாத்தியாயினிப் பயிற்சியில் தேறி, அங்கேயே ஒரு பள்ளிக்கூடத்தில் வேலையும் தேடிக் கொண்டாள். அவளை ஒருவனிடம் ஒப்படைத்து விட்டால்...'' என்று சித்தி கூறிக் கொண்டிருக்கும் போதே கேசவன் இடை மறித்து, ''சித்தி, நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இது உங்கள் வீடு. நான் உங்கள் மகன். நீங்கள் என் தாய்...'' என்றான் உணர்ச்சி பரவசத்துடன்.

''இப்பொழுதுதான் உன்னைப்பற்றி உன் தகப்பனார் சொன்னது நினைவுக்கு வருகிறது. 'சுந்தரி! கேசவன் அருமையான பிள்ளை. கொஞ்சம் முரட்டுத்தனம் உண்டு. சின்ன வயசிலேயே தாயாரை இழந்து விட்டபடியினால் தாயன்பைப் பெறாதவன். உடன் பிறப்பிலும் சகோதரர்களோ, சகோதரிகளோ இல்லையாகையினால் அவனுக்கு யாருடனும் அன்பாகப் பழகத் தெரியாது. எப்படியும் ஒருநாள் அவனை நீ சந்திப்பாய். அவனைப் பொறுப்புள்ள மனிதனாக்க வேண்டியது உன் பொறுப்பு. என்னுடைய இந்த வயதில் உன் கரம் பற்றுவதே இந்தக் காரணம் பற்றித்தான். இருபத்தெட்டு வயதான ஏழைப் பெண்ணாகிய உனக்கு வாழ்வளிப்பது மட்டும் என் நோக்கமல்ல. கேசவனுக்கு ஒரு தாயாரும் கிடைப்பதனால்தான் உன்னை மணக்க இசைந்தேன். உன் அன்பினால் தான் அவனை வழிப்படுத்த முடியும். மீனலோசனியையும் அவனிடம் ஒப்படைத்து விடு' ....என்றார் உன் அப்பா!''

''....சித்தி, நான் மகா பாதகன். அப்பாவின் அருமை தெரியாமல் அவர் மனத்தைப் புண்படுத்தி விட்டு, ஊரைவிட்டே ஓடி விட்டேன்....!'' என்று கேசவன் கூறிவிட்டு மேலே பேச முடியாமல் விம்மினான்.

அஜந்தா சித்திரம்போல் சித்தியின் அருகில் நின்று கொண்டிருந்த மீனலோசனியின் விசாலமான நயனங்கள் இதைக் கேட்டு ஏனோ நீரைப் பெருக்கின.

''கேசவா! இப்பொழுதாவது உனக்கு அப்பாவின் அருமை தெரிந்ததே! என்னிடம் உனக்கு அநாவசியமாக ஏற்பட்டிருந்த கோபமும் இப்போது தணிந்திருக்கும். உன் மனத்தில் இருப்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றுதான் நான் ஊரைவிட்டுப் போனது. இப்பொழுது என்னைவிடப் பாக்கியசாலி யாரும் இல்லை....'' என்றாள் சித்தி.

''சித்தி, என்னை மன்னித்து விடுங்கள். இப்பொழுதுதான் நான் மனிதனானேன். பழைய நிகழ்ச்சிகளை மறந்து விடுங்கள்!'' என்றான் கேசவன்.

''சரி, இரண்டு பேரும் வாருங்கள். இலை போடுகிறேன். சாப்பிட்டுவிட்டுப் பேசலாம்'' என்று கூறியபடி சித்தி அங்கிருந்து எழுந்து உள்ளே சென்றாள்.

உடனே கேசவன் எழுந்து மீனலோசனியை நெருங்கினான்.

''மீனலோசனி, உன் எழுத்தைக் கண்டே உன் அழகை மதிப்பிட்டுவிட்டேன்!''

''..அது ரொம்பத் தவறு. நீங்கள் என் கடிதத்தைக் கொண்டு என்னை மதிப்பிட்டது போல், நீங்கள் முன்பு உங்கள் தகப்பனாருக்கு எழுதிய கடிதத்தைக் கொண்டு உங்களை நான் மதிப்பிட்டிருந்தால்....என்ன ஆகும்?''

தங்கச் சிலை வாய் திறந்து பேசியது போல் இருந்தது, கேசவனுக்கு மீனலோசனியின் பேச்சு. விசாலமான அவளது கண்களின் குறுப்புப் பார்வை அவனைக் கந்தர்வலோகத்துக்குத் தூக்கிச் சென்றது.


''மீனலோசனி, அந்தப் பழைய கேசவன் அல்ல, இப்பொழுது நான். உன் பார்வையின் சக்தியினால் மனிதனாகி விட்டேன். வந்து.... என்னை......மணந்து கொள்ள உனக்கு இஷ்டந்தானே?''

''அந்தக் கேள்வியை.....நானல்லவா உங்களைக் கேட்க வேண்டும்?'' என்று சிரமப்பட்டுக் கூறி விட்டு நாணத்தோடு முகத்தைக் கவிழ்த்து கொண்டாள் மீனலோசனி.

கேசவன் அளவற்ற மகிழ்ச்சியோடு அவள் மென் கரங்களைப் பரிவோடு பற்றினான்.

தெர்மாபிலேயில் அதிசய சம்பவம்

கி. மு. 480-ல் பாரசீகப் பேரரசன் ஸெர்க்ஸஸ் கிரேக்கர் மீது படையெடுத்த பொழுது அவனுடைய சேனையில் சில இந்திய வில்லாளிகளும் இருந்தனர். இவ்வில்லாளிகள் இந்தியாவிலிருந்துத் தருவிக்கப்பட்ட ஓர் நூதனமான ஆயுதத்தைக் கையாண்டனர் . . . அதாவது எஃகு முனையிட்ட அம்புகள். பாரசீகப் படையின் நூதன ஆயுதங்களைக் கண்டு நடுங்கிய கிரேக்க சேனையானது தெர்மாபிலே போரில் முற்றிலும் முறியடிக்கப்பட்ட விவரங்கள் சரித்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.



இன்று மறுபடியும் எஃகு நம் நாட்டின் கவனத்தில் முதன்மையுற்றிருக்கிறது. உயரிய நோக்கத்துடன் தான். நமது எஃகு உற்பத்தியானது விரைவாக விஸ்தரிக்கப்பட்டு வருகிறது . . . போராட்டத்திற்கல்ல, சமாதானத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்குமே.

டாடா ஸ்டீல் நாட்டின் பணிக்கே

தெய்வச் சிலைகள்



எஸ்.ஜி.ஆர்.

தை மாதம் பிறப்பதற்கு இன்னும் இரண்டே தினங்கள் பாக்கி இருந்தன.

'வரும் பொங்கல் பண்டிகையைக் கொண்டாட நிச்சயம் எங்கள் கிராமத்துக்கு வருவாய் என்று எதிர்பார்க்கிறேன்' என்று நண்பன் நாராயணனிடமிருந்து கடிதம் வந்தவுடனேயே நிச்சயம் இம்முறை அருணபுரம் போய்வந்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

நாராயணன் என்னுடைய கலாசாலை நண்பன். அருணபுரம் பண்ணையார் மகன். கடந்த நான்கு வருடங்களாகத் தங்கள் கிராமத்துக்கு ஒருமுறை வந்து போகும்படி கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறான். ஆனால் சந்தர்ப்பம் இந்த வருடம்தான் கிடைத்தது.

நான் ரயிலை விட்டு இறங்கியதுமே, "இப்பொழுதாவது துரைக்கு வழி தெரிந்ததா?" என்று கூறிய வண்ணம் என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்றான் நாராயணன்.

என்னுடைய பெட்டியை அவனுடன் வந்த ஆள் தூக்கிக் கொள்ள நாங்கள் ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தோம்.

வில் வண்டியொன்று வெளியே காத்துக் கொண்டிருந்தது. நாங்கள் ஏறிக்கொண்டதும் மயிலைக் காளைகள் பூட்டிய அவ்வண்டி பறக்க ஆரம்பித்தது.

நண்பன் 'வளவள'வென்று பழைய நாட்களில் நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டான். ஆனால் என்னுடைய மனம் கிராமத்தின் இயற்கையை ரசிப்பதில் ஈடுபட்டு விட்டது.

அரைமணி நேரத்துக்கெல்லாம் வண்டி அருணபுரத்தை அடைந்து விட்டது. வண்டி மாரியம்மன் கோவிலை நெருங்கியதும், "முனியாண்டி, வண்டியை நிறுத்து!" என்றான் என் அருமை நண்பன்.

வண்டி நின்றது. இருவரும் இறங்கினோம். "இதுதான் மாரியம்மன் கோவில். ரொம்பவும் சக்தி வாய்ந்தது" என்று கூறியவண்ணம் கோவிலை நெருங்கினான்.

அவன் பின்னாலேயே சென்ற நான் கோவிலின் வாயிலை அடைந்ததும் திடுக்கிட்டு நின்றேன். நான் அப்படித் திகைத்து நின்றதற்குக் காரணம் அந்தக் கோவிலுக்குப் பக்கத்திலே கண்ட காட்சி தான்.

இரண்டு சிலைகள்! ஆம், மனித உருவிலுள்ள சிலைகள்தான். ஒன்று ஆண்; மற்றொன்று பெண். ஆறடி உயரத்துக்கு அவை வெகு கம்பீரமாக நின்று கொண்டிருந்தன. இரண்டு சிலைகளின் கழுத்துக்களிலும் பூமாலைகள் காட்சி தந்தன.

என்னுடைய திகைப்பைக் கண்ட நண்பன் "என்ன, சிலையாகிவிட்டாயா..?" என்றான் மெல்ல நகைத்த வண்ணம். பிறகுதொடர்ந்து அவன்."கோவிலுக்குப்பக்கத்திலே இரு மனித சிலைகளைப் பார்த்த எவரும் சிலையாக வேண்டியதுதான். ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்விரண்டு சிலைகளையும் மாரியம்மனுக்குச் சமமாகப் பாவித்து வருகிறோம் நாங்கள்" என்றான் நண்பன்.

"அப்படியென்றால் இந்தச் சிலைகளைச் சுற்றி ஓர் அற்புதமான வரலாறு பின்னிக் கிடக்கிறது என்று சொல்...." என்றேன்.

"அது ஒரு பழைய வரலாறு. பிறகு சொல்கிறேன், கிளம்பு.." என்றான் அவன்.

நான் சிலைக்கு அப்பால் சென்று உட்கார்ந்து கொண்டேன். சிலையின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும்வரை நான் அவ்விடத்தை விட்டு நகரமாட்டேன் என்பதைத் தெரிந்து கொண்ட நண்பன், வண்டியை அனுப்பி விட்டு, என் அருகே வந்து அமர்ந்தான்.

நான் காதைத் தீட்டி வைத்துக் கொண்டு வரலாற்றைக் கேட்கத் தயாரானேன்.

இருபது வருடங்களுக்கு முன்னால்....

* * *

பண்ணையார் பரமசிவத்தைப் பற்றி அறியாதவர்கள் அக்காலத்தில் எவருமே இல்லை. சுற்று வட்டாரங்களில் உள்ள குடியானவர்களுக்கு அவரிடம் பயம் கலந்த பக்தி அதிகம். அவர் எதிரே வருகிறார் என்றால் அந்தத் தெருவில் வருகிற அனைவரும் ஓரமாக ஒதுங்கிப் போய்ப் பயந்து நிற்பார்கள். அருணபுரத்திலுள்ள நிலங்களில் பாதி அவருக்குச் சொந்த மானவை.

பரமசிவத்தின் அந்தஸ்துக்குப் போட்டியாக இருந்த ஒரே பண்ணையார்தான் சிதம்பரம். அருணபுரத்திலிருந்த நிலங்களில் ஒரு பாதி முன்னவருக்குச் சொந்தம் என்றால் மீதிப் பாதி பின்னவருக்கு உரிமையானது. பரமசிவத்திடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்களோ, அதேயளவு மதிப்பு பண்ணையார் சிதம்பரத்திடம் வைத்திருந்தார்கள் அந்த ஊரார்.

ஒன்றுக்கொன்று ஆள் பலத்திலும் பண பலத்திலும் சளைத்துக் காணப்படாத இவ்விரண்டு பண்ணைகளுக்கும் நெடுங்காலமாகவே பகை இருந்து வந்தது. இதனால் பரமசிவத்துக்கும் சிதம்பரத்துக்கும் மட்டும் விரோதமின்றி, இரண்டு பண்ணைகளிலும் வேலை செய்யும் ஆட்களுக்குள்ளும் விரோதம் இருந்து வந்தது. வரப்பை வெட்டுவது, மடையைத் திறந்து விடுவது போன்ற சில்லறை விஷயங்களில் இரு பண்ணை ஆட்களும் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் அடிக்கடி இவ்விரண்டு பண்ணை ஆட்களுக்கும் நடுவே பூசலும் கை கலப்பும் நடப்பது அன்றாடம் காட்சியாகி விட்டது.

இவ்விரண்டு பண்ணைகளிலும் வேலை செய்யும் ஆட்களில், இரண்டே இரண்டு உள்ளங்

கன் மட்டும் எவ்விதமான விரோத மனப் பான்மையும் இன்றி 'அன்பு' என்ற சங்கிலி யால் பிணைக்கப்பட்டு வளைய வந்தன.

ஒன்று அஞ்சலை! பரமசிவம் பண்ணையில் தன் தகப்பன் வீராசாமியுடன் வேலை செய்து வந்தாள். மணலிலிருந்து பிடுங்கிய வள்ளிக்கிழங்கைப் போல் தளதள வென்று ஜொலிக்கும் உடல். கறுத்த மேனி; அந்தக் கருமை நிறம் அவள் வசீகரத்தை அதிகமாக்கியே காட்டியது. கருவண்டுக் கண்கள்; சதா சுழலும் அக்கயல் விழிகளிலே மயங்காத வாலிப உள்ளங்களே கிடையாது. பருவக் கொடியில் மலர்ந்த அந்தப் பவள மல்லிகை ஆறுமுகத்தி னிடம் நாட்டம் கொண்டது.



ஆறுமுகம், சிதம்பரம் பண்ணையில் வேலை செய்பவன். இளமையின் மிடுக்கும் வாலிபத்தின் துடுக்கும் கொண்ட கட்டிளங்காளை. அரும்பு மீசையும் குறும்புச் சிரிப்புமாகக் காணப்படும் அவன் மேல் அஞ்சலை மையல் கொண்டது வியப்பல்ல. அதே போல் இளமையின் எழிலும் பருவத்தின் பூரிப்பும் கொண்ட அஞ்சலையின் மேல் அவன் ஆசை கொண்டதும் சிறிதும் அதிசயமல்ல.

ஆனால், இவ்விரண்டு பண்ணைகளிலும் உள்ள ஆட்கள், 'ஒருவரோடொருவர் உறவு கொண்டாடுவதோ, உள்ளத்தைப் பறி கொடுப்பதோ கூடாது' என்ற பண்ணையார்களின் சட்டத்தையும் மீறி அவர்கள் காதல் கொண்டதுதான் அதிசயம்.

திரை மறைவில் நடந்து கொண்டிருந்த அஞ்சலை-ஆறுமுகம் காதல் நாடகம் ஒரு நாள் அம்பலத்துக்கு வந்தது. விஷயமறிந்த இரு பண்ணையார்களும் எகிறிக் குதித்தனர்.

''அஞ்சலை! இனி நீ அந்தப் பயல் ஆறுமுகத்தோடு பல் இளித்துக் கொண்டிருப்பதைக் கண்டால் தொலைத்து விடுவேன். உலையைக் கட்டிக்க நம் பண்ணையிலே ஆள் இல்லாமலா போய் விட்டான்? வேலப்பன் மகன் கப்பு இருக்கிறான். உனக்கு ஏற்ற ஜோடி. தை பிறக்கட்டும்....இனி அந்தப் பயல் உறவை விட்டொழி....'' என்று கர்ஜித்தார் பண்ணையார் பரமசிவம்.

''டேய் துரோகி....என்ன வேலையடா செய்கிறாய்? நம் எதிர்ப் பண்ணையில் வேலை செய்யும் அந்த அஞ்சலையிடமா கொஞ்சிப் பேசுகிறாய்?.... மறுமுறை இந்தச் செய்தி என் காதுக்கு எட்டியதோ, அங்கேயே கண்டம் துண்டமாக வெட்டிப் போட்டுவிடச் சொல்வேன். உனக்குக் கண்ணாலம் கட்டிக்க விருப்பம் இருந்தால் சொல்லு .... நம் பண்ணையிலே இருக்கும் வேலாயிக்கும் உனக் கும் தை பிறந்ததும் முடி போட்டுவைத்து விடுகிறேன்'' என்று கூறினார் சிதம்பரம்.

அவர்கள் காதலுக்குப் பலமான தடை விதித்து விடவே ஆறுமுகம் - அஞ்சலை சந்திப்பு முன்புபோல் பகிரங்கமாக நடைபெறுவது நின்றது. ஆனால், உள்ளங்களைப் பறி கொடுத்து விட்டுத் தவிக்கும் அவ்விரண்டு காதல் பறவைகளும் யாரும் அறியா வண்ணம் தோப்புகளிலும் மறைவான இடங்களிலும் சந்தித்து அளவளாவத் தவறுவதில்லை.

காலச் சக்கரம் தன் போக்கில் வேகமாகச் சுழன்று கொண்டே இருந்தது.

தை மாதம் பிறப்பதற்கு இன்னும் பத்தே தினங்கள் இருந்தன. பயிர்களெல்லாம் வயது முதிர்ந்த கிழவனைப் போல் சுமக்க முடியாத தானியங்களைத் தாங்கித் தலை சாய்த்து விட்டன. ஒன்றிரண்டு நாட்களில் அறுவடை முடிந்து, நிறைந்து காணப்படும் வயல்களெல்லாம் பொட்டல் வெளியாகிவிடும்.

வழக்கம் போல் இரண்டு பண்ணையாட்களுக்கும் நடுவே அன்று ஏற்பட்ட சில்லறைத் தகராறு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளும் அளவுக்கு முற்றி விட்டது. திடீரென்று பரமசிவத்தின் பண்ணையாள் ஒருவன் கையிலிருந்த மண்வெட்டியைத் தன் எதிரியொருவன் மேல் வீசினான். அதே சமயம் எதிரியும் தன் மண்வெட்டியை அவன் மேல் வீசினான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு ஆட்களும் ரத்தம் பெருக்கெடுத்தோட மயக்கம் போட்டு விழுந்தனர்.



விஷயமறிந்த பரமசிவமும், சிதம்பரமும் ஸ்தலத்துக்கு விரைந்தோடி வந்தனர்.

தம்முடைய ஆளைச் சிதம்பரத்தின் வேலையாள் தாக்கி யிருப்பதைக் கண்ட பரமசிவத்தின் கண்கள் ரத்தச் சிவப்பாக மாறின. ''என்னுடைய ஆளைத் தாக்கும் அளவுக்கு வந்து விட்டானா....? தொலைத்து விடுகிறேன் அவனை'' என்று உறுமினார் அவர்.

தம்முடைய பண்ணையாளும் விழுந்திருப்பதைக் கண்ட சிதம்பரம், ''இனியும் அவனைச் சும்மாவிடக் கூடாது. பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்'' என்று கர்ஜித்தார்.

ஆறு நாட்கள் ஆறு நிமிடங்களாகக் கழிந்தன. அன்றோடு அறுவடை முடிந்தது. தானியங்களெல்லாம் களத்திலே அம்பாரமாகக் குவிக்கப் பட்டிருந்தன. நான்கு யானைகள் ஒன்றன்மேல் ஒன்று படுத்திருப்பதுபோல் வைக்கோற் போர் உயர்ந்து காணப்பட்டது.

பரமசிவம் அம்பாரமாகப் பெரும் அளவில் குவிக்கப்பட்டிருக்கும் தானியங்களைப் பார்த்தார். அந்த வருடம் முழுவதும் அவருடைய ஆட்கள் பாடுபட்டதற்குச் சரியாகத்தான் பலன் கிடைத்திருக்கிறது. இத்தனை வருடங்களை விட இந்த வருடம் விளைச்சல் சற்று அதிகம்தான்.

அடுத்தகணம் அவர் கண்கள் எதிரேயுள்ள களத்துமேட்டை நோக்கிச் சுழன்றன. அவருக்குப் போட்டியாக நின்று கொண்டு தமது ஆட்களிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்தார் சிதம்பரம். அவருடைய விளைச்சலுக்குச் சற்றும் தாங்கள் குறைந்து போய்விடவில்லை என்று கூறுவதுபோல் காட்சி தந்தன அங்கே குவித்து வைக்கப்பட்டிருந்த தானியங்கள்.

பரமசிவத்தின் உள்ளம் எதிரியின் அம்பாரத்தைக் கண்டதும் துடித்தது. அதே சமயம் ஐந்தாறு நாட்களுக்கு முன்பு நடந்த தகராறும் நினைவுக்கு வந்தது. மின்னல் வேகத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது, அவருடைய மனத்தில். 'ஆம்......அதுதான் சரியான வழி....இத்துடன் அவன் அகங்காரம், அந்தஸ்து, கர்வம் எல்லாம் ஒழிந்தன' என்று தமக்குள் கூறிக் கொண்டே சிதம்பரத்தை நோக்கித் தமது கண்களைச் சுழல விட்டார். அதே சமயம் சிதம்பரத்தின் பார்வையும் பரமசிவத்தை நோக்கித் திரும்பியது.

''எசமான்!'' என்று ஆறுமுகம் அழைப்பதைக் கேட்டுத் தமது பார்வையைத் திருப்பினார் அவர்.

''எல்லா வேலையும் முடிஞ்சு போச்சுங்க. அம்பாரத்துக்கு முத்திரை வெச்சுட்டா வைக்கோலைப் போட்டு மூடிவிடலாம்....''

பண்ணையார் பரமசிவம் முத்திரைப் பலகையுடன் அம்பாரத்தை அடைந்தார். ஐந்தே நிமிடங்களில் முத்திரை வைக்கப்பட்டு, வைக்கோல் போட்டு மூடப்பட்டது அம்பாரம்.

ஆட்களெல்லாம் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தனர். ஆறுமுகமும் பண்ணையார் பரமசிவமும் மட்டும்தான் இப்பொழுது களத்தில் நின்று கொண்டிருந்தனர்.

பரமசிவம் மெள்ளத் தமது ரகசியத் திட்டத்தை வெளியிடத் தொடங்கினார்.

''ஆறுமுகம்!...நம்ம பண்ணையிலே என் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமான ஒரே ஆள் நீ. இப்படிக் கிட்டே வா..'' என்று கூறி அவன் காதருகே ரகசியமாகத் தமது திட்டத்தைக் கூறினார்.

''ஆ....எசமான்....அது ரொம்பவும் பாபமில்லீங்களா..?'' என்றான் அவன்.

''ஆறுமுகம்! நல்லா யோசிச்சாச்சு. நீ எசமான விசுவாசம் உள்ளவன், செய் நன்றி மறக்காதவன் என்கிறதினாலேதான், அந்தக் காரியத்துக்கு உன்னைத் தேர்ந்தெடுத்தேன்.. உன்னால் செய்ய முடியுமா, முடியாதா..?''

பரமசிவம் கோபமாகவே கேட்டார்.

ஆறுமுகம் செய்வதறியாது தத்தளித்தான். 'கடந்த பத்து வருடங்களாக அவனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுத்துக் காப்பாற்றி வருபவர் அவர். அவருடைய பேச்சைத் தட்டலாமா....?'

அவன் மனம் தத்தளித்தது. பண்ணையார் அவனை விடுவதாக இல்லை. ''உம்..சரி என்று சொல்....யோசிக்காதே....''

கடமையில் கட்டுண்ட அவன் தலை தானாகவே ஆடியது.

''ஜாக்கிரதை....இரவு சரியாக ஒரு மணிக்கு....வேலையை முடித்துக் கொண்ட மறு கணமே திரும்பி விட வேண்டும்....''

பண்ணையார் பரமசிவத்தின் திட்டம் வெகு அற்புதமானது. சிதம்பரமும் அவரது ஆட்களும் அந்த வருடம் முழுவதும் பாடுபட்டு உழைத்ததின் பயனாக எழுந்த தானியக் களஞ்சியத்துக்குத் தீ வைத்து விடுவது என்பதுதான். அந்தப் 'புனித' காரியத்தை நடத்தி வைக்கும் 'பாக்கியம்'தான் ஆறுமுகத்தினிடம் கொடுக்கப்பட்டது.

இரவு மணி ஒன்று இருக்கும். நிலவு உச்சிக்கு வந்துவிட்டது.

அம்பாரத்துக்குக் காவலாகப் படுத்திருந்த ஆறுமுகம் மெள்ள எழுந்தான். அவன், ஒரு கையிலே நெருப்புப்பெட்டியுடனும், மற்றொரு கையிலே முன் ஜாக்கிரதைக்காக வெட்டுக் கத்தியையும் தாங்கியபடி களத்தை அடைந்தான். அம்பாரத்தை அணுகியவன் ஒரு கணம் மௌனமாக நின்றான். அடுத்த கணம், கடமையுணர்ச்சி, பரிதாபத்தை விழுங்க, வந்த வேலையைச் செய்யக் குனிந்தான்.

அந்தச் சமயத்தில்......

பின்னாலிருந்து ஒரு கரம் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தது. ஆறுமுகம் திமிறிக்கொண்டு திரும்பினான். தற்காப்புக்காகத் தான் கொண்டுவந்திருந்த வெட்டுக்கத்தியை எதிரில் நின்ற உருவத்தின் மேல் பாய்ச்சி விட்டான்.

''ஆ!....'' என்ற பெண் குரலொன்று எழும்பவும் ஓடுவதற்குத் தயாராக இருந்த அவன் ஒரு கணம் நின்றான்.

சந்தேகமே யில்லை...அது ஒரு பெண்...அது மட்டுமல்ல: அந்தப் பெண் அஞ்சலையும் கூட.

''ஐயோ, அஞ்சலை! உன்னையா நான் கொன்று விட்டேன்...'' என்ற ஓலம் அவனிடமிருந்து எழுந்தது.

அவள் மெல்லச் சைகை செய்து அவனைத் தன் அருகே அழைத்தாள். ''என்னைப் பற்றி இனி கவலைப்படாதே...உயிர் போய்க் கொண்டேயிருக்கு...ஓடு. உங்க அம்பாரம் சாக்கிரதை, எங்கப்பன் உங்க அம்பாரத்துக்குத்தீவைக்க... உம் சதி.....இந்நேரம்.....''

அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை.

அடுத்த நிமிடம் பைத்தியக்காரனைப் போல் தங்கள் களத்து மேட்டை நோக்கி ஓடினான். அவன் களத்தை அடையவும் ஓர் உருவம் அம்பாரத்துக்கு அருகில் அமரவும் சரியாக இருந்தது.

இன்னும் ஒரே ஒரு கணம். அடுத்த நிமிடம் அம்பாரம் அக்னி தேவனின் ஆட்சியிலே இருக்கும். ஆனால்.....

'ஓ'வென்று கூச்சலிட்டுக் கொண்டே ஆறுமுகம் வேகமாக ஓடி வருவதைக் கண்ட அந்த உருவம் சடக்கென்று கீழே யிருந்த கத்தியுடன் எழுந்தது. அடுத்தகணம், ஆறுமுகத்தின் மார்பிலே வெகு ஆழத்துக்குப் பாய்ந்து ஓய்ந்தது அந்த வெட்டுக்கத்தி.

அவனிடமிருந்து கிளம்பிய அந்த அலறல் அந்த நட்ட நடுநிசியில் மிகப் பயங்கரமாக ஒலித்தது. சிறிது நேரத்துக்கெல்லாம், அஞ்சலையின் உயிரோடு அவன் உயிரும் பறந்து சென்று கொண்டிருந்தது.

பிறகென்ன? ஆறுமுகம் — அஞ்சலை மறைவு அவ்வூரையே ஒரு கலக்கு கலக்கி விட்டது. பல வருடங்களாக இரண்டு பண்ணைகளுக்கும் இருந்து வந்த பகை அவர்கள் மறைவால் ஒரு நொடியில் நீங்கி விட்டது. ஆறுமுகம் — அஞ்சலை இவர்களின் எஜமான விசுவாசத்தையும் கடமை உணர்ச்சியையும், தங்கள் பண்ணையின் பொருட்டு உயிரைக் கொடுத்து அம்பாரங்களைக் காப்பாற்றிய தன்னலமற்ற சேவையையும் கண்டு, அவ்விரண்டு பண்ணைக்காரர்களும் சேர்ந்து அவர்களைச் சிலைகளாக வடித்தனர். அன்று, ஆறுமுகமும் அஞ்சலையும் தங்கள்உயிரைக் கொடுத்து அம்பாரங்களைக் காப்பாற்றாமலிருந்தால், அந்த வருடம் தாங்கள் உண்ண உணவின்றித் தவிக்க நேர்ந்திருக்கும் என்பதை நன்குணர்ந்திருந்த கிராம வாசிகள் அவர்களைத் தெய்வமாக மதிக்கத் தொடங்கி விட்டார்கள்.

* * *

நண்பன் கதையை முடித்தான்.

''என்ன, போகலாமா?'' என்று கூறிக் கொண்டே எழுந்தான் நாராயணன்.

படிப்பு வாசனை ஏதும் அற்ற இரண்டு கள்ளமில்லாத உள்ளங்கள், கடமைக்காகவும், கிராம மக்களின் நல்வாழ்வுக்காகவும் தங்கள் உயிரைக் கொடுத்ததற்கு அவர்களைத் தெய்வங்களாகக் கருதிச் சிலைகளாக வடித்துக் கும்பிடுவது நியாயம்தானே!

படித்துப் பாருங்கள்

காவிய அரங்கில்

மகா கவி சுப்பிரமணிய பாரதியார் "கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்" என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டார்.

இதில் விசேஷமான பொருளோ கருத்தோ இருப்பதாகச் சாதாரணமாகத் தோன்றாது. ஆனால் இதற்கு ஒரு முறை ரஸிகமணி பொருள் கூறியபோது மெய் சிலிர்த்தது!

"கம்பர் அமைத்த காவிய மாளிகைக்குள் நுழைந்து விட்டால் அங்கு நீங்கள் சந்திக்க நேரும் ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு அம்சமும், ஒவ்வொரு பாடலும் உங்களை அதிசயக் கடலில் ஆழ்த்திவிடும். தசரதன், ராமன், சீதை, கோசலை, கைகேயி, கூனி இப்படிப் பல்வேறுபட்ட பாத்திரங்களையும் அவர்கள் மனோபாவங்களையும் எவ்வளவு அற்புதமாக வனைந்திருக்கிறார் என்று வியப்பீர்கள். அந்த வியப்பில் இந்த நூல் மனித சிருஷ்டியா—அல்ல, இருக்க முடியாது; தெய்வ சிருஷ்டி என்று கூறுவீர்கள். இப்படித் தெய்வ சிருஷ்டியாக மதிக்கத் தகுந்த நூலை இயற்றியவன் ஒரு மானிடன், ஒரு தமிழன், கம்பன் என்பதில் எவ்வளவு பெருமிதம் ஏற்படுகிறது. இந்தப் பெருமிதமே பாரதியாரின் "கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்" என்ற அடியில் ததும்பி நிற்கிறது" என்றார் டி. கே. சி. அவர்கள்.

கம்பர் உள்ளத்தோடு ஒட்டி உணர்ந்து கம்பரின் கவிதா ரஸத்தை வழங்கி வந்த ரஸிகமணியைக் கேட்டவர்கள் கம்பர் இயற்றிய ராமாயணம் "தெய்வ சிருஷ்டிதான்!" என்று உறுதியாக நம்புவார்கள். 'இன்று அப்படிச் செய்வார் யாருமில்லையே!' என்று நாம் நினைத்த போதுதான் பேராசிரியர் அ. சீநிவாச ராகவனின் 'காவிய அரங்கில்' என்ற கலை விமரிசனப் புஸ்தகம் வந்தது!

பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் மெள்ள வாசகர்களின்கையைப்பிடித்துக் கம்பனுடைய காவிய அரங்குக்கு அழைத்துச் செல்கிறார். அந்த அரங்கிலே கம்பர் ஆட்டுவிக்கும் பாத்திரங்களையும், கம்பர் ஆட்டுவிக்கும் நேர்த்திகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

"இரத்தினப் பரீட்சை" என்று ஒரு கட்டுரை. ராவணனின் இரு மனைவியரின் புலம்பலை விஷயமாக எடுத்துக் கொண்டிருக்கிறார். ஒருத்திதானமாலை; மற்றொருத்திமண்டோதரி.

இவ்விரு பாத்திரங்களையும் கம்பர் எவ்வளவு தெளிவாகக் காட்டினாலும் பேராசிரியர் போல் கம்பனில் ஊறித் திளைத்தவர்கள் காண்பித்தால்தான் நமக்குத் தெரிகிறது.

இந்நூலில் கூனி, பரதன், விசுவாமித்திரன், விராதன், கபந்தன், சூர்ப்பனகை முதலிய பல பாத்திரங்களைக் கம்பருடைய தனிப் பெரும் மேதை எப்படி எப்படி யெல்லாம் வனைந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறார்.

கம்பருடைய கவிதா மேதையை விளக்கும் விமர்சன நூல்கள் அதிகம் வரவில்லை. அந்தப் பெரும் குறையைப் பேராசிரியர் நீக்கி விட்டார். இவ் விமர்சனக் கட்டுரைகளின் இடை இடையே பிற நாட்டுக் கலைஞர்களும் தோன்றிக் கவிச் சக்கரவர்த்தி கம்பரின் அற்புதக் கவித்திறமையை விளக்குகிறார்கள்.

இந் நூலுக்குச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை அவர்கள், "காவிய அரங்கிலிருந்து கூனி இறங்கியபின்பு ஒன்பது பாத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்க் காட்சியளிக்கின்றன. அவற்றின் பண்புகளை யெல்லாம் நூலாசிரியர் தமது நுண்ணிய மதி நலத்தால் ஆராய்ந்து காட்டும் பொழுது 'காட்டு வித்தால் யார் ஒருவர் காணாதாரே' என்னும் திருவாக்கை நினைந்துநினைக்கின்றோம். பலவாற்றானும் சிறப்பு வாய்ந்த கம்ப ராமாயணத்தின் நயங்களைப் பழகு தமிழில் அழகுற எழுதி உதவிய அன்பர் சீநிவாசராகவன் பல்லாண்டு நலமுற்று வாழ்க!" என்று வாழ்த்துகிறார்.

கம்பரைத் துய்த்தவருக்கும், துய்க்க விரும்புபவர்களுக்கும் நல் விருந்தாக அமைந்திருக்கிறது "காவிய அரங்கில்" என்ற நூல்.

பிரசுரம்: பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், சென்னை—5; தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி—2. விலை: ரூ. 3—4—0.

இளமை நினைவுகள்

இளமைப் பருவம் மிகவும் இன்பமான பருவம்; இனிய நினைவுகள் சூழ்ந்த அப்பருவத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் மிகவும் சுவாரஸ்யமானவை. ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா தம் பால்யப் பருவ நினைவுகளை மிகவும் இனிமையாகவும் எளிமையாகவும் இந்நூலில் எழுதியிருக்கிறார். குழந்தைப் பிராயம் முதல், தம் அரசியல் வாழ்வு வரையில் அழகாக எழுதியிருக்கிறார். விலை: ரூ. 1—8

சுந்தரி

அமரர் வ. ரா. அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய அற்புத சிருஷ்டி இந்நாவல். சீர்திருத்த நோக்கும் ஆவேசப் போக்கும் கொண்ட அப் பேரறிஞர் தம் வாழ்க்கை அநுபவத்தையும் அறிவாற்றலையும் கொண்டு இயற்றியிருக்கும் இந் நூல் மூன்று பதிப்புகள் வந்திருப்பதிலிருந்தே நூலின் சுவையைப் புரிந்து கொள்ளலாம். ஊன்றிப் படிக்க வேண்டிய உயரிய நூல். விலை: ரூ. 5.

லட்சியப் பாதை

ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் பயின்ற நண்பர்கள் நால்வர், பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர். ஒவ்வொருவனும் தன் சூழ்நிலைக்கும் மனப்போக்குக்கும் ஏற்ப வாழ்க்கையில் வெவ்வேறு பாதைகளை அமைத்துக் கொண்டு முன்னேற முயல்கிறான். ஒவ்வொருவனுக்கும் தான் செல்லும் பாதைதான் சரியானது என்ற எண்ணம் உண்டாகிறது. முடிவில் ஒருவருக்கு ஒருவர் எதிராக நடந்து, மோதிக் கொள்கின்றனர். பாத்திரங்களையே கதை சொல்லச் செய்து சுவாரஸ்யமாகப் புனைந்திருக்கிறார், இந் நூலாசிரியர்.

எழுதியவர்: க. நாராயணன். விலை: ரூ. 2—4—0.

மூன்று நூல்களும் கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை.

எந்நேரத்திலும்
எவ்விடத்திலும்
எச்சந்தர்ப்பத்திலும்







உங்களுக்கு உன்னத தோற்றமளிப்பது

கட்டாவ்

வாயில்கள்

THE KHATAU MAKANJI SPG. & WVG. CO. LTD. Mills: Byculla, Bombay. Office: Laxmi Bldg., Ballard Estate Bombay 1


ஜனவரி
11உ
முதல்
ரவி பிலிம்ஸ் &
T. E. வாசுதேவன்
அளிக்கும்
அனுபமா பிலிம்ஸ்
வளர்த்த
பாசம்
தமிழ்
ஜமுனா...நாகையா...லக்ஷ்மிராஜ்யம்
மாஸ்டர் வெங்கடேஸ்வர் ராவ் முதலிய பலர் நடிப்பது
நடனம்
E.V. சரோஜா....பம்பாய் மீனாக்ஷி
வசனம்:
டைரக்ஷன்:
பாடல்கள்:
ஸ்டூடியோ:
தஞ்சை T.K. கோவிந்தன்...திலக்...குயிலன்...வாஹினி..வீனஸ்
சென்னை மற்றும் தென்னாடெங்கும்

மாதர்குல மாணிக்கம்



காந்தன்

சினிமா விமரிசனம் என்பது மிகவும் தர்ம சங்கடமான வேலை. அதிலும் சினிமா, நாடக விமரிசனம் எழுதுவது மிக மிகச் சிரமமானது.

மேலும், இன்றைய தமிழ்ப் படங்கள் இருக்கிற நிலையை எண்ணினால் மிகவும் வேதனையாயிருக்கிறது. அடுத்து அடுத்து நிகழும் நிகழ்ச்சிக் கோவைகளையும், பழைய கதியிலேயே செல்லும் கதைப் போக்கையும் தவிரப் புதிதாக ஓர் அம்சத்தைக் காண்பது அரிதாயிருக்கிறது. சொல்லி வைத்தாற் போல ஒரே மாதிரி படங்கள் வருவது அதைவிட அதிசயமாயிருக்கிறது. தப்பித் தவறி நல்லபடியாகத் தயாரிக்கப்பட்டு வெளி வரும் படங்களின் மூலம் வடநாட்டுக் கதையாக இருந்து தொலைகிறது. இவைகளையெல்லாம் எத்தனை தடவை தான் கண்டிப்பது! ஒரு படத்தில் குறிப்பிட்ட ஒரு நடனமோ, கத்திச் சண்டையோ, கற்பனையோ ரஸிகர்களின் பாராட்டைப் பெற்று விட்டதென்றால், பிடித்தது சனியன்! மேற்படி அம்சம் குறைந்தது ஒரு டஜன் படங்களிலாவது இடம் பெற்றுவிடும்!

என்னைச் சில நண்பர்கள் கேட்பதுண்டு: "ஏன் ஸார், ... அந்தப் படத்தைப் பற்றிய விமரிசனத்தைப் பத்திரிகையில் நீங்கள் பார்த்தீர்களா? தீர்த்துக்கட்டி விட்டார்கள், தீர்த்து!" என்று.

ஆனால் ஒரு படத்தைத் தீர்த்துக்கட்டுவதோ வெளுத்து வாங்குவதோ சுலபமான காரியம் தான் என்றாலும் அதை நான் செய்வதில்லை. ரொம்ப மோசமான படமாயிருந்தாலும் சரி, பண்புக்கு விரோதமான படமாயிருந்தாலும் சரி அந்தப் படத்தைப் பற்றி நான் எதுவும் எழுதுவதில்லை, பத்துக்கு ஏழு பழுதில்லை என்று இருக்கும் படங்களைப் பற்றித்தான் கூடியவரையில் விமரிசனம் எழுதுவது.

லலிதா பிலிம்ஸாரின் "மாதர் குல மாணிக்கம்" நடிப்பு, திரைப்பட உத்தி, கதையமைப்பு முதலிய அம்சங்களில் சிறந்து விளங்குகிறது.

"மாதர் குல மாணிக்க"த்தின் மூலக் கதை மகா கவி ரவீந்திரரின் "புயல்" (The Wreck) என்னும் வங்க நவீனத்தை ஆதாரமாகக் கொண்டது.

கல்லூரி மாணவன் ரவியும் மாஜி கலெக்டர் ரங்கநாதத்தின் மகள் லக்ஷ்மியும் காதலிக்கின்றனர். அந்தக் காதலுக்குக் குறுக்கே மூளைக்கின்றது தந்தை சொல் என்னும் கடமை. தந்தையின் சொல்லைத் தட்ட முடியாத நிலையில் ரவிதான் கண்ணால் காணாத பெண்ணுக்கு மாலையிடுகிறான். அதே நேரத்தில் இன்னொரு இடத்தில் ஏழைப் பெண் பார்வதியின் திருமணம் தாலி கட்டும் சமயத்தில் மூளைத்த பணத் தகராறு காரணமாக நின்றுவிடுகிறது. அவமானம் தாங்காத பார்வதியின் தமையனுக்கு நண்பனான டாக்டர் சேகர் பார்வதியைத் தானாகவே மணக்க முன்வந்து மூர்ச்சையுற்றுக் கிடந்த அப்பெண்ணுக்கு மாலையிடுகிறான். பிறகு ரவியின் குடும்பத்தாரும் பார்வதியின் குடும்பத்தாரும் ஒரே ரயிலில் பிரயாணம் செய்கின்றனர். அந்த ரயில் கோர விபத்துக்குள்ளாகிறது. ரவி மாலையிட்ட மங்கை மரணமடைகிறாள். இடிபாடுகளுக்கிடையே சேகரின் மனைவியான பார்வதி ரவியின் அருகில் கிடக்கிறாள். அவளைத் தன் மனைவியாக எண்ணி ஊருக்கு அழைத்துச் செல்லுகிறான் ரவி. டாக்டர் சேகர் உயிர் தப்பிப் பிழைத்துத் தனியே ஊர் போய்ச் சேருகிறான்.

'கண்ணால் பார்க்காமலே ஒரு பெண்ணுக்கு ஒருவன் மாலையிடுவானா? அப்படி ஒருவன் மாலையிட்டால் அந்தப் பெண்ணுக்குக் கூடவா அவனைத் தெரியாமல் போய் விடும்?' என்ற கேள்விகளுக்கெல்லாம் ஓரளவு பதிலளிக்கும் வகையில்தான் இந்தப் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய கேள்விகளைச் சமாளிப்பதற்காக, படத் தயாரிப்பாளர்கள் கல்யாண முகூர்த்தத்தில் கடைசி நிமிஷத்தில் ஏற்பட்ட சண்டை, ரயில் விபத்து முதலியவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ரவியாக நடிக்கும் ஏ. நாகேஸ்வரராவ் தாம் ஒரு சிறந்த நடிகர் என்பதை ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபிக்கிறார். மாஜி கலெக்டர் ரங்கநாதத்தின் மகள் லக்ஷ்மியைக் காதலிக்கும் போது அவர் சாதாரணக் காதலனாகவே விளங்குகிறார். தகப்பனாரின் தலையீட்டினால் அந்தக் காதல் பூர்த்தியாகாமற் போகவே ரவியின் முக பாவம் நடிப்பின் எல்லையை எட்ட ஆரம்பித்தது. பார்வதி தன் மனைவி யல்ல என்பதை அறிந்த ரவி துடிக்கிறான்; அவளிடம் அதை வெளியிட முடியாமல் தவிக்கிறான். அவள் கணவனைத் தேடி அவனிடம் அவளை ஒப்புவித்துவிடப் பலவிதத்திலும் முயல்கிறான். பார்வதி அன்போடு நெருங்கும்போதெல்லாம் அவன் உடம்பு பதறுகிறது; நல்ல பாவபூர்வமான நடிப்பு.

இந்த நடிப்புக்கு ஏற்ற பிரதிபலிப்பைப் பார்வதியாகத் தோன்றிய அஞ்சலிதேவியின் நடிப்பில் காண முடிகிறது. ரவியைத் தன் கணவனாகவே நினைத்துக் கொண்டிருந்தவரையில் இன்பசதியில் திளைத்த அவரது முக பாவம், உண்மை தெரிந்ததும் ஒரே சோக மயமாக மாறிவிடுகிறது. இந்த மாறும் கட்டத்தில் அவர் நடிப்பு, பேச்சு யாவும் நன்கு சோபிக்கின்றன. உண்மைக் கணவன் டாக்டர் சேகர் வீட்டில் பார்வதி வேலைக்காரியாயிருக்கும் போது, உண்மை தெரியாத சேகரின் தாயார் மகனுக்கு, ரவியின் காதலி லக்ஷ்மியைத் தேர்ந்தெடுக்கிறாள். லக்ஷ்மியைப் பற்றிய அபிப்பிராயத்தைப் பார்வதியிடம் கேட்கிறாள்; பார்வதி மனவேதனையினால் துடிக்கிறாள். அந்தக் கட்டங்களில் அஞ்சலி தேவி அற்புதமாக நடித்திருக்கிறார். சேகரின் தாயாராக நடிக்கும் கண்ணாம்பா அந்த அற்புத நடிப்புக்குத் தம் இயல்பான நடிப்பினால் மெருகு கொடுக்கிறார். லக்ஷ்மியாக நடிக்கும் சாவித்திரியின் நடிப்பு இந்தப் படத்தில் அவ்வளவு சோபிக்கவில்லை. உணர்ச்சியை வெளிப்படுத்தும் கட்டங்களில் இவர் சும்மா இருந்து விட்டதாகத் தோன்றியது.

இந்தப் படத்தில் தேனும் பாலும் கலந்தது போல் ஒரு நல்ல அம்சம் காணப்படுகிறது; அது தங்கவேலுவும் சாரங்கபாணியும் சேர்ந்து நடிப்பதுதான். மாமனாராக நடிக்கும் சாரங்கபாணிக்கு மாப்பிள்ளையாக நடிக்கும் தங்கவேலு நடிப்பிலும் ஹாஸ்யப் பேச்சிலும் கொஞ்சமும் சளைக்கவில்லை.

தங்கவேலு வேலையில்லாத மாப்பிள்ளை; சாரங்கபாணி கண்டிப்பான மாமனார். இவர்கள் இருவரும் சேர்ந்து அளிக்கும் ஹாஸ்ய விருந்தில் மிளகாய் அதிகமாகப் பங்கு கொள்ளுகிறது! தங்கவேலுவின் மனைவி சரோஜாவாக நடிக்கும் எம். என். ராஜமும் இதில் ஹாஸ்யமாக நடிக்க நேர்ந்திருக்கிறது. தங்கவேலுவின் ஆட்டத்துக்கும் அபிநயத்துக்கும் ஏற்றபடி நன்றாய் அமைந்திருக்கின்றன அவர் நடிப்பும் பேச்சும்.

சேகரின் பாகத்தை ஜெமினி கணேசன் ஏற்று மிகவும் கச்சிதமாக நடிக்கிறார்.


இரைப் படத்தில் ஒரு திருப்புமுனைக்கு உதவியாக, திருமதி கமலாலக்ஷ்மண் நடிக்கும் 'சொப்பனவாசவதத்தை' நாடகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ராகினியும், ரீடாவும் கவர்ச்சிகரமாகத் தோன்றி, களைகுறைவாக நடனமாடியிருக்கின்றனர்.

ஸ்ரீதர் இந்தப் படத்துக்கு நன்றாக வசனம் எழுதியிருக்கிறார். ஒலி, ஒளி யாவும் நன்கு அமைந்திருக்கின்றன. பாட்டுக்களைப் பற்றி விசேஷமாக எதுவும் சொல்லுவதற்கில்லை. மெட்டுக்களும் அப்படிக் கவர்ச்சியாக இல்லை.

டாக்டர் சேகர், பார்வதியைத் தன் மனைவி என்று அறிந்த பின்பும் படத்தை நீட்டிக் கொண்டே போய்ப் படம் பார்ப்பவர்களின் பொறுமையைக் கடும் சோதனைக்கு உள்ளாக்கியிருக்க வேண்டாம்.

நல்ல நடிகர்களின் நல்ல ஒத்துழைப்பினால் இந்தப் படம் நன்றாக உருவாகியிருக்கிறது.





If a Swiss Watch then

CAMY

கெமி

கைக்கடிகாரம்

தரத்தில் முதன்மையானது. நாகரிகத்தில் முன்னணியில் இருப்பது. உலகத்திலே மிகவும் விரும்பப்படும் கடிகாரங்களில் ஒன்று.

கெமி கடிகாரம் அணிந்து கொண்டு பெருமை அடையுங்கள்

பற்பல நவநாகரீகமான மாடல்களில் பிரபல கடிகாரக் கடைகளில் கிடைக்கும்.

(Nua 352)

புதிய ஐடியால் – 3

இணையற்ற கிருமி நாசினி



கார்பாலிக் திராவகத்தைப் போல மும்மடங்கு சக்தி வாய்ந்தது!

புதிய ஐடியால்-3, எரிச்சல் உண்டாக்காதது; விஷமற்றது; கிருமி பரவாமல் தடுக்கும் ஒரு மருந்து. புத்துணர்ச்சி தரும் இனிய நறுமணமுடையது. உடல்சுகாதாரத்திற்கு உபயோகிக்கும்பொழுது ஒரு புதிய வாசனைத்திரவியம் உபயோகிப்பதைப் போன்றே உதவுகிறது என்பது நினைவிருக்கட்டும். வைத்ய சிகிச்சையிலும் வீட்டிலும் எல்லா வகை உபயோகத்திலும் இணையற்று விளங்குகிறது.

தயாரிப்பாளர்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிட்.,
மல்லேஸ்வரம், பெங்களூர்-3.

95/37, தம்புச் செட்டி தெரு, சென்னை-1.

இது ஒரு ITI தயாரிப்பு

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

61

இயற்கை வைத்தியத்தை நான் சிலாகிப்பதற்குக் காரணம் என்னவென்றால் அது உடலையும் உள்ளத்தையும் ஆன்மாவையும் மூன்றனையும் கருதிச் செய்யப்படும் மருத்துவ முறையாகும். எல்லாவற்றையும் விட சிறந்த இயற்கை வைத்தியம் எதுவெனில் ராமநாமம் என்பேன். அது எந்த நோயையும் தீர்க்கும். தவறாத மருந்து. ராமபாணம் என்று சொல்லுகிறோமே, —எந்த நோயையும் ராமநாமம் தீர்க்கும் என்பதனால்தான் அந்தச் சொல் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. அது தான் மனிதனுடைய மேன்மைக்குத் தகுதி வாய்ந்த மருந்து. எந்த நோய் வருத்தினாலும் உள்ளம் கரைந்து உச்சரிக்கப்படும் ராமநாமம் நிச்சயமாக ஆற்றிவிடும். ஆண்டவனுக்குப் பல பெயர்கள் உண்டு. அவனவன் தனக்குப் பிடித்த பெயரை வைத்து ஜபம் செய்யலாம். ஈசுவரா, அல்லா என்று சொல்லி ஜபம் செய்வதும் ராமஜபமேயாகும். இந்த ராமநாமம் உதவ வேண்டுமானால் கிளிகளுக்குக் கற்றுக் கொடுத்த பேச்சைப் போல் சொன்னால் போதாது. பக்தி சிரத்தையுடன் உள்ளத்தினுள் உச்சரிக்க வேண்டும். மண்ணும் நீரும் காற்றும் சூரியனும் ஆகாயமும் கூடி நம்முடைய உடல் உண்டாகியிருக்கிறது. இந்த ஐந்துமே உடலுக்கு வந்த நோய்க்கு மருந்துமாகும். கூட ராம நாமத்தைச் சேர்த்தால் போதும். அதற்கு மேல் மரணம் வந்து எய்தினால் துயரப்படலாகாது. மகிழ்ச்சியே அடையலாம். பௌதிக வைத்திய சாஸ்திரங்களில் அமரத்துவம் தரும் மருந்தை இது வரையில் காணவில்லை. உடலில் தாங்கியிருக்கும் ஆன்மாவுக்கு மரணம் கிடையாது. அதை அகந்தம் தீண்டாமல் வைத்துக் கொள்வதே நமது கடமை.

நான் சொல்வது உண்மையென்று ஒப்புக் கொண்டால் இந்தப் பெரிய ஆஸ்பத்திரிகளும், படித்துப் பாண்டித்தியம் அடைந்த வைத்தியர்களும் இன்னும் மற்ற சாமக்கிரியைகளும், இவற்றுக்காகும் செலவுகளும் வேண்டாம் என்று நீக்கிவிடலாம் அல்லவா? உண்மையில் இவையெல்லாம் எத்தனை பேருக்கு உதவி வருகின்றன? பெரும்பாலோர் இவற்றினால் ஒரு பயனும் அடைவதில்லை. பெரும்பாலோர்க்குப் பயன்பட முடியாத ஏற்பாடு ஒரு சிலருடைய நன்மைக்காக வைத்துக் கொண்டு ஏன் பெரும் செலவு செய்ய வேண்டும்?

[நவஜீவன் 3—3—46]

நான் சொல்லும் ராமநாமம் ஒரு இந்திரஜால வித்தையல்ல. அளவுக்கு மீறி உணவு உண்டு, அதனால் வரும் நோயைத் தீர்த்துக் கொண்டு மறுபடியும் எதேச்சையாகச் சாப்பிடலாம் என்று ஆசைப்படுகிறவனுக்கு ராமநாமம் உதவாது. நன்மைக்குத்தான் ராமநாமம் உதவுமே யொழிய பாபம் செய்வதற்கு உதவாது. திருடர்களும் கொள்ளையடிப்பவர்களும் ராமநாமம் சொல்லித் தங்கள் தொழில் நடத்த முடியாது. சுத்த வாழ்க்கையை நடத்தி உள்ளத்தையும் மலம் நீக்கி வைத்துக் கொள்பவர்களுக்குத்தான் ராமநாமம் பயன்படும். வரம்பு மீறி ஆகார விகார போகங்களைத் தேடுபவர்களுக்கு அது கொஞ்சமும் பயன்படாது. வரம்பு மீறி உண்டவனுக்கு மருந்து உபவாசமும் ஜபமுமல்ல. உபவாசமிருந்து அதனுடன் ஜபம் செய்யலாமே யொழிய, பிரார்த்தனை மட்டும் போதாது. உபவாசத்தின் கஷ்டத்தைப் பிரார்த்தனை மூலம் குறைத்துக் கொள்ளலாம். உபவாசத்தைத் தாங்க முடியாது என்று கஷ்டப்படுகிறவர்கள், ராமநாமத்தின் வழியாக உபவாசத்துக்கு வேண்டிய உறுதியைப் பெறலாம்.

கண்ட மருந்துகளை யெல்லாம் உள்ளே துருத்திக் கொண்டு வந்து அதே சமயம் ராமநாம உச்சரிப்பும் செய்து வருவதில் ஒரு அர்த்தமுமில்லை. நோயாளிகளுடைய அக்கிரமங்களுக்கு உடந்தையாக வைத்தியர்கள் தங்களுடைய கல்வியையும் சாமர்த்தியத்தையும் பயன்படுத்தித் தருகிறார்கள். இது நோயாளி, வைத்தியர் இருவருக்குமே நன்மையல்ல; தீமையாகும். உடலைப் பெற்றிருப்பதின் பயன் அதன் மூலம் ஆண்டவனை ஆராதிப்பதேயாகும். அதை விட்டு விட்டுச் சரீரத்தையே பூஜை செய்து அதற்காகப் பணத்தை வாரிக் கொட்டிச் செலவு செய்வது என்ன மடமை. ராமநாமம் உடலுக்கும் மருந்தாகும். ஆன்மாவையும் மேல் தூக்கித் தரும்.

[நவஜீவன், 7—4—46]


மகாத்மாவின் இனிய நண்பர்

"சென்னை தக்கர் பாபா வித்தியாலயத்துக்கு போலக் துரை வருகிறார். நீ போய் விட்டு வா!" என்றார் ஆசிரியர்.

'போலக் துரை' என்றவுடன் இந்தப் பெயர் எங்கோ கேட்டாற் போலிருக்கிறதே என்று ஒரு கணம் யோசித்தேன். அடுத்த கணம் நினைவு வந்துவிட்டது. அவ்வளவுதான்! "இந்த மகானைப்பார்க்கப் போகிறோமா?" என்றுதான் தோன்றியது. இந்த என் அரும் பாக்கியத்தை நினைத்து நினைந்து மகிழ்ந்து கொண்டேன்.

திரு போலக் துரை யார் என்பது காந்தி மகானின் சரித்திரத்தைப் படித்தவர்கள் நன்கு அறிவார்கள்.

காந்தி மகானின் சிந்தனைகளை உருவாக்கியவர்களில் இவர் முக்கியமானவர் என்றுசொன்னால் மிகையாகாது. காந்தி மகானின் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியது ரஸ்கின் என்ற ஆங்கிலப் பேராசிரியர் எழுதிய "அன்டு திஸ்



லாஸ்ட்" என்ற நூல்தான். இதைப்பற்றிப் பல முறை கூறி யிருக்கிறார். அந்த அரிய நூலைக் காந்தி மகானுக்கு முதன் முதலில் கொடுத்து உதவியவர்தான் திரு ஹென்ரி எஸ். எல். போலக்.

காந்தி மகான் தென் ஆப்பிரிக்காவிலிருந்த போது, அவரிடம் ஜூனியர் வக்கீலாக திரு போலக் சேர்ந்தார். காந்தி மகான் வக்கீல் தொழிலைவிட, ஐரோப்பியர்கள் இந்திய மக்கள் மீது இழைக்கும் கொடுமையைப் பற்றித் தாங்க மாட்டாது செய்த கிளர்ச்சிகளே பெரிது. அந்தக் கிளர்ச்சிகளில் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டார் திரு போலக். காந்தி மகானின் பிரதம சீடராகி, அவர் நடத்தி வந்த போனிக்ஸ் பண்ணை என்னும் ஆசிரமத்தில் ஓர் ஆசிரமவாசியாக இருந்து இந்திய மக்களுக்கு அரும் சேவை புரிந்தார். காந்தி மகான் நடத்திய "இந்தியன் ஒபினியன்" என்ற பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பு ஏற்று நடத்தினார் சில காலம். அப்படியானால் காந்திமகானின் கருத்துக்களுடன் போலக் எவ்வளவு ஒன்றியிருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறதல்லவா? அந்த நாளில் பாரத நாடும், காந்தி மகானும் பெற்ற ஒரு சில அருமை ஐரோப்பிய நண்பர்களில் திரு போலக் துரை ஒருவர்.

அவர் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது தக்கர் பாபா வித்தியாலயத்துக்கு வந்திருந்தார். காந்திமகானுக்கு மிக உகந்த பணியாகிய ஹரிஜன சேவை இங்கு நடைபெறுவதைக் கண்ணாரக் கண்டு மகிழ வந்திருந்தார். வந்த இடத்தில் மாணவர்கள் தச்சுவேலை, கருமார் வேலை, பிரம்பு வேலை, தையல் வேலை—இவைகள் எல்லாம் பயின்று ஒரு நாளைக்குச் சுமார் மூன்று ரூபாய் வெகு எளிதில் சம்பாதிக்கும் திறமையுடன் வெளியேறுகிறார்கள் என்று கேள்விப்பட்டுப் பரவசமடைந்தார்.

இது காந்திமகான் அஸ்திவாரம் இட்ட வித்தியாலயம் என்பதை யறிந்தபோது அவர் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல. வித்தியாலயத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தபோதே, "காந்திஜி அஸ்திவாரம் போட்ட இடம் எது காட்டுங்கள்! அஸ்தி வாரக் கல் எங்கிருக்கிறது காட்டுங்கள்!" என்று ஒரு குழந்தையைப் போல் மிகுந்த ஆர்வத்தோடு கேட்கத்தொடங்கினார்.

வித்தியாலயத்தின் காரியதரிசி திரு எல். என். கோபாலசாமி, "கொஞ்சம் பொறுங்கள். அந்த இடத்துக்கு அழைத்துப் போகிறேன். அதற்குள் இதோ, இங்கே பாருங்கள். இது தான் எங்கள் மாணவர்கள் போட்ட காய் கறித் தோட்டம்!" என்று ஒவ்வொன்றையும் காண்பித்துக் கொண்டு வந்தார்.

தக்கர்பாபா வித்யாலயத்தில் காந்திமகான் பதித்த அஸ்திவாரச் சிலை யிருக்குமிடமே பிரார்த்தனை கூடமாக விளங்குகிறது. அங்கு சென்றவுடன் திரு போலக் காந்திமகானுக்கு அஞ்சலி செய்தார். மாணவர்கள் சிறிது நேரம் பிரார்த்தனை கீதங்கள் பாடினார்கள்.

மாணவர்களுக்கு போலக் துரை யார் என்று திரு கோபால்சாமி அறிமுகப்படுத்தினார். "காந்தி மகானின் முதல் ஐரோப்பிய சீடர். இந்தியர்களுக்காகச் சிறை சென்று பல தியாகங்கள் புரிந்தவர்" என்று சொல்லிக் கொண்டு வந்தபோதே அவர் நெஞ்சம் தழதழத்து விட்டது.

கடைசியில் திரு போலக் அவர்கள் சில வார்த்தைகள் கூறினார்.

"சிந்திப்பதற்கு இரண்டு வழிகள். ஒன்று மூளையை உபயோகப்படுத்துவது. மற்றொன்று கைகளை உபயோகப்படுத்திச் சிந்திப்பது. நீங்கள் யாவரும் கைகளை உபயோகப்படுத்தும் சிந்தனையாளர்களாக இருக்கிறீர்கள். காந்தி மகானும் அப்படித்தான். அவர் ஒரு நிமிஷம் சோம்பியிருக்க மாட்டார். ஏதாகிலும் வேலை செய்து கொண்டிருப்பார். அதிலும் பிறருக்குத் தொண்டு செய்வதே தமக்கும் தம் உள்ளத்துக்கும் செய்யும் பணி என்று கூறினார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆண்டவன் இருக்கிறான் என்று பகவத் கீதை கூறுகிறது. ஆகவே பிறருக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் பூஜை. இதை நீங்கள் நன்றாக உணர வேண்டும்" என்று உணர்ச்சியோடு கூறினார். — எஸ். வி. எஸ்.

பொங்கல் விழா

13-1-1957 ஞாயிறு மாலை 3 மணிக்கு

கூடலூர் O. T. ஜவாஹர் சவுக்கில் நடைபெறும்

★

அமர கவி பாரதியார் சிலை திறப்பாளர் :

மணிமேகலை மில்ஸ் உரிமையாளர்

தர்மபூஷணம் வி. கே. எஸ். ஷண்முக சுந்தர நாடார்

தலைவர் :

கடலூர் நகரசபைத் தலைவர் என். வி. பாஷ்யம் ரெட்டியார்

ஆரம்பித்து வைப்பவர் :

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணியார்

ம. பொ. சி. படத் திறப்பாளர் : கவி கா. மு. ஷெரீப்

அனைவரையும் வரும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்

பாரதியார் வாலிபர் சங்கம், கூடலூர் O. T.



பிறந்தகத்துச் சீர்



எஸ். ரங்கநாயகி

"ராமா! ஏன் உட்கார்ந்து விட்டாய்? அந்தப் பழம் நன்றாக இனிப்பாக இருக்குமே!" என்றாள் சபரி.

ஏழை சபரியின் குடிசை அன்று சுத்தமாகக் காணப்பட்டது. பளபளப்பாகச் சாணியிட்டு மெழுகி, முத்து முத்தாகக் கோலம் போட்டிருந்தாள். வயது முதிர்ந்தும் அக் கைகளுக்கு இன்னும் எப்படித் தான சக்தி இருந்ததோ!

"ஆமாம் அன்னை! இந்தப் பழம் ரொம்பவும் ருசியாகத் தான் இருக்கிறது. நாம் எவ்வளவு பழங்கள் சாப்பிட்டு விட்டோம்! இன்னும் நமக்கு அலுப்புத் தட்டவே இல்லையே!" என்று கூறியபடி லக்ஷ்மணரும் பழங்களை ருசித்துச் சாப்பிட ஆரம்பித்தார்.

சபரி கூடையிலிருந்த பழங்கள் ஒவ்வொன்றாகச் சுவைத்துச் சுவைத்துக் கொடுத்தாள். ராமரும் லக்ஷ்மணரும் அவைகளை மிகவும் பிரீதியுடன் வாங்கிச் சாப்பிட்டனர். அதில் அவர்களுக்கு எச்சில் தோஷமே தெரியவில்லை. சூதுவாது தெரியாத கபடமற்ற அறியாப் பருவத்தில், பல் முளைக்காத குழந்தைகளுக்கு எச்சில் தோஷமே கிடையாது என்பார்கள். அதுபோல் தெள்ளத் தெளிந்த நிர்மலமான ஸ்நேகப் பிரவாகத்தில் சபரியின் எச்சில் தோஷமும் அலம்பப்பட்டு விட்டதோ?

ஒரு கூடைப் பழம் முழுவதையும் ஒழித்து விட்டாள். அவற்றில் ஒன்றிரண்டு காயாகவும் அழுகியும் இருந்தன. ஆனால் அவை தவிர மற்றவை தேன்போல் சுவையுடன் இருந்தன. அடுத்த கூடையைத் தூக்க முடியாமல் தூக்கி வந்தாள் சபரி.

"அப்பா ராமா! இதோ பார்த்தாயா? இதுதான் சஞ்சீவிப் பழம். இதைச் சாப்பிட்டால நிறைய பலம் உண்டாகும். இந்தா, லக்ஷ்மணா! நீயும் சாப்பிடு!"

"அம்மா, இப்படி யெல்லாம் சொல்லிச் சொல்லி எங்கள் வயிற்றை நிரப்பப் பார்க்கிறீர்களே!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் ராமர்.

"இல்லையடா குழந்தை! இந்தப் பழத்தினுடைய மகிமையே இதுதான்" என்று கூறிய சபரி, மேலும் இரண்டு பழங்களை ராமருடைய இலையில் வைத்தாள்.

"அப்படியானால் நீங்கள் இதைச் சாப்பிட்டதே இல்லையோ? இவ்வளவு தளர்ந்து விட்டீர்களே!" என்று புன்முறுவல் முகத்தில் தவழ லக்ஷ்மணர் கேட்டார். சபரியிடம் அவருக்குத் தனிப்பட்ட வாஞ்சையும், மரியாதையும் பார்த்த மாத்திரத்திலேயே உண்டாகி விட்டன.

சபரியும் சிரித்துக் கொண்டே, "நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டு விட்டாயடா நீ! நான் இப்பழத்தைச் சாப்பிட்டதனால்தான், இவ்வளவு நாட்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இனி இப் பழத்தைச் சாப்பிட மாட்டேன். உங்கள் இருவரையும் பார்த்த கண்கள் வேறு எதையும் பார்ப்பதற்கு முன்பு, உங்கள் இருவரிடமும் நாடின மனம் இம்மாயப் பிரபஞ்சத்தில் வேறு எப் பொருளிலும் நாடுவதற்கு முன்பு, உங்களிருவருக்கும் உபசரனை செய்த இக் கைகள் என் வயிற்றை நிரப்புவதற்கு முன்பு, உங்கள் இருவரது மதுரமான குரலைக் கேட்ட காதுகள் மற்ற த்வனியைக் கேட்பதற்கு முன்பு, என் உயிர் என்னை விட்டுப் பிரிந்துவிட வேண்டும். என் விருப்பம் அதுதான்!" என்றாள்.

பிறகு உணர்ச்சி வசப்பட்டவளாய்ச் சட்டென்று ரகுநாதனின் பாதங்களில் விழுந்து, "ராமா, இன்று என் வாழ்க்கையில் சுபதினம். எனக்கு ஆசீர்வாதம் கொடு!" என்றாள்.

"அம்மா, உங்களுக்கு மட்டும் அல்ல. எங்களுக்கும் மனத்தில் எப்படிப்பட்ட ஆனந்தம் இருக்கிறது, தெரியுமா? 'ராமா, லக்ஷ்மணா' என்று நீங்கள் ஒவ்வொரு தடவை கூப்பிடும் போதும் சுவையான பழங்களை எங்களுக்குத் தந்து உபசரிக்கும் போதும், நாங்கள் எங்கள் தாயைக் கண்டுவிடுகிறோம்" என்று கூறினார் ராமர் நாத் தழுதழுக்க.

சபரி புன்சிரிப்புடன்; "ராமா! என்னை உன் தாயின் ஸ்தானத்தில் பார்ப்பதை விட, ஜனக புத்திரியின் தாயின் ஸ்தானத்தில் பார்த்துக் கொள். எனக்கு ஒரு மகளுக்குத் தாயாக இருப்பதில் ரொம்பவும் விருப்பம். அந்த சீதையை நான் பார்க்கப் பாக்கியம் செய்யாவிடினும் அவளைப் பற்றி எவ்வளவோ கேட்டிருக்கிறேன். அவளைப் போன்ற பெண்களுக்குத் தாயாகப் பாவிக்கும் பெருமையை எனக்குக் கொடு" என்றாள்.

இதைக் கேட்டதும் ராமரது மதிவதனம் விரஹதாபம் என்னும் மேகத்திரையினால் மூடப்பட்டது. அவர் மௌனமாகப் பெருமூச்சு விட்டார்.

இதைப் பார்த்த லக்ஷ்மணர், பேச்சை வேறு திசையில் மாற்ற நினைத்தார். விரஹாக்னியால் கொளுத்தப்பட்டு ராமர், சீதையைக் காணாமல் செடி கொடி யாவற்றையும் பார்த்துப் பிரலாபித்தது லக்ஷ்மணருக்கு அதற்குள் மறந்து விடுமா? மறுபடியும் அவ்வேதனையில் புழுப்போல் துடிக்க ஆரம்பித்து விடுவாரே! எனவே, "அம்மா, இங்கிருந்து பம்பைக் கரைக்குச் செல்லுவதற்கு வழி காட்ட முடியுமா?" என்றார்.

சபரி எழுந்து குடிசைக்கு வெளியே வந்து கண்களுக்கெட்டிய தூரம் வரை வழிகாட்டினாள். பிறகு ராமரும் லக்ஷ்மணரும் குடிசையிலிருந்து வெளியே வந்தனர். சபரி ஸ்ரீராமருடைய பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ராமரும் லக்ஷ்மணரும் அவளிடம் விடைபெற்று மேலும் நடக்க ஆரம்பித்தனர். சூர்ய சந்திரர்களைப் போல் அவர்கள் போவதைப் பார்த்தபடியே நின்று விட்டாள் சபரி. ஆஜானுபாகுவான சரீரமும், சிவந்த மேனியும், கம்பீர நடையும் அவளைக் கிறுகிறுக்கச் செய்தன. ஐயோ பாவம், என் பெண் சீதாதேவி மட்டும் அருகிலிருந்து விட்டால் இவர்கள் அழகைக் கவியும் வர்ணிக்க முடியாதே!

சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் சபரி மறுபடியும் குடிசையினுள் சென்றாள். பெரிதான மந்தார இலை நான்கைச் சேர்த்துத் தைத்தாள். அதில் பலவிதப் பழங்களை எடுத்து வைத்துக் கட்டித் தன் மடியில் எடுத்துக் கொண்டு ஓடினாள்.

"ஓ ராமா, ஓ லக்ஷ்மணா!"

அவள் கூப்பாடு வனப் பிரதேசம் முழுவதும் எதிரொலித்தது.

ராமரும் லக்ஷ்மணரும் திரும்பிப் பார்த்தனர். சபரி அவர்களிடம் வெகு வேகமாக ஓடி ஓடி வந்து கொண்டிருந்தாள். அருகில் வந்த சபரி, அந்தப் பொட்டலத்தை அவர்கள் கையில் திணித்தாள்.

அதைப் பார்த்த லக்ஷ்மணர், "அம்மா! எங்கள் வயிறு நிறைந்து விட்டதே. இனி இன்று நாங்கள் ஆகாரம் உட்கொள்ள மாட்டோம். இதெல்லாம் எதற்கு?" என்றார்.

"உங்களுக்கு இல்லையடா குழந்தைகளே, இது என் பெண்ணுக்கு. ஸ்ரீமந் நாராயணன் அருளில் அந்த லக்ஷ்மி மறுபடியும் உங்களிடம் வந்து விடுவாள். அப்பொழுது இதை அவளிடம் கொடுத்து 'உன் அம்மா கொடுத்தாள்' என்று சொல்லுங்கள்."

ராமரும் லக்ஷ்மணரும் திகைப்புடன் நின்று விட்டனர். சீதையின் நினைவு வந்ததும் ராமர் பேசச் சக்தியற்று விட்டார். லக்ஷ்மணர்தான் அவளுக்குப் பதில் கூறினார். "அம்மா! மன்னி கிடைப்பதற்குள் இந்தப் பழங்களெல்லாம் உலர்ந்து விடுமே!" என்றார்.

"பாதகமில்லையடா, குழந்தை! உலர்ந்தோ காய்ந்தோ, அழுகியோ இருந்தாலும் பிறந்த வீட்டுப் பொருள்களில் பெண்களுக்கு ரொம்பவும் மதிப்பு உண்டு. நான் அவளுக்குப் பிறந்த வீட்டு உறவு என்று சொல்லிவிடு" என்று கூறின சபரி, மேலும் அங்கு நின்றால், அப்பழங்களை அவர்கள் திருப்பிக் கொடுத்து விடுவார்களோ என்று பயந்து, தன் குடிசைக்குத் திரும்பி விட்டாள்.

சபரியின் வார்த்தைகளைக் கேட்ட ராமருக்குப் பழைய நினைவுகள் சுரீலென்று குத்தி, மனத்தைப் பிடுங்கி எடுத்தன "ஹா, சீதை!" என்று கதறியபடி சாய்ந்து விட்டார். லக்ஷ்மணர் அவரைத் தாங்கிக் கொண்டார்.

சற்றுப் பொறுத்து ராமர் தெளிந்து எழுந்து. "லக்ஷ்மணா! சபரி ஜோஸ்யம் அறிந்தவளோ? பெண்களுக்குப் பிறந்த வீட்டுப் பொருளும் சீரும் உயர்வு என்ற ஒரே வார்த்தையில் கடந்த நிகழ்ச்சியைக் கூறி விட்டாளே! வனவாசத்தின் முதல் வருடம் சீதை, பிறந்த வீட்டுச் சீருக்கு ஏங்கித் தவித்தது நினைவிருக்கிறதா?" என்றார்.

"ஆமாம், அண்ணா! இன்னும் அந்த நினைவு பசுமையாக இருக்கிறது" என்றார் லக்ஷ்மணர். இருவரும் மௌனத்தில் ஆழ்ந்து விட்டனர். பழைய கால நிகழ்ச்சி ஒன்று, படமாக அவர்கள் மனக்கண் முன்பு பளிச்சிட்டது.

* * *

வனவாசத்தின் முதல் வருடம். அண்ணனும் மன்னியும் தங்கியிருக்க, லக்ஷ்மணர் அழகாகப் பர்ணசாலை அமைத்திருந்தார். எங்கிருந்துதான் இக்கலையைக் கற்றாரோ, எப்பொழுதுதான் தேர்ச்சி பெற்றாரோ!

ராமரும் சீதையும் அதில் உல்லாசமாகப் பொழுதைக்



கழித்துக் கொண்டிருந்தனர். ராஜ்ய சம்பந்தமான யோசனைகள் இல்லை. குடும்ப விசாரம் இல்லை. அருகில், ஏவலைத் தலைமேல் தாங்கிச் செய்யக் காத்திருக்கும் ஏவலாளியாக லக்ஷ்மணர், எப்பொழுதும் வில் ஏந்தித் தயாராக நின்று கொண்டிருந்தார்.

செந்தாமரை முகத்தை யொத்த சீதையை, வண்டு ரீங்காரமிட்டுச் சுற்றுவது போல், இனிக்க இனிக்கப் பேசி ராமர் சுற்றி வந்து கொண்டிருந்தார். வேடிக்கை விளையாட்டுக் களில் இருவரும் தங்களை மறந்திருந்தனர்.

"கக்கூ... கக்கூ..."

மைதிலி திரும்பிப் பார்த்தாள். புதுமணம் புரிந்த பெண், அப்பொழுதுதான் கர்ப்பம் தரித்து முகத்தில் பெருமை ஜொலிக்க நிற்பது போல் அருகிலிருந்த சண்பக மரமொன்று மொட்டுக்களைத் தாங்கி நின்று கொண்டிருந்தது! அதில் ஒரு குயில் கூவிக் கொண்டிருந்தது.

சீதாதேவியும் சிரித்துக் கொண்டே விளையாட்டாகக் 'கக்கூ..' என்று குரல் கொடுத்தாள். குயில் அவளுக்குப் பதில் கூறியது.

உடனே அருகிலிருந்த ஸ்ரீராமர் "சரிதான், நீ இதுபோல் பதில் கொடுத்தால், அக்குயில், இனிய குரலுடைய உன் சத்தத்தைக் கேட்டுத் 'தன் நாயகி வந்து விட்டாள்' என்று களிக்க ஆரம்பித்து ஏமாந்து விடும். குயிலினுமினிய உன் குரலினால் அதற்குப் பதில் கொடுக்காதே" என்றார்.

இதற்குள் மற்றொரு குயில் ஓடி வந்து தன் நாயகனின் அருகில் அமர்ந்தது.


"அதோ பார்த்தீர்களா, அதன் நாயகியும் வந்து விட்டது. இனி இரண்டுக்கும் கொண்டாட்டம் தான்" என்றாள் வைதேகி.


"நம்மைவிட அவற்றுக்குக் கொண்டாட்டம் இருந்துவிடப் போகிறதா? சீதை! நான் வனத்துக்கு வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாகப் போய் விட்டது. மற்ற விஷயங்களும், விசாரங்களும் குறுக்கிடாமல் உன் சந்திர முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து விட்டது. உன் முகமே கருணை சமுத்திரம்; செவ்விதழ்களுடன் கூடிய உன் வாய் அதிலுள்ள பவழம்; பற்களோ முத்துக்கள்; ஊர்மிள பாவத்துடன்...." என்று ராமர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சீதை சட்டென்று தன் பங்கஜ போன்ற கைகளால் அவர் வாயைப் பொத்தி, "இன்று என்ன, கவிதை அரங்கேற்றம் நடைபெறுகிறதா? ஏதேதோ சொல்லிக் கொண்டு போகிறீர்களே?" என்றாள்.

இதற்குள் லக்ஷ்மணர் கட்டு விறகுடன் அவர்கள் இருக்குமிடத்துக்கு வந்தார்.

அவரைப் பார்த்த ராமர் "லக்ஷ்மணா, என்ன இது? தினத்தைவிட அதிகமாக இன்று விறகு இருக்கிறதே? ஏதாவது விருந்தா?" என்று கேட்டார்.

"ஆமாம் அண்ணா! விருந்துதான். நாளை பொங்கல் திருநாள் இல்லையா?" என்றார் லக்ஷ்மணர். அவருக்குப் பண்டிகை பருவம்





பிரசித்திபெற்ற வாசனைத் திரவிய உற்பத்தியாளரும் கும்பகோணம் டி. எஸ். ஆர். அண்டு கம்பெனியின் உரிமையாளருமான ஸ்ரீ டி.எஸ். ராஜகோபால ஐயங்கார் அவர்களின் மாப்பிள்ளை டாக்டர் கே. எஸ். வரதன் மருந்து ஆராய்ச்சி முறைகளில் விசேஷப் பயிற்சி பெறுவதற்காக ஜெர்மனிக்குச் சென்று இரண்டரை ஆண்டுகள் இருந்துவிட்டு சென்ற மாதம் இந்தியா திரும்பினார். அவருக்குத் திருச்சி விமான நிலையத்தில் குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஒன்றும் மறக்காது. வேண்டிய பொருள்களை முன்கூட்டியே சேர்த்து விடுவார்.

"அடேடே! நாளைக்குப் பொங்கல் திருநாளா? மறந்தே போய் விட்டேனே! புதுப் பானைகூட வாங்குவார்களே நகரத்தில் இருந்தால்!" என்றார் ராமர் சிரித்தபடி.

சட்டென்று சீதையின் முகத்தில் ஒரு வருத்தம் பரவியது. அவள் ஒன்றுமே பதில் கூறாமல் ஒரு மரத்தை நோக்கியபடி, சிலைபோல் உட்கார்ந்து விட்டாள். ராமர் ஓரக் கண்ணால் அவள் நிலையைக் கவனித்தார். 'நகரத்தில் இருந்தால் ஆனந்தமாக இருக்குமே என்று ஏங்குகிறாள் போலும்!' என்று நினைத்தார் ராமர். அதனால் அவர் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை.

லக்ஷ்மணர் அவள் வருத்தத்தைக் கவனியாமல், "மன்னி! நாளை விடியற்காலை ஸ்நானம் செய்து விருந்து தயாரிப்பதில் நானும் அண்ணனும் உங்களுக்கு உதவி செய்து விடுகிறோம்" என்றார்.

சீதை ஒன்றும் பதில் கூறாமல் 'சூள்' கொட்டினாள். அப்பொழுதுதான் அவள் வருத்தத்துடன் இருப்பதை லக்ஷ்மணர் கவனித்தார். மெதுவாக, "மன்னி! தங்கள் முகம் வாட்டம் அடைந்திருப்பதைப் போல் காண்கிறதே! மனத்தில் என்ன குறையென்று கூறுங்கள். அதைப் போக்கி விடுகிறேன்!" என்றார் லக்ஷ்மணர்.

உடனே ராமர், "லக்ஷ்மணா! இப்பண்டிகை நாட்களில், அயோத்தியில் இருந்தால் ஆனந்தமாகக் கொண்டாடலாம் என்ற எண்ணம் தோன்றுவது சகஜம்தானே? அந்த எண்ணம் வருத்தத்தைக் கொடுக்கத்தானே செய்யும்? பாவம், நீங்கள் இருவரும் என் காரணத்தால் ஒன்றையும் அனுபவிக்க முடியவில்லை" என்று கூறினார்.

சீதைக்குச் சட்டென்று கோபம் வந்தது. "போதும், அம்மாதிரி எண்ணத்தை விடுங்கள். பண்டிகை தினத்தன்று பெண்ணைப் பிறந்தவர்களுக்கு என்ன நினைவு தோன்றும்? யோசித்துப் பாருங்கள். பிறகு பேசுங்கள்" என்று கூறிவிட்டு அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் அவள் கூறியதன் பொருளே விளங்கவில்லை. பெண்ணைப் பிறந்தவர்களுக்குத் தானே அதன் பொருள் விளங்கும்?

சற்றுப் பொறுத்து லக்ஷ்மணர் "மன்னி! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று திகைப்புடன் கேட்டார்.

"லக்ஷ்மணா! உங்கள் அண்ணா சொல்வது போல் நான் அயோத்தியில் இருக்க விரும்பவில்லை; ஆடம்பரமாகக் கொண்டாடவும் விரும்பவில்லை. ஆனால் இத்தினத்தன்று ஒரே ஒரு ஏக்கம்தான். இந்த நன்னாளில் பிறந்த வீட்டுச் சீராக ஒரு பூ வந்தாலும் பெண்கள் மனம் நிரம்பிவிடும். இவ் வனவாசத்தில் எனக்கு அந்தப் பாக்கியமில்லையே!" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினாள் சீதை.

சகோதரர்கள் இருவரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு விட்டனர். ஆமாம், பிறந்த வீட்டுப் பொருளிலும், சீரிலும் பெண்கள் எவ்வளவு மதிப்பு வைப்பார்கள் என்று அப்பொழுதுதான் அவர்களுக்கு விளங்கியது.

வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த லக்ஷ்மணர், சட்டென்று ஏதோ ஒரு எண்ணம் தோன்றியவர்போல், "மன்னி! எங்களுடைய தாய் தந்தை உங்களுக்கு என்ன உறவு?" என்று கேட்டார்.

"இதென்ன கேள்வி? எனக்கும் அவர்கள் பெற்றோர்கள்தான்!" என்றாள் சீதை.

"அப்படியானால் நான் உங்களுக்கு என்ன உறவு?" என்று வினவினார் லக்ஷ்மணர்.

"இதுகூடத் தெரியவில்லையா உனக்கு? மைத்துனர்!"

"அது எப்படி? எங்கள் பெற்றோர் உங்கள் பெற்றோர் என்றால் நாங்கள் அண்ணாவைத் தவிர உங்கள் சகோதரர்கள்தானே? பிறந்த வீடு என்பது சகோதரன் வீடுதானே? அதனால் நாளைக் காலையில் உங்கள் சொந்த சகோதர பாவத்தில் நான் இருந்துகொண்டு காயும், கனியும், பூவுமாக உங்களுக்குச் சீர் கொண்டு வந்து விடுகிறேன். சகோதரனுக்கு உயர்ந்த விருந்து அளித்து, மனக்களிப்பு அடைந்து விடுவீர்களல்லவா?" — லக்ஷ்மணர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

"சபாஷ்! சரியான யோசனைதான். என் பிரிய நாயகி இனி மனம் வருந்தக் காரணமே இல்லை" என்றார் ராமர்.

ஆனால் சீதைக்கு இதெல்லாம் ருசிக்கவில்லை. ஒப்புக்காகப் புன்முறுவல் செய்தாள். "இப்படியாவது நினைத்து மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

மறுநாள் தைப் பொங்கல். சீதை பர்ண சாலையைத் துப்புரவாக மெழுகி, பளிச்சென்று வெண் படிகப் பொடியால் முத்து முத்தாகக் கோலமிட்டுச் செம்மண் பூசி இருந்தாள். நிலைப்படிக்கு மஞ்சள் பூசிக் குங்குமம் வைத்திருந்தாள். காலையிலேயே ஸ்நானம் செய்துவிட்டுச் செம்பஞ்சு போன்ற உடலில் மஞ்சள் பூச்சு மிளிர நான்கு புறமும் ஒளியை வாரி இறைக்க விட்டு, ஓடி ஓடிக் காரியம் செய்து கொண்டிருந்தாள்.

லக்ஷ்மணர் தேடித் திரிந்து எங்கிருந்தோ சுமக்க முடியாமல் சுமந்து "சீர் வரிசைகள்" கொண்டு வந்து விட்டார். புத்தம் புதுப் பாலை, பரங்கி, பூசணி, அவரை, வாழை என்று காய்களும், ரஸ்தாளி, மாதுளை, சாத்துக்குடி என்று பழ வகைகளும், மறக்காமல் கரும்பு மஞ்சளும் எடுத்து வந்து விட்டார். வனத்தில் பூத்த ரோஜா சுகந்தத்தை வாரி வீசிக் கொண்டிருந்தது.

பரந்தாமன் இவ்விருவர்களுடைய வேலைகளைப் பார்த்துத் தம்மை மறந்தவராய் நின்று கொண்டிருந்தார்.

இவ்வளவு இருந்தும் சீதையின் முகத்தில் பூரண திருப்தி காணப்படவில்லை. ராமரும் இதைக் கவனிக்காமலில்லை.

மூவரும் ஒரு வழியாக எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்த போது குடிசையின் வெளியே ஆள் அரவம் கேட்டது. மூவரும் வெளியே பார்த்தனர். ஒரு கிழவர் நின்று கொண்டிருந்தார்.

ராமரைப் பார்த்ததும் அவர் கை கூப்பி வணங்கி, "ராமா! சீதையும் நீயும் சௌக்கியமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார். அவர் கண்களிலிருந்து அன்புப் பிரவாகம் கரை புரண்டோடியது.

அம் மூவரும் அவரை அறிந்து கொள்ளவில்லை. ஆயினும் ராமர் அவரை உபசரித்து உள்ளே அழைத்துச் சென்றார். குடிக்கத் தீர்த்தம் கொடுத்தார்.

"ராமா! உங்கள் இருவருடைய தரிசனமும் உங்கள் விவாகத்தின்போது அப் பெரும் மஹோத்ஸவத்தின் போதுதான் கிடைத்தது. பிறகு மீண்டும் ஒரு முறை உங்களைத் தரிசித்துக் கண்கள் பெற்ற பயனை அடைய நினைத்த போதுதான், நீங்கள் குரூரமாக வனத்துக்கு அனுப்பப்பட்டதை அறிந்தேன். என் உயிரோ இனி வெகு நாட்கள் தாங்காது. அதற்குள் எப்படியாவது உங்களைத் தரிசிக்க ஓடி வந்து விட்டேன்" என்று கூறினார் கிழவர்.

"உங்களைப் பார்த்ததில் எங்களுக்கும் ஆனந்தம்தான். ஆனால் அயோத்தியில் தங்களைப் பார்த்ததாக எனக்கு நினைவில்லையே! தங்கள் வாசஸ்தலம் எதுவோ?" என்று கேட்டார் ராமர்.

"நான் அயோத்தியில் இருப்பவனில்லை. மஹாத்மா ஜனகருடைய மிதிலை என் இருப்பிடம். அந்தப்புரத்திலேயே வளர்ந்த சீதா தேவியும் என்னைப் பார்த்திருக்க நியாயமில்லை. ஆனால் அவளை எப்பொழுதும் என் பெண்ணாகவே பாவித்து, அவளைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்" என்றார் அவ் வயோதிகர்.

சட்டென்று சீதையின் முகம் மலர்ந்தது. கண்களில் ஒரு பிரகாசம். குதூகலத்துடன் அக் கிழவரைப் பார்த்து, "அப்படியானால் இத் தைத் திங்களன்று என் பிறந்த வீட்டிலிருந்து வரும் நீங்கள், உங்கள் பெண்ணுக்குச் சீர் ஒன்றும் கொண்டு வரவில்லையா?" என்று கேட்டே விட்டாள்.

அக் கிழவர் சற்றுத் தலை குனிந்தார். அத் தினத்தின் விசேஷம் அவருக்கு நினைவேயில்லையே! பிறகு முகத்தில் கனிவு பொங்க, "அம்மா, ஜனகபுரியில் ஒருவருக்கும் ஒன்றும் குறைவு கிடையாது. ஆயினும் அப் பொன்னையும் மணியையும் சேரத் தூக்கி வர என் உடம்பில் சக்தி யில்லையே! அதனால் இதோ இந்த மஞ்சளையும், புஷ்பத்தையும்தான் காணிக்கையாகக் கொண்டு வந்தேன். இதைப் பெற்று நீ தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டும். நான் வேறு என்ன செய்யவோ, சொல்லவோ முடியும்?" என்றார் முதியவர் தயக்கத்துடன் நாத் தழுதழுக்க.

பிறகு சீதையின் கையில் இரண்டு வாடின வெற்றிலை, வாடின பூ, மஞ்சள் ஆகியவற்றைக் கொடுத்தார்.

சீதையின் ஆனந்தம் கரை புரண்டோடியது. அவள் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தோன்றியது. மஞ்சளை எடுத்து நெற்றியில் கீறிக் கொண்டாள். இனி அவள் உள்ளத்தில் குறைவு இல்லை.

பிறகு அப் பெரியவரை நமஸ்கரித்து, "நீங்கள் கொண்டு வந்தவை பெண்களுக்குச் சிறந்த ஆபரணமாயிற்றே! இப் பரிசுகளை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். இப் பொருள்கள்தான் என்னை என்றென்றும் உலகத்தில் வாழ வைக்கும்" என்றாள். பிறகு லக்ஷ்மணரைப் பார்த்து, "லக்ஷ்மணா! இனி இப்பண்டிகை நிறைந்துவிடும். எனக்குப் பிறந்த வீட்டுச் சீர் கிடைத்து விட்டது" என்றாள் சீதை குதூகலத்தோடு.


ஓடி ஓடி அப்பிறந்த வீட்டு விருந்தினருக்கு விருந்திட்டாள். தானும் சாப்பிட்டு, மறக்காமல் கிழவர் கொடுத்த வாடின வெற்றிலையைப் போட்டுக் கொண்டாள்.

*   *   *

அன்று அப்பிறந்த வீட்டுச் சீரில் ஆனந்தித்து இன்பமாகக் காலம் கழித்த சீதை, இன்று எங்கு திண்டாடுகிறாளோ என்று நினைத்ததும் ராமரும் லக்ஷ்மணரும் துடிதுடித்துச் சோகம் தாங்காமல் கண்ணீர் விட்டனர்.

"லக்ஷ்மணா! அன்று அவ்வாடின பூவுக்கே ஆனந்தம் எய்திய சீதை, இன்று சபரியின் அன்பில் தன்னை மறந்திருப்பாளே! இக் கனிகளைக் கொடுக்கவாவது நான் அவளைக் காண்பேனா? ஐயோ! அவள் எங்கு தவிக்கிறாளோ?" என்று புலம்பினார் ராமர். அவரைத் தேற்ற வழி தெரியாது லக்ஷ்மணர், கண்ணீர் வடித்து அவரை அணைத்தபடி உட்கார்ந்து விட்டார்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publications Private Limited.
Managing Editor: T. Sadasivam.



விளம்பரம் செய்யப்படுகின்ற பொருள்களுக்கு விலை அதிகம் கொடுக்கப்படவேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படலாம்,
விளம்பரம் செய்யப்படுவதால் விலை அதிகரிக்க வேண்டும் என்றுங்கூட அவர்கள் எண்ணலாம். ஆனால் அது உண்மையல்ல. உண்மையில் விளம்பரம் செய்யப்பட்ட பொருள்கள் யாவும், அநேகமாக, விலை மலிவு தான். விளம்பரம் செய்யப்படுவதால் பொருள்களை நாடி வருகிறார்கள் மக்கள். நாடிவரும் பொருள்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உற்பத்தியாளர்கள் ஏராளமாக பொருள் தயாரிப்பில், ஈடுபட்டு தயாரிப்புச் செலவில் சிக்கனம் செய்து விலைகளைக் குறைந்த அளவில் நிறுத்தமுடிகிறது.

உதாரணமாக உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை ஏராளமாக வாங்குவதால் அவைகளை குறைந்த விலையில் வாங்க இயலுகிறது. விளம்பரம் செய்வதன் மூலம் பொருள்களின் தேவை அதிகரிக்கிறது. இத்தேவைதான் தொழிற்சாலைகளை ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை செய்ய உதவுகின்றது.

ஆதலால்தான் பொருள் உற்பத்தியில் நஷ்டமோ அல்லது உற்பத்தியில் குறைவோ ஏற்படுவதில்லை.

மேற்கூறியவைகள் யாவும் விளம்பரத்தின் மூலம் ஏற்படும் அனுகூலங்களே. பணச் சேமிப்பு ஒருபுறமிருக்க விலைகளில் மாறுதல்கள் ஏற்படாமல் இருக்கவும் உதவுகிறது. இந்தச் சேமிப்பு சிக்கனத்திற்கு பெரிதும் பயன்படுகிறது.

சிறந்த விளம்பரம் பயனளிக்கிறது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

